No.

# JEEVA NAGARATHINAM

# ஜீவநாகரத்தினம்.

பதிப்பாள

A. L. அருமூர்த்தி செட்டியார்,

பெரியகுளம், மதுரை ஜில்லா.

194

[காப்பிரைட்] ரூ. 1.

776 334

உ

# JEEVA NAGARATHINAM

# ஜீவ நாகரத்தினம்

மதுரை

பெரியகுளம்,

**A. L. அருமூர்த்தி செட்டியார்,**

புரோப்ரைட்டர்:

**தனபாக்கிய லக்ஷிமி விலாஸ் ரைஸ் & ஆயில் மில்,**

தேனி S. I. R. மதுரை ஜில்லா.

உதவி பதிப்பாளர்:

**A. L. பழனிச்சாமி செட்டியார்,**

பழைய இரும்பு வியாபாரம், பெரியகுளம், மதுரை ஜில்லா.

மதுரை, ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸில்

அச்சிடப்பெற்றது.

1941

காப்பிரைட்]

[விலை ரூ. 1


மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

ஆழிசூழ் இவ்வுலகத்தில், பகுத்தறிவுள்ள மானிடர்களாகிய நாம் கொண்ட ஜென்மத்தின் வாழ்நாளில் பலனளிக்குமாறு பலவழிகளிலும் ஈடுபட்டும் கண்டவன் விண்டதில்லை, விண்டவன் கண்டதில்லை-என்ற பழமொழிப் படி நடந்துகொண்டு வருகிறது. ஆனபடியால் மானிடராய்ப் பிறந்த நாம் கவலையின்றியும், நோயின்றியும் சுக ஜீவியாய் வாழ்வதற்கு வழிஇதுவே யென்ற நோக்கத்துடன் ஜீவ ரத்தினமெனும் இந்நூலை எழுதியிருக்கிறேன்.

இப்புத்தகத்தை கண்ணுற்ற நண்பர்கள் ஒவ்வொருவரும் இதன்படி நடந்து மென்மேலும் விருத்தியடைந்து, ஒரு வருஷத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறையாவது தங்கள் அன்பார்ந்த தகவலை அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பதிப்பாளர்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 698
நன்கொடை எண்: 698



பதிப்பாளர்:

**A. L. அருமூர்த்தி செட்டியார்.**

# முகவுரை.

—:o:—

உலகத்தில் மானிட வாழ்க்கையில் நிகழ்ந்தன, நிகழ்ந்து கொண்டிருப்பன, நிகழப்போவனவாகிய மூன்று அம்சங்களிலும் விதியின் பயனை தன் மதியால் விளக்கிக்கொள்ளும் தன்மையும், ஒவ்வொரு குடும்பங்களிலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டம், இன்ப துன்பம், பிறப்பு இறப்பு முதலியவைகளின் விபரங்களும், புவியெங்கும் பரந்துநிற்கும் நல்லது கெட்டது, சமமானது என்பதின் சந்தேகங்களும் இப்புத்தகத்தின் வாயிலாக படிப்பவர் அறிவர்.

கவலை யென்பது மானிடர்களுக்கே அமைந்துள்ளது. அதனால் ஒருவன் தனது வாழ்க்கையில் முன்னேற வழியின்றி தட்டுத் தடுமாறி மனமுடைந்து இறுதிக்காலம் வரை துக்கத்தையே குடிகொள்கிறான். இவையெல்லாம் அவரவர்கள் உற்பவித்த நேரங்களை அனுசரித்தே நடக்கிறதென்பதும் இப்புத்தகத்தில் விரிவாக உரைக்கப்பட்டிருக்கிறது.

> எத்தனைதான் செல்வத் தியல்போ டிருந்தாலும்
> புத்திரனில்லா வாழ்வு போசனமு நஞ்சாகும்,
> அற்பராம் நூறுபிள்ளையானாலும் பெற்றுமென்ன
> சற்புத்திரனொன்றுற் றாலேமுறை யெல்லாம் விளங்கும்—

தன்மைபோல் இக்கால நிர்ணயத்தில் சொல்லியபடி சற்புத்திரர்கள் உற்பத்தியும், புத்திரப்பேறில்லாதவர்களுக்கு புத்திர சந்தானமுண்டாகி செல்வந்தர்களாய் ஜீவித்திருக்க கையாள வேண்டியன இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது.

பால்ய விவாஹத்தினால் ஏற்படும் கெடுதிகளும், நோயின்றி வாழ்வதும், விவசாயம், தொழில், வியாபாரம்

செய்யும் விதிகளும், உலகத்தில் அடிமை நீக்கி கவலையின்றி லகுவாக ஜீவனம் செய்யும் வழிகளும், இத்துடன் ஒவ்வொரு ஜீவராசியின் உற்பத்தியும் அதன் குணங்களும் செய்கையும், குடியினால் உண்டாகும் துன்பங்களும் இந்நூலை வாசிப்பதின் மூலம் உணரலாம்.

இங்கு, லோகோபகாரமாக மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத நல்லொழுக்கத்தைப் போதித்து ஞானமடையச் செய்யும் இல்வாழ்க்கையின் மர்மங்கள் தனக்குத் தானே தோன்றி, இக்கால நிர்ணயத்தில் சொல்லியபடி ஒரு மனிதன் நடந்தால் அன்றே அதன் பலனைப் பெற்று உலகத்தில் சகல புவன போகங்களையும் அனுபவித்தும் பாவச் செயல்களை நீக்கி புண்ணியச் செயல்களை மேற்கொண்டு இகபர போற்றினை எளிதில் அடைவதற்கு இதுவே தகுந்த நூலாகும்.

விவாஹ காலங்களில் மணமகனுக்கும் மணமகளுக்கும் சீதனமாக இப்புதிய தமிழ் நூலைக்கொடுத்து தம்பதிகள் இதன்படி நடந்து சற்புத்திரர்களைப் பெற்று செல்வந்தர்களாகி சந்தோஷமாக வாழவேண்டுகிறேன்.

நன்மையைச் சார்ந்தும், தீமையை விலக்கியும் விரைந்து பதிப்பிட்ட இப்பெரும் நூலில் யாதெனும் பிழையுளதேல் அறிவுடை உலகம் அவற்றைப் பாராட்டாது பொறுக்க வேண்டுகிறேன். இந்நூல் இறைவன் அருளேபோன்று உலகெங்கும் பரவி பாசவிருளைப் போக்கி பதிஞானம் தருமாறு ஆண்டவன் இருதாளைப் பல்காலும் பரவுகின்றேன்.

**A. L. P. சாமி,**
உதவி பதிப்பாளர், பெரியகுளம்.

---

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# பொருளடக்கம்


| அத்தியாயம். | விபரம். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | கதையின் வரலாறு | | | |
| | நாகப்பன், நாகம்மாள் | ... | .... | 1 |
| 2. | எல்லாம் கடவுள் செயல் | .... | .... | 15 |
| 3. | உலக இயல்பு | ... | ... | 30 |
| 4. | அநுபோகப் பலன் | .... | ... | 35 |
| 5. | கால நிர்ணயப் பலன் | .... | ... | 58 |
| 6. | சற்புத்திரர்கள் உற்பத்தி | ... | ... | 72 |
| 7. | முற்காலமும், தற்காலமும் | .... | ... | 81 |
| | நல்லாரைக் காணல் | ... | ... | 102 |
| | குடியினுல் விளையும் கேடு | ... | ... | 115 |
| | நல்லது பொல்லது | ... | .... | 121 |
| | பழக்க வழக்கங்கள் | ... | ... | 123 |
| | ஞான மார்க்கம் | .... | ... | 126 |

உ

ஓம் சிவாய நமஹ:

அவ்லை
க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

# ஜீவநாகரத்தினம்

திருமகளனுக் கிரகத்தாற் செய்தவஞ் செய்துமுன்னாள்
கருணைசோதி மூலக் கடவுளையடிபணிந்து
தருவெனுஞ் ஜீவ நாகரத்தினத்தைத் தவமுளோர்க்கருளிச்செய்த
குரு அறுமூர்த்தி தன்னூலைக் கூறக்கணேசன் காப்பே.

வளர்கிரவுஞ் சவுகிரிகள் துளைகள்பட்டுருக வாரிதிசுவர
எழில்பெறுவேலும் மயிலும் துணையெனத்தினமும் நினைப்பவர்
—நெஞ்சம்
செழித்திடும் ஜீவநாகரத்தினம் சீருயர் சரிதையைக் கேட்டுக்
களிப்புறக் குமர குருபரன் செம்பொற் கழலினைக் கர்ப்பணமாமே.

## அத்தியாயம் 1.

### கதையின் வரலாறு.

## நாகப்பன், நாகம்மாள்.

நீர்வளம் நிலவளம் மலைவளம் பொருந்திய உத்தமபுரம் என்ற ஓர் ஊரின் நடுவில் ஒரு லிங்கம் உண்டு. அந்த லிங்கத்தை ஒரு நாக சர்ப்பம் லிங்கத்தின் மேல் சூரியனுடைய ஒளிவுபடாமல் தன் படத்தை விரித்தும், இராக்காலங்களில் தனக்கு வேண்டிய ஆகாரத்தை அருந்தி வந்து தன் உடல் பூராவையும் லிங்கத்தின்மேல் சுற்றி நித்திரை செய்துகொண்டு வந்தது. சிலகாலத்திற்குப் பின் அவ்வூரார்கள் கூடி அந்த லிங்கத்துக்கு ஒன்பது வாசல் வைத்து கோவில் ஒன்று கட்டி அதற்கு ஆறுகாலப் பூஜையும் ஒழுங்காக நடத்தி வந்தார்கள்.

ஆதியிலிருந்து அந்த லிங்கத்தை சூரியன் ஒளி படாமலும், இராக் காலங்களில் அதைச்சுற்றி நித்திரை செய்து கொண்டு வந்ததுமான அந்த நாகப் பாம்பு மனிதர்கள் அரவம் கேட்டவுடன் அந்த லிங்கத்தைவிட்டு விலகி, காட்டிற் சென்று வாசம் செய்து கொண்டிருந்தது. அந்த நாகப் பாம்புக்கு வயது ஆக ஆக உடல் குறுகி இறக்கை முளைத்து வாயில் நாகரத்தினம் உண்டாயிற்று. மாதம் ஒருதடவை இரவு 11 மணிக்குமேல் அந்த லிங்கம் இருக்கும் இடம் சென்று லிங்கத்தின் மேல் தன்னிடமிருக்கும் நாகரத்தினத்தை வைத்து சுமார் ஒரு மணி நேரம் இருந்து மறுபடியும் அந்த ரத்தினத்தை எடுத்துக்கொண்டு தன் இருப்பிடம் வந்து சேறும்.

அந்த நாகப் பாம்பானது மேற்படி லிங்கத்தின்மேல் வழக்கம் போல் இரத்தினத்தை வைத்தவுடன் அந்த ஒன்பது வாசல் வழியாகவும் மேற்படி ரத்தினத்தின் பிரகாசமானது அவ்வூர் பூருவும் பரவி அவ்வூருக்கே ஓர்விதமான குதூகலம் ஏற்பட்டு, ஊரிலுள்ள ஜனங்கள் பூருவும் கோவிலைச் சுற்றிவந்து நாகப்பா, நாகப்பா என்று ஒளி மறையும் வரையிலும் ஆனந்தம் கொண்டாடி, ஒளி மறைந்தவுடன் சந்தோஷத்துடன் அவரவரில்லம் போய்ச் சேருவார்கள்.

அந்த ரத்தினத்தைக் கண்ட நாள்முதல் அந்த லிங்கத்திற்கு நாகலிங்கம் என்று நாமதேயம் ஏற்படுத்தி தனக்கு ஜெனிக்கும் குழந்தைகளுக்கும் நாகப்பா, நாகம்மா என்று நாமமிட்டு, அவ்வூர் பூருவும் மேற்கண்ட நாமமே பரவி விருத்தி அடைந்துகொண்டிருந்தது.

அந்த உத்தமபுரத்தில் மாதம் ஒரு தடவை நாகரத்தினத்தின் ஒளிவு பார்த்தவுடன், அதிபால்ய சிசு முதல்

முதிர்மை அடைந்தவர்கள் எல்லோரும் அன்று ஆனந்தத்தின் பேரில் நாகப்பா நாகப்பா, என்ற சப்தம் தெய்வலோகம் வரையில் பரவி, அவ்விடம் வாசம் செய்கின்ற பரம புருஷனுகிய கடவுளுக்குத் தோற்றப்பட, அவர் திருவுள்ளம் சந்தோஷமாகி, உத்தமபுரத்தில் மாதம் மும்மாரி மழை பெய்யவும், மண்ணைத் தொட்டாலும் பொன்னுகும்படியும், அவ்வூர் ஜனங்களுக்கு எவ்வளவு சௌகர்யம் செய்யவேண்டுமோ அவ்வளவும் அவர் கிருபையால் அவ்விடம் உண்டாகி, உத்தமபுரம் என்ற நாமதேயத்துக்குத் தக்கவாறு அவ்விடம் பிறக்கும் குழைந்தைகள் ஒவ்வொன்றும் தெய்வபக்தி உள்ளவர்களாயும், நன்னடக்கை, தர்ம சிந்தனையுள்ளவர்களாயும், பாபம் என்பதை அறியாதவர்களாயும், ஸ்திரீகள் கற்புக்கரசியர்களாயும், தர்ம சிந்தனையுடையவர்களாயும் புருஷர்கள் தன் தாரம் தவிர பிறர்தாரம் இச்சிக்காத தர்மவந்தர்களாயும் வாசம் செய்துகொண்டு வந்தார்கள். அவ்விதம் வாசம் செய்துவருகிற அவ்வூர் வேடுவ ஜாதியில் பிறந்த நாகப்பா என்ற வேடுவனுக்கும் நாகம்மாள் என்ற பெண்ணுக்கும் திருமணமாகி 10 வருஷங்களாகியும் புத்திர சந்தானமற்று தம்பதிகள் இருவரும் மிக விசனமடைந்து கொண்டிருந்தார்கள்.

நாகம்மாள் என்ற பெண் அக்கம் பக்கமுள்ளவர்கள் ஆணுக்கு ஆணும், பெண்ணுக்கு பெண்ணும் பெற்று வளர்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து, மனதில் கிலேசப்பட்டு ஒருநாள் பூரா்வும் தூக்கம் கொள்ளாமல் நாகேஸ்பரர் கோவிலுக்குப் போய் உன்வாக்குக் கிடைத்தால் மட்டும் தான்! இல்லாதவரையில் நான் இப்போதே உனக்கு என் உயிரை அர்ப்பணம் செய்வேன் என்று காலையில் போய்

உட்கார்ந்த அந்த நாகம்மாள் இரவு 11 மணி வரையிலும் மௌன விரதமாயிருந்தாள். ஊர் சப்தம் ஒடுங்கின உடனே "நாகம்மாள், நாகம்மாள்" என்ற அசரீரி சப்தம் கேட்டது. நாகம்மாள் கவனித்துப் பார்த்தாள் ஒன்றும் தெரியவில்லை. "நாகம்மா, நீ கவலைப் படாதே! நீ உன் புருஷனிடம்போய் அவரை நயப்படுத்தி எனக்கு குழந்தை வேண்டுமென்று கேள். அவன் உனக்குத் தருவான். நான் அதை வளர்க்கத் தான் முடியுமேயொழிய குழந்தை உன் புருஷன்தான் தர வேண்டும். ஆனபடியால் நீ இப்போதே உன் புருஷனிடம் போய் எவ்விதம் கேட்க வேண்டுமோ அதை நீ இங்கிருந்து வீடுபோய்ச் சேருவதற்குள் நான் உன்மனதில் உதிக்கச் செய்கிறேன். நீ போய் வீடு சேர்," என்ற அசரீரி வாக்கு கிடைக்க உடனே நாகம்மாள் தன்வீடு வந்து சேர்ந்து கடவுள் தனக்குச் சொன்ன அசரீரி வாக்கை அர்த்தம் பிரித்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தாள்.

அதுசமயம் நாகப்பன் வந்து சேர்ந்தான். வந்தவுடன் தன் கனவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவர நடத்தியும், தானும் ஆகாராதி காரியங்களை முடித்து தன் கனவனுடன் சயன அறைக்குச் சென்றாள். பள்ளியறையில் நாகம்மாள் வழக்கம்போல் சயனிக்காமல் உட்கார்ந்து கொண்டு தன் நாதனைப் பார்த்து, "நாதா என் மனதில் தோன்றிய சில விருப்பத்தைச் சொல்ல ஆசையுடையவளா யிருக்கிறேன். அதற்குத் தங்களால் தெரிந்தவரையில் எனக்கு விபரமாய்ச்சொல்லவேண்டும்," என்றாள். நாகப்பன் "என் கண்மணி! உன்மனதில் ஒருவிதமான கவலையும் வேண்டாம். உற்றது சொன்னால் அற்றது பொருந்தும் என்ற வாக்கியத்தின்படி உன் மனதிலுள்ளதைச்சொல்," என்றான்.

நாகம்மாள்:— "என் நாதா, தாங்கள் வில் வித்தையில் எவ்வளவோ மேலானவராய் இருந்தும், நான் வளர்க்க, உயிருடன் ஒரு ஆண் அல்லது பெண் புருவாவது தெரித்துக் கொண்டுவந்து கொடுத்தால் நான் அதை வளர்க்கமாட்டேனா! என்றாள்."

நாகப்பன்:— "பெண்ணே, நீ கேட்பது விந்தையிலும் விந்தையாயிருக்கிறது. இந்த நேரம் இதற்குப் பதில்ச் சொல்ல மனம் இடந்தரவில்லை. ஆனாலும் இன்றிரவு யோசனை செய்து உதயத்தில் பகர்கிறேன்," என்று யோசனையில் ஆழ்ந்தான்.

மறுநாள் காலையில் இருபேர்களும் எழுந்து அவரவர்கள் காலைக்கடன்களை முடித்து பசியாற்றி இரவு பேசிக்கொண்ட விஷயத்தை சம்பாஷணை செய்ய ஆரம்பித்தார்கள்.

நாகப்பன்:- "பெண்ணே, இரவு நீ கேட்ட கேள்வியை, என்னால் சரிவர அறிய முடியவில்லை. நீ திரும்பவும் ஒரு தரம் சொல்வாயானால், அதற்கு என் யோசனைக்கு எட்டிய வரையில் பதில் சொல்கிறேன், என்றான்."

நாகம்மாள்:- "என் அன்புள்ள நாதா, நான் இரவு கேட்டது ஒரு ஆண் புரு அல்லது பெண் புருவைத் தாங்கள் எனக்கு, தங்கள் கையிலிருக்கும் வில்லால் தெரித்து உயிருடன் கொடுத்தால் நான் வளர்க்கமாட்டேனா!" என்று தான் கேட்டேன். அதற்கு தங்கள் கையில் சரியான வில் இல்லையா அல்லது அதில் தெரிக்க குண்டு இல்லையா அல்லது வல்லபம் இல்லையா அல்லது வில்லை வளைக்க பலம் இல்லையா அல்லது அந்த குண்டு அந்த புருவின்மேல்ப் போய் பாயாமல் குறி தவறிப்போகிறதா? அதன் விபரங்களை தெளிவாகச் சொல்லுங்கள் என்றாள்."

நாகப்பன்:-“பெண்ணே, நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாய்க் கேள். என்கையில் இருக்கும் வில் மிகவும் பலம் பொருந்தியது. ஆனால் அதில் குண்டு எப்படித் தெரிப்பது என்று என் கண்களுக்குத் தெரியவில்லை. அது எப்படியெனில், ஒரு நல்ல வில்லாளி கையில் வில்லை எடுத்துக் கொண்டு, ஒரு குளக்கரையில் போய் நின்று, அக்குளக்கரையின் மேலுள்ள ஆலமரத்தில் உட்கார்ந்திருக்கும் புருக்களைத் தெரிக்க, அக்குளத்திலுள்ள ஈர மண்ணை எடுத்து, அந்த வில்லில் வைத்து மேலே உட்கார்ந்திருக்கும் புருக்களை தெரித்தால், அந்த ஈர மண் மேலே போவதற்குள் அது சின்னபின்னப்பட்டு அப் புருக்கள் மீது விழுந்தாலும் அது உடனே பறந்து போய் விடுகிறது. அதன் தன்மை எப்படியோ அதேமாதிரி தினம் தினம் உனக்குத்தெரிய நான் எய்தும் அந்தப் புருக்களின் மேல்பட்டும் அது பறந்து, பறந்து போய்விடுகிறது பெண்ணே என்றான்.”

நாகம்மாள்:-“என் நாதா, தாங்கள் சொல்லிவந்த வகைகள் எல்லாம் அறிந்து கொண்டேன். தங்களுக்கும் வேலைக்குப்போக நேரமாகிவிட்டது. தாங்கள் சென்று வந்தவுடன் அதற்குத் தகுந்த பதில்ச் சொல்கிறேனென்றாள்.”

நாகம்மாள் “தன் நாதன் வேலைக்குச் சென்றவுடனே தனியாய் உட்கார்ந்துகொண்டு, நாகேஸ்பரன் கோவிலில் தனக்குக் கிடைத்த அசரீரி வாக்கும், தன் நாதன் இன்று சொன்ன வாக்கியங்களையும் மனதில் நினைத்துக்கொண்டே தன்னைத்தான் அறிந்து, ஓகோ,கடவுள் வாக்கு “உன்நாதன் தவிர என்னால் குழந்தை உண்டாக்க முடியாது” என்றும், “ஆனால் வளர்ப்பது மட்டும் நான்” என்று சொன்னதையும் தன் நாதன் சொன்ன வார்த்தைகளையும் யோசனை செய்து

கொண்டிருந்தாள். சற்று நேரத்திற்குப்பிறகு கண்ணை மூடிக் கொண்டு நல்ல வில்லில் ஈர மண்ணை வைத்துத்தெரித்தால் அந்தப்புரு எப்படி விழும் என்ற எண்ணமும் நினைத்து, ஒரு மனிதன் புருக்கள் வேண்டுமென்ருல் அக்குளக் கரைக்குப்போய் அதிலுள்ள களிமண்ணை எடுத்து அதை உருண்டை வடிவம் செய்து, சூரியவெப்பத்தில் காய வைத்து, அது நன்ருய்க் காய்ந்தவுடன் வில்லை எடுத்து, காய்ந்த மண் உருண்டையை வைத்து, புருக்களைத் தெரித் தால் அவைகள் அடிபட்டு விழுகாமல் இருப்பதற்குக் காரண மில்லை. மேல்க்கண்டபடி நானும் என் நாதனை நாளையே கூட்டிக்கொண்டு அக்குளத்திலுள்ள ஈரமண்ணை எடுத்து கைகளால் பிசைந்து, உருண்டைசெய்து காயவைத்து விட்டு வந்து, 10 நாட்கள் சென்ற பிறகு நாங்கள் இரண்டு பேர் களுமே போய் அந்தக் காய்ந்த உருண்டையை எடுத்து அவர் கைவசம் இருக்கிற வில்லில் வைத்து தெரிக்கச் சொல்லி அந்தப் புரு விழுந்தவுடன் எடுத்துக்கொண்டு வந்து வளர்க்கலாமே என்ற எண்ணம் கொண்டு, நாதன் வரும் நேரத்தைக் கவனித்துக்கொண்டும், ஆகார வசதி களைச், செய்துகொண்டும் எதிர்பார்த்திருந்தாள்.

அன்றிரவு 8 மணி அடித்தது. நாகப்பன் தன்வீடு வந்து சேரவும், நாகம்மாள் தன் புருஷனை அன்போடு உபசரித்து அமரச்செய்து, "என்நாதா தாங்கள் காலையில் சொன்னதி லிருந்தும் எனக்குக் கிடைத்த அசரீரியின் வாக்கின்படியும் என் மனதில் ஓர் உறுதி ஏற்பட்டிருக்கிறது. அதைச் சொல்லுகிறேன். தாங்கள் கவனத்துடன் கேட்டு அது விபரத்தை எனக்கு நன்ருய் விளங்கச் சொல்லவேண்டும்," என்ருள்.

நாகப்பன்:— "என் கண்மணியே! நீ சொல்லக்கூடிய வார்த்தைகளைச் சொல், நல்லது எதென்றும் பொல்லாதது எதென்றும் விபரமாய்ச் சொல்லுகிறேன். அது எப்படி யெனில் ஒரு காட்டில் வசிக்கக்கூடிய அன்னப் பட்சியானது பாலும் நீரையும் கலந்து வைத்தால் பாலைமட்டும் அருந்தி நீரை அந்த பாத்திரத்தில் வைத்து விடுகிறதோ அதே மாதிரி பதில்ச் சொல்லுகிறேன் பெண்ணே, என்ருன்."

நாகம்மாள்:—"என் நாதா, தாங்கள் காலையில் சொன்ன திலிருந்து என் மனம் நேர்மையானது. அதாவது ஒரு மனிதன் புருக்கள் வேண்டுமென்ருல் குளக்கரைக்குப்போய் அக்குளத்திலுள்ள களிமண்ணை எடுத்து நன்ருய்ப் பிசைந்து உருட்டி காயவைத்து, அந்த உருண்டையானது நன்ருய்க் காய்ந்தபின் வில்லில் வைத்து, கண்கள் இமை கூடாமல் பார்த்து, குறிவைத்து புருவைத் தெரித்தால் அந்தப் புரு அடிபட்டு கீழே விழுகுமா, விழுகாதா, என்ருள்."

நாகப்பன்:—"பெண்ணே, நீ சொல்லுகிறபடி களிமண் உருண்டை காய்வாக இருந்தால் நான் ஒவ்வொரு குண்டுக்கும் ஒவ்வொரு புருவைக் கீழே விழச் செய்வேன், என்ருன்."

நாகம்மாள்:- "என் நாதா, அப்படியானல் நாளைக் காலையில் நாம் இருவரும் அந்தக் குளக்கரைக்குப் போய் அந்தக் குளத்திலுள்ள களிமண்ணை எடுத்து நன்ருய்ப் பிசைந்து உருட்டி காயவைத்துவிட்டு வருவோம், என்ருள்."

நாகப்பன்:- "அதற்கு என்ன பெண்ணே, அப்படியே செய்துவிட்டு வருவோம், என்ருன்."

அதன் பிறகு இருவர்களும் இரவு போஜனம் அருந்தித் தாம்பூலம் தரித்து சயன அறைக்குச் சென்று நித்திரை செய்தார்கள். காலையில் சூரியன் உதயமானன். இருபேர்களும் நித்திரையைவிட்டு எழுந்து காலைக்கடன்களை முடித்து பசியாற்றி, பேசிக்கொண்டே குளக்கரைபோய்ச் சேர்ந்து அக்குளக்கரையில் நின்றுகொண்டு கரையின் மேல் ஓங்கி செழிப்புற்று வளர்ந்து படர்ந்திருக்கின்ற ஆலமரத்தின் மேல் உட்கார்ந்திருக்கிற புருக்களைப்பார்த்து, "ஓ புருக்களே! நீங்களிதுவரை என் நாதன் வில்லுக்கு தப்பித் தப்பி ஓடி விட்டீர்கள். இனி என் நாதனல் தெரிக்கச்சொல்லி நீங்கள் கீழே விழுமுன் நான் தாங்கிப் பிடிக்க வழி கண்டுபிடித்து விட்டேன்," என்று சொல்லிக் கொண்டே "நாதா குளத்திற்குள் இறங்கி நல்ல மண்ணை எடுங்கள்," என்றாள்.

நாகப்பன் உடனே அக்குளத்தில் இறங்கி நல்ல மண்ணை எடுத்துக்கொண்டு வந்து இந்தா பெண்ணே என்று மனைவியிடம் கொடுத்தான்.

நாகம்மாள் தன் நாதன் கையில் எடுத்து வந்த களி மண்ணை இரண்டு கையாலும் வாங்கி, அதை நன்றாய்ப் பிசைந்து நெல்லிக்காய் பெருமானமாய் ஒரு உருண்டை வடிவம் செய்து "நாதா இந்த உருண்டை சரியாய்ப் போகுமா" என்று கொடுத்தாள்.

நாகப்பன் மனைவி கொடுத்த மண் உருண்டையைக் கையில் வாங்கி கண்கள் இரண்டிலும் வைத்து, மறுபடியும் அந்தக் களிமண் உருண்டையை தன் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு "இந்த உருண்டை காய்வு ஏற்பட்டால் ஒரு உருண்டைக்கு இரண்டு புருக்கள் வேண்டுமென்றாலும்

அதை ஒரே தடவையில் தெரிக்க எனக்கு சக்தி உண்டாகும் பெண்ணே, என்ருன்.''

நாகம்மாள்:- "என்நாதா, தாங்கள் சொல்லுவது சரியே. ஆனாலும், இதுவரையில் ஒரு புருக்கூட விழக் காணோம். அதற்குள் நீங்கள் இரண்டு புருவுக்குப் போய்விட்டீர்களே! இந்த உருண்டையை எந்த இடத்தில் வைத்தால் காய்வு ஏற்படும் என்ருள்."

நாகப்பன்:- "பெண்ணே, இதோ தெரிகிற மேடான இடத்தில் வைத்தால் அந்த உருண்டை நன்ருய்க் காய்வு ஏற்படும், என்ருன்."

நாகம்மாள்:-"நாதா, தாங்கள் சொல்வது சரியான இடம் தான். அந்த இடத்திலேயே வையுங்கள், என்ருள்."

நாகப்பன்:-"பெண்ணே, அதேஇடத்தில் வைக்கிறேன். நீயும் பார்த்துக்கொள்" என்று சொல்லி கையில் இருந்த களிமண் உருண்டையை அந்த மேடான இடத்தில் வைத்துவிட்டு இருபேர்களும் பேசிக்கொண்டே தன் இல்லம் வந்து சேர்ந்தார்கள்.

நாகம்மாள்:- "என் நாதா, நாம் அந்தக் குளக்கரையில் தாங்கள் களிமண் எடுக்க, நான் அதை உருட்ட, தாங்கள் வாங்கி காயவைத்து நாட்கள் 10 ஆகிறபடியால், அந்த உருண்டை காய்வு ஏற்பட்டிருக்கவேண்டும், என்ருள்."

நாகப்பன்:- "பெண்ணே, நீ சொல்லுகிறபடி அந்தக் களிமண் உருண்டை நன்ருய்க் காய்ந்துதான் இருக்கும். ஆனபடியால் நாளைக் காலையில் இருவரும் போய் அந்த உருண்டையை எடுத்துப் பார்த்து நன்ருய்க் காய்வு ஏற்பட்

டிருந்தால் என் வில்லில் வைத்து உனக்கு எந்தப் புரு வேண்டுமோ அந்தப் புருவை தெரித்துத் தருகிறேன், என்றான்.''

நாகம்மாள்:- ''என் நாதா, அப்படியே செய்வோம் என்றாள்.''

அன்றிரவு கழிந்து காலையில் சூரியன் உதயமானான். இருவர்களும் நித்திரையை விட்டெழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வீட்டில் இருந்த வில்லுடன், இருவர்களும் பேசிக்கொண்டே குளக்கரை போய்ச்சேர்ந் தார்கள்.

நாகப்பன்:-''பெண்ணே, நாம் அன்று உருட்டி வைத்த களிமண் உருண்டை நன்றாய்க் காய்ந்திருக்கிறது. பெண்ணே நீயும் பார்'' என்று கையில் கொடுத்தான்.

நாகம்மாள்:- ''என் நாதா, அன்று இந்த களிமண் என் கையால் மெதுவாய், எவ்வளவோ இலேசாய் உருட்டப்பட் டது. இன்று இந்தக் களிமண்ணை கையால் கீறமுடிய வில்லை. நிறமும் கொஞ்சம் வெளுத்துத் தெரிகிறது. கீழே போட்டாலும் உடையாதுபோல் தெரிகிறது என்றாள்.''

நாகப்பன்:- ''பெண்ணே, நீ சொல்லுவது சரி. அது நன்றாய்க் காய்வு ஏற்பட்டுவிட்டது. என் கையில் கொடு. இதோ என் கையில் இருக்கிற வில்லில் வைத்து உனக்கு எந்தப் புரு வேண்டுமோ அந்தப் புருவைத் தெரித்துத் தருகி றேன், என்றான்.''

நாகம்மாள்:-''என் நாதா, இதோ வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று தன் கையில் இருந்த களிமண் உருண்டையைத் தன் நாதன் கையில் கொடுத்தாள்.

நாகப்பன் களிமண் உருண்டையைத் தன் கையில் வாங்கி, இடது கையால் வில்லைப் பிடித்து, வலது கையால் உருண்டையை வைக்குமிடத்தில் வைத்து, வில்லை சரியாய் இழுத்து, கண் இமைக்கொட்டாமல் அந்த ஆலமரத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் புருக்களுக்குக் குறி பார்த்தான். அப்படி மேலே பார்க்கும்போது ஒரு கிளையில் ஆணும் பெண்ணும் இரண்டு புருக்கள் உட்கார்ந்துகொண்டு, அவைகள் பேசும் பாஷையில் பேசிக்கொண்டிருந்தது. பெண்ணே இப்போது நான் சரியாய் குறி வைக்கிறேன். "உனக்கு ஆண் புரு வேண்டுமா, பெண்புரு வேண்டுமா," என்றான்.

நாகம்மாள்:-"என் நாதா, எனக்கு பெண்புருவின்பேரில் ஆசையிருக்கிறது, என்றாள்."

நாகப்பன்:-"பெண்ணே, உனக்கு பெண்புருவும் பின்னால் தெரித்துத் தருகிறேன். இப்போது ஆண்புருவுக்கு குறி வைத்து தெரித்துவிட்டேன், என்றான்."

நாகம்மாள் தன் நாதன் வில்லை கீழேபோடுமுன், மேலே பார்த்துக் கொண்டிருந்தவள் அந்தப்புரு அடிபட்டு கீழே விழுகிறதைப் பார்த்து ஓடிப்போய், அந்தப்புருவை தரையில் விழவிடாமல் தன் முந்தாணியை ஏந்திப்பிடித்து அதைக் கையில் எடுத்து, முத்தமிட்டு, அக்குளத்திலுள்ள தண்ணீரை அதன் வாயில் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி அதன் களைப்பைத் தீர்த்து, "ஓ புருவே, இதுவரையில் நீ என்நாதன் வில்லுக்குத் தப்பித்தப்பி ஓடிவிட்டாய். ஆனாலும் என் சூழ்ச்சியினால் நீ அகப்பட்டுக் கொண்டாய்" என்று சந்தோஷமாய் புருவை கண்களில் வைக்கவும், மார்போடு அணைக்கவும் "என் நாதா, இந்தப் புருவை பாருங்கள். இது என்ன அழகாய் இருக்கிறது. கால்களைப் பாருங்கள், கண்களைப் பாருங்

கள். இதன் முகம் எவ்வளவு அழகாயிருக்கிறது என்று ரெம்ப சந்தோஷத்துடன் தங்கள் கையில் வாங்கிப் பாருங்கள்,'' என்று கொடுத்தாள்.

நாகப்பன் தன் கையில் புறுவை வாங்கி, சந்தோஷத்துடன் கண்களில் வைத்தும், மார்போடு அணைத்தும், முத்தமிட்டும், "பெண்ணே, நான் கொண்டுவருகிறேன். நீ அந்த வில்லை எடுத்துக்கொள். நான் நம்முடைய வீட்டுவரையில் கொண்டுவருகிறேனென்று'' பேசிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தார்கள்.

நாகப்பனும், நாகம்மாளும் அந்தப் புறுவை வீடு கொண்டுவந்து சேர்த்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்க் குதூகலத்துடன் வளர்த்து, 3-ம் மாதம் "நாகப்புறு'' என்று நாமதேயம் சூட்டி, கண்களை கண் இமையானது எப்படிக் கண்களுக்குள் தூசி படாமல் பாதுகாத்துக்கொண்டிருக்கிறதோ, அத்தன்மைபோல் நாகம்மாள் கீழ்பட்டையாகவும், நாகப்பன் மேல்பட்டையாகவும் பாதுகாத்து மனமகிழ்ச்சியுடன் காலம் கழித்தார்கள்.

## வருஷம் மூன்றானது.

நாகம்மாள்:-"என் நாதா, இப்போது நமது புறுவுக்கு வயது 3 ஆகிறது. நான் அன்று ஒருபெண்புறு கேட்டதற்கு தாங்கள் மறுமுறை தெரிக்கும்போது தருவதாகச்சொன்னீர்கள். அதன்படி எனக்கு ஒரு பெண்புறு தெரித்துத் தரவேண்டும் நாதா, என்றாள்.''

நாகப்பன்:-"பெண்ணே, எனக்கும் 6 மாத காலமாய் உனக்கு ஒரு பெண்புறு தெரித்துக் கொண்டுவந்து கொடுக்கலாம் என்ற எண்ணம் என் மனதில் இருக்கிறது.

ஆனாலும், உன் வாக்கு மூலத்திலிருந்து வந்துவிட்டபடியால், நாளைக்காலையிலேயே போய் அன்று செய்தபடி செய்து 10 நாட்கள் கழித்து அந்த உருண்டை காய்வு ஏற்பட்டவுடன் உனக்கு ஒரு பெண்புரு தெரித்துத் தருகிறேன், என்றான்."

நாகம்மாள்:- "சரி நாதா, அதன்படியே செய்வோம் வாருங்கள், ஆகாரம் அருந்தி நித்திரைசெய்வோம், என்றாள்."

அதின்பின் இருவர்களும் நித்திரையில் ஆழ்ந்து காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, பசி அமர்த்தி, முன் கிடைத்த புருவையும் தூக்கிக்கொண்டு அக்குளக் கரைக்குச் சென்று முன்செய்த மாதிரியாக களிமண்ணை எடுத்து உருட்டி காயவைத்துவிட்டு வந்து 10 நாட்கள் சென்று அவ்விடம் போய் முன் தெரித்த மாதிரியே ஒரு பெண் புருவைத் தெரித்து அந்தப் பெண் புருவையும் கொண்டு வந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து 3 மாதம் ஆனவுடன் நாககன்னிப் புரு என்று நாமதேயம் சூட்டி வளர்த்து வந்தார்கள். இருபேர்களும் மேல்கண்டபடி 3 வருஷத்துக்கு ஒருதரம் அக்குளக் கரைக்குச்சென்று முதல் தெரித்த புருவைச் சேர்த்து ஆண் புருக்கள் 3-ம் பெண்புருக்கள் 2-ம், ஆக 5 புருக்களையும் அன்போடு வளர்த்து வந்தார்கள். அந்தப் புருக்களும் சுகமாக வளர்ந்து வந்ததுடன் நாகப்பனுக்கும் மாதம் ரூ. 100 வரும்படியிலிருந்து ஒவ்வொரு புருக்கள் கிடைக்க கிடைக்க 3 வருஷத்திற்கு ஒரு தடவை ரூ. 50 வீதம் மாதம் 1க்கு அதிகமாக லாபம் கிடைத்தது. 5 புருக்கள் கிடைத்தவுடன் மாதம் 1க்கு வரும்படி ரூ. 350 வீதம் லாபம் கிடைத்ததிலிருந்து அந்த ஊருக்கு அவனே ஒரு பெரிய தனவந்தனாய் ஆனான்.

அவர்கள் சுகமாக வளர்ந்து சென்ற 30 வருஷங்களுக்குள் நாகப்பனும், நாகம்மாளும் ஐந்து புருக்களேயும் வளர்த்து, அவைகள் பக்குவ காலத்தில் செய்யவேண்டிய காரியாதிகளேச் செய்துமுடித்து ஒவ்வொருவருக்கும் தனி இடம் கொடுத்து வருகிற காலத்தில் நாகம்மாள் "நாதா எனக்கு ஒரு விதமான எண்ணம் மனதில் தோன்றுகிறது. அதற்கு விபரமான பதில்ச் சொல்ல வேண்டும், என்ருள்."

வாசகர்கள் இதுவரை புரு என்று நாமதேயம் சொல்லியதை குழந்தைகளாகப் பாவிக்க வேண்டும்.

நாகப்பன்:- "பெண்ணே, அதற்கு என்ன சந்தேகம். நீ பார்த்து எதைக் கேட்டாலும் பதில்ச் சொல்லத் தயாருக இருக்கிறேன், என்ருன்."

நாகம்மாள்:- "என் நாதா, என் வயிற்றில் பிறந்த ஐந்து குழந்தைகளுக்கும் குணமானது ஒரே மாதிரி இல்லாமல் ஒவ்வொன்றிற்கும் வேற்றுமைப்பட்டிருப்பதின் காரணம் சொல்ல வேண்டும் என்ருள்."

# அத்தியாயம் 2.

## எல்லாம் கடவுள் செயல்.

நாகப்பன்:— "பெண்ணே, நீ கேட்ட கேள்வியானது நாம் இருபேர்களால் செய்யப்பட்டதல்ல. அது கடவுள் செயலேயொழிய நம்மால் ஒன்றும் ஏற்படவில்லே, என்ருன்."

நாகம்மாள்:- "என் நாதா! ஆனல் கடவுள் ஒருவர் இருக்கிருர். அவர் எப்படிப்பட்டவர். என்ன குணமானவர். அவர்

நிறம் என்ன, அவரை எவ்விடத்தில் போய்ப் பார்க்கலாம். அதன் விஷயத்தை எனக்கு விபரமாய்ச் சொல்லவேண்டும், என்ருள்."

நாகப்பன்:—"பெண்ணே, கடவுளின் குணங்களையும் அவர் செய்யும் நன்மைகளையும் அவர் இருக்கும் இடங்களையும் சொல்லுவதாயிருந்தால் நாம் இருவரும் இருபது தடவை மாறி மாறிப் பிறந்து, இரண்டு பேர்களும் ஒன்று சேர்ந்து அவர் செய்யக் கூடிய காரியங்களைப் பேசிக் கொண்டே இருந்தாலும் அது முடிவடையக் கூடியதில்லை. ஆனல், நீ இப்போது கேட்டதற்கு என்னல் கூடியவரையில் உன் மனம் தேற என் மனதிற்கு எட்டிய வரையில் சொல்கிறேன் கேள், என்ருன்."

"பெண்ணே, கடவுளானவர் 25000 மைல் சுற்றளவுள்ள பூமியையும், பூமிக்கு வெளியே 100000 மைல் சுற்றளவுள்ள சூரியனையும், அதற்கு நடுவில் 5000 மைல் சுற்றளவுள்ள சந்திரனையும், எத்தனையோ கோடி நக்ஷத்திரங்களையும் படைத்து, அவைகள் எல்லாம் பூமிக்கு பார்வை கொடுத்து உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்கு அதன் பிரகாசத்தினல் ஜீவித்திருக்கும்படி செய்து கொண்டும் இருக்கிருர். அந்த ஒளியினல் ஜீவித்து இருக்கக்கூடிய ஜீவ சந்துக்களை சொல்கிறேன் கேள்."

"இந்த உலகமானது தண்ணீரால் $\frac{3}{4}$ பங்கும், தரை அதாவது மேடான இடம் $\frac{1}{4}$ கால்பங்கும் சூழ்ந்திருக்கிறது. அந்த $\frac{1}{4}$ பங்கு தரையில் நம் மானிட வர்க்கத்தில் ஆணும் பெண்ணுமாக எண்ணமுடியாத கோடிக்கணக்கான ஜனங்களையும், ஊர்வன, நகர்வன, பறப்பன, செடி, கொடி, புல் பூண்டு தாவரங்கள், ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, சிங்கம்

முதலிய மிருக ஜாதிகளையும், நீரில் வசிக்கக்கூடிய மீன், தவளை, ஆமை, முத்துச்சிப்பி, நீர்மனிதன், நீர்யானை, நீர் மரம் முதலிய எண்ணிறந்த கோடி ஜீவராசிகளையும் உற்பத்தி செய்து, அவர் ஒவ்வொரு ஜீவராசிகளையும் மனதில் நினைத்துக்கொண்டு, ஒவ்வொரு ஜீவராசிகளிலும் ஒரு செக்கண்ட்டுக்கு ஒருதரம் உடலுக்குள் போயும், அந்த உடலுக்குள்ளிருக்கும் கருவிகள் எல்லாம் சரியாய் வேலைகளைச் செய்து முடிக்கிறதா என்றும் பார்த்துக்கொண்டே இருக்கிறார், என்றான்."

"இன்னும் அவர் செய்துகொண்டிருப்பதையும் கேள். உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் ஜீவித்திருப்பதற்காக, அவர் ஆதிமூலம் என்ற விநாயகக் கடவுளையும், மகாவிஷ்ணுவையும், பிர்மாவையும், அக்கினியையும், வருணனையும், வாயுவையும், முப்பத்துமூன்று கோடி தேவர்களையும் படைத்திருக்கிறார். பெண்ணே மேல்க்கண்ட தேவர்கள் பூராவும் ஒவ்வொரு ஜீவராசிகளிலும் வாசம் செய்கிறார்கள்."

"பெண்ணே, அவர்கள் வாசம் செய்கிற விபரமும் சொல்லுகிறேன் கேள். ஆதிமூலம் என்ற விநாயகக் கடவுள் ஒவ்வொரு ஜீவராசியின் சிரசில் மூளை என்ற நாமதேயத்துடன் இருக்கிறார். மகாவிஷ்ணுவானவர் ஒவ்வொரு ஜீவராசியின் இரண்டு கண்களாயிருக்கிறார். பிர்மாவானவர் ஒவ்வொரு ஜீவராசியின் நெற்றியிலிருக்கிறார். அக்கினி பகவானும், வாய்வு பகவானும், வர்ண பகவானும் ஒவ்வொரு ஜீவராசிகளின் உடலில் இருக்கிறார்கள். முப்பத்திமூன்று கோடி தேவர்களும் நாற்பத்தி எண்ணாயிரம் ரிஷிகளும் ஒவ்வொரு ஜீவராசியின் அவயவங்களின் ரோமத் துவாரம் ஒன்றுக்கு ஒருவர் வீதம் வாசம் செய்கிறார்கள்."

"பெண்ணே இன்னும் சொல்லுகிறேன் கேள். எண்ணிறந்த ஜீவகோடிகளைப் படைத்து, அவைகளெல்லாம் ஒரே மாதிரியாய் இருந்தால் ஜீவித்து இருக்க முடியாது என்று அதற்காக ஜீவராசிகளை நாலுவகையில் பிரித்து, அந்த வகைக்கு நாமதேயம் பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்றும், ஒவ்வொன்றிற்கும் தலைமை கர்த்தாவாக வசிஷ்டர், க்ஷத்திரியர், பராசர், வியாசர் என்று நால்வரை உற்பத்தி செய்து, அந் நால்வரும் இன்னும் உலகத்தில் அவரவர் வேதங்களைச் சீர்திருத்திக் கொண்டே இருக்கிறார்கள்."

இன்னும் சொல்கிறேன் கேள். "ஜாதி நாலாக ஏற்படுத்தி, அந்த நாலு ஜாதியிலும் (64) அறுபத்திநாலு ஜாதிகளாய்ப் பிரித்து அதற்கு அறுபத்தி நான்கு சாஸ்திரங்கள் செய்து, ஒவ்வொரு ஜாதிகளுக்கும் அவரவர்கள் செய்யக் கூடிய தொழில்களைக் கற்பிக்க ஒவ்வொரு ரிஷிகளையும் அதற்குக் குருவாக ஏற்படுத்தி அது வகைகளையும் செவ்வனவே நடத்தி வருகிறார்கள், பெண்ணே."

"மேலும், கடவுளானவர் உலகத்தில் மானிட ஜென்மங்களுக்கு நல்ல அறிவை ஊட்ட எண்ணங்கொண்டு, பகவன் என்பவரையும், ஆதி என்ற பெண்ணையும் உற்பத்திசெய்து அவர்கள் இருவருக்கும் சில வாக்குறுதியை ஏற்படுத்தி, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளைக்கொண்டு உலகத்தில் பல நூல்களைக் கற்பித்தார்."

நாகம்மாள்:- "என் நாதா, தாங்கள் மேலே சொல்லி வந்த விபரம் எல்லாம் தெரிந்துகொண்டேன். பகவன் என்பவருக்கும் ஆதி என்ற பெண்ணுக்கும் என்ன வாக்குத் தத்தம் நடந்தது. அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தது. அது விபரங்களைச் சொல்லவேண்டும்.

நாகப்பன்:—"பெண்ணே அவர்களுக்குள் நடந்த விபரங்களைச் சொல்கிறேன் கேள். பெரும் சாகரர் என்ற ரிஷிக்கும், சந்திரிகா என்ற பெண்ணுக்கும் திருமணம் செய்யப்பட்டு பகவன் என்பவர் பிறந்தார். தவமுனி என்பவர் அருள் மங்கை என்னும் மாதை திருமணம் செய்து ஆதி என்ற பெண்ணைப் பெற்றார்கள். அவ்விருவர்களும் பெற்றவர்களிடமிருந்து வளராமல் பல இடங்களில் அவர்கள் சௌகரியத்திற்குத் தக்கபடி தனித்தனியே வளர்ந்துகொண்டு வரும் நாளில் பகவன் என்றவர் காசி யாத்திரை செல்ல எண்ணங்கொண்டு, வழியேகும்போது மேலூர்ச் சத்திரத்தில் அன்றிரவு தங்கவேண்டி நேர்ந்தது. அந்தச் சத்திரத்தில் மேல்பார்த்துக்கொண்டிருந்த நீதி ஐயனும், ஆதி என்ற பெண்ணும் பகவன் என்ற வழிப்போக்கருக்கு வேண்டிய உதவி செய்தார்கள். அதுசமயம் பகவன் என்றவர் ஆதி என்ற பெண்ணைக் கண்ணோக்க, அது கண்டு நீதியையனும் "இவள் என் மகள்தான். இவள் தங்களிடம் அன்புக் காதல் வைத்தாக்கால் நான் தங்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்," என்றார். அந்த வார்த்தையைக் கேட்ட பகவனும், "தாங்கள் சொல்வது சரி, அதன்படி நடந்து கொள்ள எனக்குச் சம்மதம். ஆனால், நான் இப்போது காசிக்குப்போய் தீர்த்தம் எடுத்து ராமேஸ்வரம் கொண்டு போய்ச் செலுத்தி அதன் பின் வந்து மங்கள விவாஹம் செய்து கொள்கிறேன் என்றார்."

"அதற்கு நீதி ஐயரும் சம்மதப்பட்டு அதன்படியே செய்யுங்கள் என்றார். அதன்மேல் பகவன் காசிக்குப்போய் காசி லிங்கத்தையும் விசாலாக்ஷியம்மனையும் தரிசித்து கங்கா நதியில் தீர்த்தம் கட்டி அதை விட்டுப் புறப்பட்டு பல இடங்களிலும் தங்கி ராமேஸ்வரம் வந்து சேர்ந்தார். அங்கே

யுள்ள இராமலிங்கத்தையும் சீதையம்மனையும் தரிசனம் செய்து, காசியிலிருந்து கொண்டுவந்த கங்கைத் தீர்த்தத்தை ராமலிங்கத்திற்குச் சமர்ப்பித்து, அவ்விடமிருந்து மேலூர்ச் சத்திரம் வந்து சேர்ந்தவுடன், நீதி ஐயரும் திருமணத்திற்கு நல்ல நாள் பார்த்துத் தனது பந்துக்களுக்கெல்லாம் நிருபம் எழுதி, ஊரார் அறியத் திருமங்கல்யதாரணம் நடந்து கொண்டிருக்கும்போது, மங்கள காரியத்திற்கு வந்திருந்த ஜனங்களெல்லோரும் கூடிக்கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசினதின் தன்மையானது, "பகவன் என்பவர் எந்த ஊரில் எந்த மரபில் பிறந்தாரோ! ஆதி என்ற பெண் எந்த ஊரில் எந்த மரபில் பிறந்ததோ, ஜாதி இன்னதென்று தெரியாத இந்தப் பெண்ணை நீதி ஐயரும் வளர்த்துத் தன் பெண் என்று சொல்லி மங்கள காரியம் நடந்துவிட்டது." இதை பகவன் கவனித்து, அக் கூட்டத்திலுள்ள சாமுவையரைப் பார்த்து, "ஏன் இப்படி கூட்டமாய் நின்று பேசுகிறீர்கள்?" என்று கேட்டார்."

சாமுவையர் பகவனைப் பார்த்து "உன்னைப் பார்த்தால் ஜாதி பிருமணர் என்று சொல்ல முடியும், ஆதி யென்ற பெண்ணை நீதி ஐயர் வளர்த்ததேயொழிய, அது அவருக்கு பிறந்த குழந்தை அல்ல," என்றார்.

"பகவன் சாமுவையர் சொன்ன வாக்கியங்களைக் கேட்டதும் மனம் திகில் அடைந்து கல்யாணப் பந்தலைவிட்டு மணக்கோலத்துடன் ஓட ஆரம்பித்தார். அவர் ஓடுவதைப் பார்த்த ஆதியும் அவர் பின்னே துயர்ந்து ஓட ஆரம்பித்தாள். இருவர்களும் அன்று சாயங்காலம் வரையில் ஓடி, பாணர் சேரியிலிருந்த ஒரு மண்டபத்திலே பகவன் தங்கினார். ஆதியும் அவரைக்கண்டு, சாஷ்டாங்க

மாக, காலில் விழுந்து என் நாதா, "தெய்வச் செயலால் உமக்கும் எனக்கும் திருமணம் நடந்திருக்க, நீங்கள் என்னை விட்டுப் போகுதல் உமக்குத் தகுமோ; இது தருமமாகுமோ. உம்மை விட்டு நீங்கினால் உயிர் வாழேனென்று இரக்கத்துடன் சொல்ல, பூர்வ பிரார்த்துவத்தால் இவர் மனதிலும் அது சரி என்று தோன்றி; பெண்ணே; என்னிடத்தில் உனக்கு அன்பிருக்குமானால், யான் சொன்னபடி கேட்க வேண்டும். அதென்னவெனில், "உனக்கு பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கிறதோ, அங்கங்கே அவைகளை அப்பொழுதே போட்டுவிட்டு வருவாயானால் யான் உன்னைக்கூட, சம்மதிப்பேன் என்று சொல்ல, அவளதற்கு உடன்பட்டு அன்றிரவு அம்மண்டபத்தில் இருவரும் கூடினார்கள். அப்போது கடவுள் உத்திரவின்படி, சரஸ்வதி யாவரும் புகழத் தக்க ஒளவையார் என்ற குழந்தையாய்ப் பிறந்தாள். இந்தக் குழந்தையை யார் காப்பாற்றுவாரென்று விட்டு நீங்க தாய் வருந்தும்போது அக்குழந்தை சொல்லிய

## வெண்பா.

"இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும், பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ."

அது கேட்டு தாய் மனந்துணிந்து, தன் நாதனுடன் போயினள்."

பின்பு அக்குழந்தையை அச்சேரியிலுள்ள பாணர்களெடுத்து வளர்க்க, அக்குழந்தை சரஸ்வதியானதால் இயல்பாகவே கலைமுழுவதும் அறிந்து சீதக்களபமென்னும்

...பரசர் பல்கலைக்க...

கணபதி அகவல்பாடி அவரை உபாசித்து, லோகோபகார மாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்கோவை, அசதிக்கோவை, நன்னூல் கோவை, நான் மணிக்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ் மாலே, தரிசன பத்து முதலியன இயற்றி ஒவ்வொரு காரியத்தின் பொருட்டு தனிக் கவிதைகளையும் பாடி அநேக அற்புதங் களெல்லாம் செய்து முடித்திருக்கிருள், பெண்ணே," என்ருன்.

"பெண்ணே, ஔவையார், மானிட ஜென்மம் நன் நடக்கையுடன் உலகத்தில் ஜீவித்திருக்க, பாடிய அளவு கடந்த பாட்டுகளில் எனக்குத் தெரிந்த சில பாட்டுகளை மட்டும் சொல்கிறேன் கவனமாய்க் கேள்."

அறஞ் செய விரும்பு.
ஒருவருக்கும் தீங்கு செய்யவேண்டாம்.
போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
பருவத்தே பயிர் செய்.
அகலவுழுவதை ஆழவுழு.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே
அவரோடிணங்கி யிருப்பதுவும் நன்று.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையுங் காப்பறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

என்ற நீதி வாக்கியப் பாட்டுகள் மாதிரி ஆயிரக்கணக் காய் பாடியிருக்கிருர்கள்."

"இது நிற்க, மேற்சொன்ன ஆதியும் பகவனும் தொண்டை நாட்டில் ஊற்றுக்காடென்னும் ஊரிலுள்ளதோர் மடத்திற்குச் சென்று தங்கினார்கள். அன்றிரவில் இருவர்களும் கலவி செய்தார்கள். அதன்பொருட்டு உப்பையென்பவள் பிறந்தாள். இந்தக் குழந்தையை எவர் காப்பாற்றுவாரென்று அதை விட்டு நீங்க தாய் வருந்தும் போது அது சொல்லிய

வெண்பா.

"அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனானோ காக்கக் கடனிலையோ
வற்பனோ வன்ன யரன்."

என்ற வாக்கியத்தைக் கேட்டு மனந்துணிந்து போயினள். அவ்வுப்பையை வண்ணார் வளர்க்க, வளர்ந்து மாரியம்மையாய் உலகமெல்லாந் தன்னைப் போற்ற, இப்பொழுதும் தெய்வமாயிருக்கின்றனள்."

"நிற்க, ஆதியும் பகவனும் சோழதேசத்தில் கருவூரை அடைந்து ஒரு சோலையில் தங்கி அவ்விடம் சேர, அதிகமானென்பவர் பிறந்தார். இந்தக் குழந்தையை யார் காப்பாற்றுவாரென்று அதைவிட்டு தாய் நீங்க வருந்தும் போது, அது சொல்லிய

வெண்பா.

"கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்ய—னுருப்பெற்றா
லூட்டி வளர்க்கானோ வோகெடுவா யன்னாய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்."

என்ற குழந்தையின் கவி கேட்டு தாய் மனந்துணிந்து தன் நாதனுடன் போயினள்."

அக் குழந்தையை வேட்டைக்கு வந்த அவ்வூர் அரசர் சேரமா னெடுத்து வளர்த்து வில், வேதம், மனு, விக்கியா னம் முதலியவையுங் கற்பிக்கச் செய்து, முடிசூட்ட அதிகமான் ராஜரீகம் செய்தார். அவர் ராஜரீகம் செய்து கொண்டுவருங்காலத்தில் பொன்வண்ணத்தந்தாதி என்றோர் பிரபந்தம் பாடி அதை சிதம்பரத்தில் அரங்கேற்றினார். பின் சிம்பரநாதனுடன் நட்பாகி அவர் பாதம் சென்றார்.''

''மேலும், ஆதியும் பகவனும் காவேரிப்பூம் பட்டணத்தை யடைந்து ஒரு மண்டபத்தில் தங்கி அன்றிரவு கூடினார்கள். அதுசமயம் உறுவை என்பவள் பிறந்தாள். அந்தக் குழந்தையை யார் காப்பாற்றுவாரென்று தாய் அந்த இடத்தைவிட்டு நீங்க வருந்தும்போது அது சொல்லிய

வெண்பா.

''சண்டைப்பைக் குள்ளியிர்தன் றுயருந்தத்தா னருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரிய—மண்டி
யலேகின்ற வன்று யரனுடைய வுண்மை
நிலேகண்டு நீயறிந்து நில்.''

என்ற வாக்கியத்தைக் கேட்ட தாயானவள் தன் நாதனுடன் சென்றாள்.''

''அக் குழந்தையை அவ்வூர் கள் விற்போரெடுத்து வளர்க்க அது வளர்ந்து தவஞ்செய்து பத்திரகாளியாய் தாருகனைக் கொன்று, திருவாலங்காட்டில் சபா நாயகருடனே நர்த்தனம் செய்து, தோற்று, அகோர வீரபத்திரரை விவாஹம் செய்து உலகம் பூராவும் பத்திரகாளியாய் விளங்கி தெய்வமாயிருக்கிறாள்.''

"பின்பு, ஆதியும் பகவனும் திருவாரூரையடைந்து ஒரு மண்டபத்தில் தங்கி அன்றிரவு இருவர்களும் கூட, கபிலர் என்பவர் பிறந்தார். இக் குழந்தையை யார் காப்பாற்றுவா ரென்று தாய் அதை விட்டு நீங்க வருந்தும்போது அது சொல்லிய

வெண்பா.

"கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கும்
உண்ணும் படியறிந் தூட்டுமவர்—நண்ணு
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலென்ன தான்."

என்று கேட்ட தாய் மனந்துணிந்து தன் நாதனுடன் சென்றனள்."

"அக் குழந்தையை தனக்குப் பிள்ளையில்லாத பாப்பைய னென்ற ஒரு பிராமணனெடுத்து வளர்த்து, ஏழு வயதில் உபநயனஞ்செய்யத் தொடங்குகையில் பிராமணர்கள் ஒத்துக் கொள்ளமாட்டோமென்று சொல்ல, அதைக்கண்ட கபிலர் அவர்களைப் பார்த்து, நான்முகத்தோனென்ஞேர் அகவல் சொல்லி, கருமத்தினுல் ஜாதியன்றி ஜென்மத்தால் இல்லை என்று சாதிக்க, அதற்குப் பிரயுத்திரம் சொல்லமாட்டாமல் இதுவே விதியென்று யாவரும் ஒத்துக்கொண்டார்கள். அதன்பின் அச்சடங்கு முதலானவைகளை முடித்தார்கள். அக் கபிலர் இன்னும் தவம் பண்ணிக்கொண்டிருக்கிருர்."

"இது நிற்க, ஆதியும் பகவனும் வெள்ளிமலைச் சாரலில் வந்து தங்கி இரவு சேர்ந்தார்கள். அப்போது வள்ளியம்மை பிறந்தாள். இந்த குழந்தையை யாவர் காப்பாற்றுவாரென்று அதை விட்டு நீங்க தாய் வருந்தும்போது அது சொல்லிய

### வெண்பா.

"அன்னை வயிற்றி லருத்தி வளர்த்தவன்று
னின்னும் வளர்க்கானோ வென்றாய்!—மின்னரவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை
யாடும் பெருமா னவன்."

என்ற வாக்கியத்தைக் கேட்ட தாய் மனந்துணிந்து, தன் நாதனுடன் சென்றாள்."

"பின்பு அக் குழந்தையை அம்மலையில் வாசம் செய்து கொண்டிருந்த குறவர்கள் எடுத்து வளர்த்தார்கள். அக் குழந்தை பருவகாலம் அடைந்து குறவர்களுடைய தினைக் காட்டில் காவல் காத்து வரும்போது சுப்ரமண்யக் கடவுளானவர் வள்ளியம்மையின்பேரில் மோகங்கொண்டு பலவித மான வேடம் தரித்து,கடைசியில் வள்ளியம்மையை வெள்ளி மலையிலேயே திருமணம் செய்து கொண்டார். இப்போது அவர்களை நாம் தெய்வமாக வணங்கிக் கொண்டு வருகிறோம்."

"இது நிற்க, ஆதியும் பகவனும் மயிலாப்பூரில் இலுப் பைத் தோப்பில் தங்கி அன்றிரவு சேர்ந்தார்கள். அப்போது திருவள்ளுவர் பிறந்தனர். அக் குழந்தையை யார் காப்பாற் றுவாரென தாய் அதை விட்டு நீங்க வருந்தும்போது அது சொல்லிய

### வெண்பா.

"எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானொருவ னல்லனோ—வல்லி
யருகுவது கொண்டிங் கலைகுவதே னன்னே
வருகுவது தானே வரும்."

இது கேட்ட தாய் மனந்துணிந்து தன் நாதனுடன் சென்றாள்."

"அக்குழந்தையை மயிலாப்பூரிலுள்ள வேளாளன் மனைவி எடுத்துச் சென்று வளர்க்க, அந்த ஜாதியார்கள் அவர்களை ஏளனம் செய்ய, அது கண்ட திருவள்ளுவர் என் தாயே எனக்காகத் தாங்கள் கஷ்டப்பட வேண்டாம், நான் வெளியே போய் பிழைத்துக் கொள்கிறேன் என்று சொல்ல, அதற்கு அவர்கள் என் கண்ணே, உன்னை விட்டு எப்படி பிரிந்திருப்போம் என்று வருந்த, அதற்கு திருவள்ளுவர் "என் தாயே நீங்கள் வருந்த வேண்டாம், தாங்கள் என்னை எப்போது நினைப்பீர்களோ அது நேரங்களில் நான் தங்களிடம் வந்து தங்களுக்கு வேண்டியதைச் செய்கிறேன்," என்று வாக்குத் தத்தம் செய்து அவ்வூரில் பல இடங்களில் வாசம் செய்து, கடைசியில் திருச்சினப்பள்ளி வந்து சேர்ந்தார்."

"அவ்வூரின் பக்கமாயுள்ள தொண்டை மண்டலத்தில் ஒரு வேதாளமானது விபசாயிகளின் பயிர்களை அழித்து, பலவிதமான தொந்திரவு செய்து ஜனங்களுக்கு பல விதத்தில் நஷ்டப்படுத்திக்கொண்டு வந்தது. அவ்வூரில் ஆயிரம் ஏர் கொண்டுழுது பயிர் செய்கின்ற மார்க்க சகாயனென்னும் ஒரு வேளாளன், அந்த வேதாளத்தை யார் ஒருவர் அடக்கினர்களோ அவர்களுக்கு அளவற்ற திரவியமும், ஓர் கிராமமும், மற்றும் வேண்டியவைகளையும் தருகிறேனென்று பிரசித்தம் பண்ணினன். அது கேட்ட திருவள்ளுவ நாயனர் தான் அந்த வேதாளத்தை அடக்குகிறேன். ஆனல், எனக்கு ஊர் வேண்டாம், பணம் வேண்டாம், ஒருவேளை சாப்பாடுமட்டும் வேண்டுமென்றார். அது கேட்ட மார்க்க சகாயன் மனம் சந்தோஷமடைந்து அவர் காலில் விழுந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு, அப்படியே செய்யுங்கள் என்றான். அது கண்ட திருவள்ளுவர்

மனம் குளிர்ந்து தன் கையால் விபூதி பஞ்சாக்ஷரத்தை அவர் கையில் கொடுத்து இதை நீ கொண்டுபோய் ஊரி லுள்ள நிலங்கள் பூராவும் தூவி விட்டு விடு. இதிலிருந்து அந்த வேதாளம் உங்களிடம் வந்து ஒருவிதமான தொந் தரவும் செய்யாது என்றார்.''

“அன்று முதல் அவ்வேதாளம் முதலையாய் ரூபம் மாறி காவேரி யாற்றில் வாசம் செய்ய நேரிட்டது. அதிலிருந்து வேதாளத்தினுடைய கஷ்டம் நீங்கி செவ்வனவே பயிர்களெல்லாம் வளர்ந்து வருவதைப் பார்த்த மார்க்க சகாயன் திருவள்ளுவரிடம் போய் வணக்கத்துடன் நின்று, தாங்கள் எங்கள் ஊருக்குச் செய்த நன்றிக்காக என் மகள் வாசுகி என்னும் பெண்ணை தேவரீருக்கு வாழ்க்கைத் துணை வியாகக் கொடுக்க நினைத்திருக்கிறேன், “அப்படியே அங்கீ கரிக்கவேண்டுமென்று சொன்னான்.''

“நாயனார் உலகத்தாருக்கு இல்லறம் நடத்திக் காட்ட வேண்டும் என்ற காரணத்தை யோசித்து “அதன்படி செய்வோம்'' என்றார். அவர் சொன்னவுடனே மார்க்க சகாயனும் சந்தோஷப்பட்டு ஊரார் அறிய நல்ல முகூர்த்தம் பார்த்து, தனது மகளை திருமணம் செய்து வைத்தார், அவர்கள் இருவர்களும் உலகத்தில் நடத்திய இல்லறம் வெகு அபூர்வமானது. அதிலும் கொஞ்சம் சொல்கிறேன் கேள், பெண்ணே,'' என்றான் நாகப்பன்.

“நாயனார் தன் மனைவியை சாதம் போடுமுன் ஒரு ஊசியும், ஒரு சங்கில் தண்ணீரையும் வைக்கச்சொல்லி அதன் பின்பு இலை போட்டு அன்னம் புசிப்பது வழக்கம். அதன்படியே வாசுகியம்மனும் நடந்துகொண்டே வந்தாள்.

வாசுகியம்மாளுக்கு வயதாகி மரணகாலம் ஏற்பட்டு உயிர் போகமாட்டாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் தருவாயில் நாயனார் தன்பதியைப் பார்த்து, பெண்ணே "ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய், உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்க, "என் நாதா, தாங்கள் என்னை திருமணம் செய்ததிலிருந்து இது வரை தங்களுக்கு அன்னம் சமர்ப்பிக்கும்போதெல்லாம் சங்கில் தண்ணீரும், ஊசியும் இலையின் பக்கம் வைத்ததின் காரணம் என்ன என்று தெரியாமல், என் உயிர் பிரிய மனமில்லாமல் இருக்கிறது" என்றாள். அது கேட்ட திருவள்ளுவர் மனம் சந்தோஷப்பட்டு "பெண்ணே, நீ எனக்குச் சாதம் படைக்கும் போது தவறி கீழே அன்னம் விழுந்தால் அதை ஊசி கொண்டு எடுத்து, சங்கில் உள்ள தண்ணீரில் நனைத்து இலையில் போட்டுக் கொள்ளலாம் என்று நான் வைக்கச் சொன்னேன். நீ இதுவரையில் ஒரு அன்னமாவது கீழே போடவும் இல்லை; நான் அதை உபயோகிக்கவும் இல்லை," என்றார். அதுகேட்ட வாசுகியம்மன் மனம் குளிர்ந்து உயிர் நீங்கினள். அதன்பின் அந்த அம்மையாருக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து அடக்கம் செய்து விட்டு, பிறகு உலகத்திலுள்ள எல்லா விஷயங்களையும் குறள் என்ற நூலில் பாட்டாக பாடியிருக்கிறார். மேற்கண்ட குறளையும் அவர் ஜீவிய சரித்திரத்தையும் படித்துப் பார்த்தால் பாலும் சீனியும் கலந்து சாப்பிட்டால் எவ்வளவு ருசிகரமாயிருக்குமோ அதற்குமேலாய் இருக்கும், பெண்ணே" என்று நாகப்பன் சொன்னான். அவர் நமக்கு அருளிச்செய்த சில கவிகளை மட்டும் இவ்விடம் சொல்கிறேன்.

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

நாகப்பன்:—"பெண்ணே, உலகத்திலுள்ள ஜீவராசிகளில் மானிட ஜென்மமே மேலானது. அதில் மேல் கண்டவர்கள் சொல்லுகிறபடி நியாயமான வழியில் நடக்கிறவர்கள் மிக மேலானவர்கள்."

# அத்தியாயம் 3.

## உலக இயல்பு

நாகம்மாள்:—"என் நாதா, தாங்கள் இதுவரையில் சொல்லிவந்ததெல்லாம் நான் தெளிவாய் அறிந்து கொண்டேன். ஆனால், நமக்காக ஔவையார் சொன்ன நூல்களில் தாங்கள் சில கவிகளை மட்டும் எனக்குச் சொல்லி யிருக்கிறீர்கள். அதன் உட் கருத்துகளையும் சொல்லவேண்டும்."

நாகப்பன்:—"என் கண்மணியே, அதன் உட்கருத்துக்களைச் சொல்கிறேன், கவனமாய்க் கேள்."

"அறஞ் செய விரும்பு என்ற முதல் பாட்டின் கருத்து என்னவெனில், உலகத்திலுள்ள ஜீவராசிகளில் முக்கிய

பிறவியானது மானிடர்கள். அப்படி மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் மேல்கண்ட பாட்டின்படி தர்மம் செய்ய அவர்கள் மனதில் நினைக்க வேண்டும். அப்படி ஒரு மனிதன் தன் மனதில் நினைப்பானுகில், அவனுக்குக் கடவுள் அவன் என்னத்தின்படி செய்ய அனுமதி கொடுக்கிறுர். மேலும் தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற கருத்தின்படி ஒரு மனிதனின் எண்ணத்தின்படியே கடவுளின் அருள் அவனுக்குக் கிடைக்கிறது.''

''ஒருவருக்கும் பொல்லாங்கு செய்ய வேண்டாம். இப் பாட்டின் கருத்து என்னவெனில், ஒரு மனிதன் தன் ஆயுள் வரையில் தன்னுல் முதல் பாட்டின் கருத்தின்படி தர்மம் செய்ய, பொருள் இல்லாமலிருந்தாலும், இப்பாட்டின் படி மற்றொரு மனிதனுக்கு கெடுதி ஒன்றும் செய்யாமல் இருப்பானுகில், அன்னவர் முதல் பாட்டின் கருத்தின்படி செய்யக்கூடிய மனிதனுக்கும் மேலான பதவியையடைவார்.''

''அகலவுழுவதை ஆழவுழு, என்ற பாட்டின் கருத்து, ஒரு மனிதன் தன் குடும்பத்திற்கு, ஒரு குழி நிலத்தைச் சரியாய் விபசாயம் செய்தால் அதில் ஒரு வருஷத்துக்கு மூன்று தடவை பயிர் செய்து, அதில் ஒரு பங்கை சாப்பாட்டுக்கும், ஒரு பங்கு சிலவுக்கும், ஒரு பங்கு மீதியாகவும் வைத்து அவன் விருத்தியடையலாம். அதை விட்டு விட்டு பல இடங்களை வாரத்துக்கு உழுது ஒவ்வொரு நிலங்களையும் சரிவர பார்க்க முடியாமல், போனது போனது, வந்தது வந்தது, இருந்தது இருந்தது, சாவியாய்ப் போனது, மாடு மேய்ந்தது. முதலில் போட்ட விதைக்குக் கூட வீடு வந்து சேர்வதில்லை. மறுபடியும் விதைக்க முதல் இல்லை

என்று நிலங்களை தருசுபோட்டு விடுவதால் அதில் புல் முளைத்து விபசாயத்துக்கு அந்த நிலங்கள் உதவாமல் போய் விடுகிறது. இதன் உள் கருத்து ஒரு மனிதனுக்கு அவன் தாய் தகப்பனுர் தமது பையனுக்கு வயதாகிவிட்டது. ஆகையால், அவன் ஒரு குழி நிலத்தை விபசாயம் செய்து விடுவான் என்ற எண்ணம் தோன்றியவுடன் தகப்பனு ரானவர் பையனுக்குச் சரியான இடம் பார்த்து ஒரு குழி நிலத்தையும் அதற்கு இரண்டு மாடும் கொடுத்து இதை வைத்து நீ உழுது பயிர்செய்துகொள் என்று ஒதுக்கி விடுகிருர்."

"பையனுவன் தனக்கு ஏற்பட்ட ஒரு குழி நிலத்தை சரிவர உழுது பயிர்செய்யாமலும், பிறர் நிலங்களை வாரத்துக்குப் பிடித்து உழுது தன்னிடமுள்ள தங்கக் கொழுவைத் தேயவைத்து விட்டு தன் நிலத்தை உழுக வரும்போது, கொழு தேய்ந்துபோனபடியால் சரியாய் உழவு போட முடியாமல் ஆந்துபோய் இருப்பதை அந்த நிலம் கண்டு, இவன் சரியாய் நம்மை உழமாட்டான், நாம் இனி சரியாய் உழுது பயிர்செய்யக்கூடியவனைப் பார்ப்போம் என்று பல வகையிலும் நிலம் கெட்டு தரிசாய்ப் போவதுடன் உழுபவனும் கெட்டு விடுகிருன்."

"போகாத இடந்தனிலே போகவேண்டாம்" என்ற பாட்டின் கருத்து. ஒரு மனிதன் இந்த உலகத்திலே போய்ப் பார்க்காத இடம் எது இருக்கிறது! எல்லா இடங்களையும், ஒருவரில்லாவிட்டால் ஒருவர் பார்த்து வந்து சொல்லக் கேட்டிருக்கிருேம். அப்படியிருக்க போகாத இடம் எது! தன் தாரம் அன்றி பிறர்தாரத்திடம் போகக்கூடாது என்பதுதான்."

"பருவத்தே பயிர் செய்— என்ற பாட்டின் கருத்து என்னவெனில், ஒரு மனிதன் தனக்குக் கிடைத்த ஒரு குழி நிலத்தில் பருவ காலம் கண்டு நன்ருய் முதிர்ந்த, பொக்கு இல்லாத விதையைக் கொண்டுபோய் விதைத்து, அந்த விதை முளைத்துவிட்டதா என்று பார்த்து, அப்படி அந்த விதை முளைத்து வெளியே வரும்போது, அதைத் தினம் கவனித்து, அந்தச் செடியின் பக்கமாய் முளைக்கக் கூடிய களைகளைப் பிடுங்கி எறிந்து, அதற்குச் சரியாய் தண்ணீர் விட்டு, அதைக் காப்பாற்றிவர, அந்தச் செடி பெரிதாகி, பூ பூத்து, பிஞ்சுவிட்டு, காயாகி, பழமாக அதைப் பறித்துச் சாப்பிடுகிருன்."

"ஒரு மனிதன் தனக்குக் கிடைத்த ஒரு குழி நிலத்தில் மேலே சொல்லியபடி செய்யாமல் தன் கைவசம் இருக்கக்கூடிய நிலத்தில் தினம் தினம் தன்னிடமுள்ள, இன்ன விதையென்று தெரியாத விதையை, விதைத்துக் கொண்டே இருக்கிருன். அவன் அப்படிச் செய்வதிஞல், அந்த நிலத்தில் ஒரு விதை தங்கி முளைக்க இடமிருக்கிற தேயொழிய மறுவிதை அவ்விடம் தங்க இடம் கிடையாது. ஆனதால், இவன் முதல் நாள் விதைத்த விதை நின்றுவிடு கிறது. மறுமுறை அதில்விதைக்கும்போது முதல் விதைத்த விதையும், இன்று விதைத்த விதையும் ஒன்று சேர்ந்து அவன் கையுடன் வந்து விடுகிறது. அது அவன் கண்ணுக்குத் தெரிகிறதில்லை. ஆனல் நாம் விதைத்துக்கொண்டேதானே இருக்கிரேம், அது கண்டிப்பாய் முளைக்கத் தான் செய்யும் என்று எண்ணி, மரணகாலம் வரையில் அவன் ஒரு பலனும் அடையாமல்ப் போய்விடுகிருன். அந்த ஒரு குழி நிலமும் தருசாகவே போய்விடுகிறது. இது விபரங்கள் உலகத்தில் கொஞ்சம் இருக்கிறது."

மேலும், ஒருவன் தன் நிலத்தை தினம் தினம் உழுது சாகுபடி செய்து வருவதில் ஒருநாள் விதைத்த விதை சரியாய் முளைத்தாலும், அது என்ன விதை என்று அவனுக்குத் தெரிகிறதில்லை. அது பழுத்துத் தானே கீழே விழுந்ததின் பேரில் அது ஆண் அல்லது பெண் என்று அறிகிறான்."

"அதன்படி பிறக்கும் குழந்தைகளுக்கு ஆயுசு இன்னதென்றும், குணம் இன்னதென்றும், அவனால் சொல்ல முடிகிறதில்லை. சிலருக்கு குழந்தை உற்பத்தியானதிலிருந்து அந்தக் குடும்பம் மென்மேலும் பெருகி, தனவந்தனாகி விடுகிறான். இதை நாம் கண்ணுக்கெதிரே பார்க்கிறோம். ஒரு மனிதனுக்கு ஒரு குழந்தை உற்பத்தியானதிலிருந்து அவனுக்கு இருந்த ஐவேசும் போய், இருக்கக்கூட இடமில்லாமலும், குடிக்கக் கூழ் இல்லாமலும் அலைந்து கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். ஒரு மனிதனுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அவன் ஸ்திதி மேலே போகாமலும் கீழே போகாமலும் சமமாய் இருப்பதையும் பார்க்கிறோம். மற்றொருவனுக்கு ஒரு குழந்தை தரித்த 10 மாதத்திற்குள் அவன் மனைவி இறந்து விடுவதையும் பார்க்கிறோம். இல்லாவிட்டால், அவன் இறந்துவிடுகிறான். அது விபரத்தை ஊரார் எப்படிப் பேசிக்கொள்கிறார்கள் என்றால் அந்தக் குழந்தை தரித்த நேரம் என்று சொல்வதையும் பார்க்கிறோம்.

மேலேகண்ட விபரங்களின்படி தற்காலம் நடந்து கொண்டிருக்கிறது. கீழ்க்கண்ட விபரங்களை முன்னோர்கள் ஏட்டுப் பிரதிகளில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதை முதலில் படிக்கிறார்கள். ஆனால், அதன்படி நடக்கிறதே கிடையாது. ஏட்டுப் பிரதியின்படி ஒருவர் நடத்திவந்த விபரங்களைச் சொல்கிறேன் கேள்."

# அத்தியாயம் 4.

## அநுபோக பலன்

நாகப்பன்:—"பெண்ணே, காசிமா நகரம் என்று ஒரு நகரம் உண்டு. அதை அரசு செய்துவந்த சந்திர சேகரன் விசாலாக்ஷி என்ற கன்னிகையை திருமணம் செய்து, அவர் கருணாகரன் என்ற மந்திரியையும், விஸ்வநாத அய்யர் என்ற குருவையும் தனக்கு உதவியாக வைத்துக்கொண்டு நீதி தவறாமல் ஆண்டு வருகிற காலத்தில், தான் எந்தக் காரியங் களைச் செய்யவேண்டுமானாலும் குடிகளை மாதம் 4 தடவை அரண்மனைக்கு வரும்படி பறை சாற்றி, மந்திரியுடன் கலந்து, குடிகளின் வாக்கு மூலங்களை நேரில் கேட்டு அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை மந்திரியைக் கொண்டு பேசி முடித்தும், தன் வீட்டுக் காரியங்களுக்கு தனது குல குருவா கிய விஸ்வநாதய்யரையும் தினம் தன் அருகே வைத்துக் கொண்டு அவர் சொல்கிறபடி தன் அரண்மனையில் நடந்து வந்தார். அரசர் தன் நாயகியுடன் தனிமையாய்ப் போய்ப்பேச வேண்டுமென்றாலும் தன் குல குருவைக் கேட்டுக்கொண்டு அவர் உத்திரவின் பேரில் தான் போவார். குரு இன்று போகக்கூடாது என்றால் அதன்படி நடப்பார். அப்படி நியாயமான காரியங்களைச் செய்து அவ்வூரிலேயே நல்ல கியாதியுடன் ராஜரீகம் நடத்தி வந்தார்."

நாகம்மாள்:—"என் நாதா, மேற்கண்ட அரசர் நீதியாய் அரசு செய்து வந்த காலங்களில் என்ன விஷேசமான காரி யங்கள் நடந்தது."

நாகப்பன்:—"பெண்ணே, மேல்க்கண்ட அரசனை சந்திரசேகரன் குருவான விஸ்வநாதய்யர் சொல்லி, அதன் படி நடந்துவர அரசருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

அக் குழந்தைக்கு நாகரத்தினம் என்று பெயரிட்டு, ஐந்து வயதானதும் பள்ளிக்கு வைத்து, தனி அரண்மனையும் கட்டி அந்த அரண்மனைக்கு இளவரசர் அரண்மனை என்று நாம தேயமிட்டு அதில் அவர் வாசம் செய்துவர, நல்ல தேர்ச்சி யான உபாத்தியாயரைக் கொண்டு கல்வி கற்பித்து வந்தார் கள். அப்போது இளவரசருக்கு வயது ஏழு முடிந்தது.''

நாகம்மாள்:—''என் நாதா, அதன் பின் என்ன நடந்தது.''

நாகப்பன்:—''பெண்ணே, அவ்விதமாக இளவரசன் வளர்ந்து வரும் நாளில் இராஜபத்னியான விசாலாக்ஷி யம்மாள் தன் நாதன் ஏழு வருஷ காலமாய் தன்னிடத்தில் வராமலிருப்பதை நினைத்து, என்ன காரணம் என்று அறி யாமல் பலவாறு எண்ணி, நாம் அவரைத் தனியாகப் பார்க்கு மிடத்தில் கேட்போம் என்று நினைத்து, அதன்படி அவர் தனிமையாய் சயனித்திருக்குமிடம் சென்று, நாதா, நான் தங்களை ஒன்று கேட்டுப்போக வந்தேன். அதற்குத் தாங்கள் கோபமில்லாமல் உத்திரவளிக்க வேண்டும் என்று கேட்க, ''பெண்ணே, உன்னைப்பற்றி எனக்கிருக்கும் சந்தோஷம் அளவு கடந்தது. அப்படியிருக்க, நீயேன் இப்படிச் சொல்ல வேண்டும்! எதை வேண்டுமானாலும் சந்தோஷமாய் கேட்க லாம், என்றார்.''

விசாலாக்ஷி:—''என் நாதா, நான் தங்களுக்கு ஏதாவது குறை செய்தேனா! தாங்கள் சென்ற ஏழு வருஷங்களாய் என்னிடம் அந்தப்புரம் வந்து தனிமையாய்ப் பேசாம லிருக்க என்ன காரணம் அறியேன்.''

சந்திரசேகரர்:-''என் கண்மணியே! என்னுடைய உயிர், பொருள், ஆவி மூன்றையும் உனக்கே அர்ப்பணம் செய்தி

ருக்கிறேன். அப்படியிருக்க, நீ மனதில் கொண்ட எண்ணம் தவறு. நான் கொண்ட விரதப்படி எந்தக் காரியம் செய்ய வேண்டியதிருந்தாலும் குடிகளைக் காப்பாற்ற மந்திரியையும் நம் குடும்பத்தைக் காப்பாற்ற நமதுகுல குருவாகிய விஸ்வ நாதய்யரையும் கேட்டு, அவர்கள் சொல்லுகிறபடியே நடந்துகொண்டு வருகிறேன். நான் உன்னிடம் போகலாமா என்று கேட்காத நாளே கிடையாது. அவர் இன்னும் கொஞ்ச நாள் செல்லவேண்டும் என்று சொல்லிக்கொண்டே வருகிறார். அவர் சொன்னால்த்தான் உன்னிடம் வருவேனே தவிர, என்னிஷ்டப்படி வர என் மனம் இடந்தரவில்லை.''

விசாலாக்ஷி:—"என் நாதா, தாங்கள் சொல்லியதைத் தெரிந்து கொண்டேன். அதன்படி நடந்து குடிகளையும் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டியது அரசர் கடமை தான் என்று சந்தோஷப்பட்டு அந்தப்புரம் போய்ச்சேர்ந் தாள்.''

"தான் அந்தப்புரம் போய்ச் சேர்ந்ததும் பலவிதமான விஷயங்களை நினைத்து, நாம் நமது குருவுக்கு இது வரையில் என்ன கெடுதி செய்தோம். ஒரு கெடுதியும் செய்ய வில்லையே! அவர் என் நாதனை என்னிடம் அனுப்ப அவருக்கு மனம் இப்படிப் போனதென்ன? இவைகளை நினைத்து மனதைப் புண்படுத்தக்கூடாது. அவரை நேரில் அழைத்து இதன் காரணத்தைத் தெரிந்து கொள்வோமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு தன் தோழிகளில் கமலா தேவியைக் கூப்பிட்டு கமலா, "நீ போய் நமது குருவானவர் எவ்விடம் இருந்தாலும் அவரைத் தனிமையாய்க் கூப்பிட்டு, நான் வரச்சொன்னதாகச் சொல்லிவிட்டு வா'' என்று அனுப்பினாள்.''

கமலாதேவி:—"அம்மா அதன்படி செய்கிறேன்," என்று அரண்மனையை விட்டுப் புறப்பட்டு குருவின் மனை போய்ச் சேர்ந்து, வாசலில் நின்றுகொண்டு, "யாரம்மா அங்கே இருக்கிறது?" என்று கூப்பிட்டாள். அந்த சப்தம் கேட்டவுடன் அவ்வீட்டுக்கதிபதியாகிய குரு பத்தினி சுந்தரத்தம்மாள் வெளியே வந்து "யாரம்மா நீ" என்று கேட்டாள்.

கமலாதேவி:—"அம்மா, நான் இவ்வூர் ராணியம்மா ளுடைய தோழி. என் பெயர் கமலாதேவி. ராணியம்மாள் உத்திரவின் பேரில் நான் இங்கு வந்தேன். ராணியம்மாள் தங்கள் நாதருகிய எங்கள் குலகுருவைப் பார்க்கவேண்டு மாம். அதற்காகச் சொல்லிவிட்டு வா என்று என்னை அனுப்ப நான் வந்தேனம்மா."

சுந்தரத்தம்மாள்:—"அம்மா, கமலாதேவி! அப்படியா, வாருங்கள் என்று அழைத்துச் சென்று, அன்போடு அமரச் செய்து அம்மா, இப்போது குருவானவர் மேல் மாடியில் நித்திரை செய்து கொண்டிருக்கிறுர். நான் போய் கூப்பிட்டு வருகிறேன். தாங்கள் இங்கேயே இருங்கள், என்று சொல்லி விட்டு மேல்மாடிக்குப்போய்,நித்திரைசெய்துகொண்டிருந்த தன் கணவரைத் தட்டி எழுப்பி தங்களை ராணியம்மாள் கூட்டிக் கொண்டு வரச் சொன்னதாக கமலாதேவி வந்திருக்கிறுள்."

விஸ்வநாதய்யர்:—"உடனே படுக்கையை விட்டு எழுந் திருந்து கீழே இறங்கி கை கால் சுத்தம் செய்து கொண்டு கமலாதேவியிடம் சென்று, "அம்மா வா, வந்த காரியம் என்ன? என்று அன்போடு கேட்டார்."

கமலாதேவி:—"எங்கள் குலகுருவே! தங்களை எங்கள் ராணியம்மாள் எது காரணத்துக்காகவோ வரும்படி சொல்லி விட்டு வரச் சொன்னார்கள்."

விஸ்வநாதய்யர்:—"அம்மா, கமலா! அதன்படி நான் வருவதாகச் சொல்."

கமலாதேவி குருவிடமும், சுந்தரத்தம்மாளிடமும் விடை பெற்றுக்கொண்டு அரண்மனை வந்து சேர்ந்து, ராணியம்மாளிடம், "அம்மா, நான் போய் நமது குருவைக் கண்டு தாங்கள் சொன்னபடி சொல்லி விட்டு வந்தேன். அவரும் வருவதாகச் சொன்னார்," என்றாள்.

ராணி:—"கமலா! நீ, வரும்படி சொன்னதற்கு குருவானவர் வேறே தடை ஏதாவது சொன்னாரா, அன்போடு பேசினாரா அல்லது வெறுப்புடன் பேசினாரா அதைக் கவனித்தாயா."

கமலாதேவி:—"அம்மா, அப்படி அவர் கடிந்து ஒன்றும் பேசவில்லை. நல்ல முகமலர்ச்சியோடும், அதிக சந்தோஷத்தோடும், அம்மா நீ போ, நான் கொஞ்ச நேரத்தில் வந்து விடுகிறேன் என்று சொன்னார். அவரிடம் கொஞ்சமாவது மனவருத்தம் இருப்பதாகத் தோன்றவில்லை."

விசாலாக்ஷி:—"கமலா, சரி நீ போய் உன் சமையல் வேலையைப் பார்," என்று சொல்லி விட்டு தனியாய் உட்கார்ந்து பலவிதமான எண்ணங்களை நினைத்துக் கொண்டு கவலையுடனிருந்தாள்."

விஸ்வநாதய்யர் கமலாதேவியைப் போகச் சொல்லி விட்டு, சுத்தமான உடைகளை அணிந்து கையில் ஊன்று

கோல் பிடித்துக் கொண்டு தன் நாயகியாகிய சுந்தரத்தம் மாளைப் பார்த்து, "பெண்ணே, நான் ராணி அரண்மனைக்குச் சென்று வருகிறேன்," என்று சொல்லி விட்டு, அரண்மனை சேர்ந்து வெளிவாசலில் காவல் செய்து கொண்டிருக்கும் ராமுவிடம் "அம்மா, நீ போய் குருவானவர் வந்திருக் கிருர் வரலாமா என்று கேட்டு வா," என்ருர்.

ராமு:—"குருவே! கொஞ்ச நேரம் இங்கே இருங்கள். நான் வேகமாய்ப் போய் அம்மாளிடம் கேட்டுக் கொண்டு வருகிறேன்," என்று ஓடோடியும் ஓடி ராணியம்மாளிடம் சென்று, "அம்மா, தங்களைப் பார்க்க குருவானவர் வெளியே நின்று கொண்டிருக்கிருர். அவரை இவ்விடம் வர உத்திரவு கொடுக்கிறீர்களா?"

ராணி:—"ராமு! நீ வேகமாய்ச்சென்று தக்க மரியாதை யுடன் அவரை இவ்விடம் அழைத்து வா."

ராமு அவ்விடம் விட்டு வேகமாய் வெளிவாசல் வந்து குருவை வணங்கி, "அம்மா தங்களை உள்ளே வரும் படி சொன்ஞர்கள்." விஸ்வநாதய்யர் ராமு சொன்னவுடன் ராணியின் அந்தப்புரம் போய்ச் சேர்ந்தார். ராணியம்மா ளும் குரு வந்தவுடன் நமஸ்காரம் செய்து, "வாருங்கள்" என்று சொல்லி, அவருக்குப் பீடம் ஒன்று போட்டு அதில் அவரை அமரச் செய்து தானும் ஓரிடத்தில் உட்கார்ந்து சுமார் அரைமணி நேரம் வரையில் ஒன்றும் பேசாமல் மனம் ஒருவிதமான திகில் அடைந்து எப்படி குருவைக் கேட்பது என்று யோசனை செய்துகொண்டிருந்தாள்.

விஸ்வநாதய்யர்:—"கிலேசம் அடைந்து, நம்மை ராணியம்மாள் தனியாய் அழைத்து வந்து சுமார் $\frac{1}{2}$ மணி

நேரமாகியும் ஒன்றும் பேசாமலிருப்பதைக் கண்டு நாமும் சும்மா இருந்தால் காலதாமதம் ஏற்பட்டு விடும் என்று மனதில் எண்ணி, "அம்மா, என்னை அழைத்த காரணம் யாது?" என்று அமைதியோடு கேட்டார்.

ராணி:—"என் குருவே! என் மனமானது கேட்க துணிவு ஏற்படுகிறது. வாயானது பேச முடியவில்லை. ஆனால் என் மனதைத் திடப்படுத்திக் கேட்கிறேன். அதாவது என் நாதன் என்னிடம், வந்து பேசிக்கொண்டிருப்பதற்கு தங்களை அவர் அனுமதி கேட்டால் இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும், போகட்டும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்களாமே! அப்படித் தாங்கள் சொல்வதின் காரணம் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் தங்களுக்கு என்ன கெடுதி செய்தேன். அதைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

விஸ்வநாதய்யர்:—"என்னம்மா! இதற்காகவா மனம் நொந்து கொண்டிருக்கிறீர்கள். பாதகமில்லை. நான் நாளைக் காலையில் வந்து இதற்கு விபரமான பதில்ச் சொல்லுகிறேன் அம்மா, தாங்கள் கவலைப்படவேண்டாம். நாழிகையாகிறது எனக்கு உத்தரவு கொடுங்கள்."

ராணி:—"எங்கள் குலகுருவே! அப்படியே ஆகட்டும். நாளைக் காலையில் வந்து எனக்குச் சரியான விபரம் சொன்னால் போதும். போய் வாருங்கள்."

விஸ்வநாதய்யர் ராணியம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு தன் வீடு வந்து சேர்ந்து ஆகார வசதிகளை முடித்து மேல் மாடிக்குப்போய் சயனித்துக் கொண்டு, எப்போது பொழுது விடியும், ராணியம்மாளுக்கு நாம்

சொன்னால் தெரியாது, செய்து காண்பித்தால்த்தான் தெரியுமென்று நினைத்துக்கொண்டிருந்தார். பொழுது புறப்பட்டது. மணியும் ஆறடித்தசத்தம் கேட்டவுடன் நித்திரையை விட்டு எழுந்திருந்து காலைக்கடன்களை சுறுசுறுப்பாய் முடித்துக்கொண்டு மணி ஏழு அடிக்க ராணியம்மாள் அரண்மனை போய்ச் சேர்ந்து, ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு, ராணியம்மாளைப் பார்த்து அம்மா, இப்போது இரண்டு ஆட்கள் வேண்டும்," என்றார்.

ராணி:—"என் குருவே! அதன்படி இரண்டு ஆட்கள் தருகிறேனென்று கமலத்தையும் ராமுவையும் கூப்பிட்டாள். சப்தம் கேட்டவுடன் கமலமும் ராமும் வந்து சேர்ந்து வணங்கி நின்று "என்னம்மா, அழைத்த காரணம்."

குரு:—"கமலம், நீ நேற்று என்னைக் கூப்பிட வந்தாய் அல்லவா! அதே மாதரி இன்று எங்கள் வீட்டுக்குப் போய் என் நாயகி சுந்தரத்தம்மாளைக் கண்டு உங்களை ராணியம்மாள் அவசரமாக வரச் சொன்னார்கள் என்று மட்டும் சொல்லி விட்டு வந்து சேர். ராமுவைப் பார்த்து, நீ போய் நமது இளவரசர் நாகரத்தினத்தைப் பார்த்து உங்களை அம்மா பார்க்க வேண்டுமாம், அவசரமாய் வரச் சொன்னார்கள் என்று சொல்லிவிட்டு வந்து சேர்."

குரு சொன்னவுடனே இரண்டு பெண்களும் அரண்மனையை விட்டு வெளியே வந்து, ஒரு பெண் குருவின் வீட்டிற்கும் மற்றொரு பெண் இளவரசர் அரண்மனைக்குமாகச் சென்றார்கள்.

கமலாதேவி:—குருவின் வீட்டிக்குப் போய் சுந்தரத் தம்மாளைக் கண்டு, "அம்மா,.தங்களை ராணியம்மாள் பார்க்க

வேண்டுமாம். அவசரமாய் வரும்படி சொல்லிவிட்டு வரச் சொன்னார்கள்."

ராமு:—இளவரசர் அரண்மனைக்குச் சென்று இளவரசரை வணங்கி, "ஐயா, தங்களை உங்கள் அன்னை அவசரமாகப் பார்க்க வேண்டுமாம், அதற்காகத் தங்களை வரும்படி சொல்லி அனுப்பினார்கள்."

குருவின் மனைவி சுந்தரத்தம்மாள், ராணியம்மாள் அவசரமாய் வரச் சொன்னதின் காரணம் தெரியவில்லை என்று எண்ணங்கொண்டு, தலை சிவாமலும், முகம், கைகால் கழுவாமலும் தன் குழந்தைகளைப் பார்த்து, "நீங்கள் இருங்கள், என்னை ராணியம்மாள் வரச் சொன்னார்களாம், நான் போய்ச் சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு ராணி அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள். சுந்தரத்தம்மாள் வீட்டை விட்டு புறப்பட்டு கொஞ்ச தூரம் போனவுடன் பிள்ளைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ராணியம்மாள் எதற்காக நம் தாயாரை வரச் சொல்லி இருக்கக்கூடும், எதாவது பட்சணம் செய்திருக்கலாம், நம்மள் அம்மாளுக்கு கொடுக்கத்தானே இருக்கும். அம்மா அங்கேயே தின்று விட்டு வந்தால் என்ன செய்வது, நாமும் ஒன்றின்பின் ஒன்றாய் ஐந்து பேர்களும் போனால், நம்மை என்ன அடிக்கவா போகிறார்கள். என்று ஐந்து குழந்தைகளும் முகம் மூஞ்சி கழுவாமலும், படுத்து எழுந்திருந்த கொடுவாய் கழுவாமலும், சரியாய் துணிகளை உடுத்தாமலும் பார்வைக்கு அவலக்ஷணமான தோற்றத்தோடு ஒன்றின்பின்னொன்றாய் ராணி அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள்.

இளவரசர் ராமு அம்மாள் சொல்லிப் போனவுடன், நம்மை அன்னையார் எக்காரணமோ, வரச்சொல்லிய

விபரம் தெரியவில்லை. நாமும் வெகுசீக்கிரத்தில் போய்ச்சேர வேண்டும் என்று, உடனே தன் வேலையாட்களைக் கூப்பிட்டு வென்னீர்போடச் சொல்லி, அதில் பன்னீரை ஊற்றி ஸ்நானம் செய்து, காலைக்கடனை முடித்து, தான் எப்போதும் போல் அலங்காரம் செய்வதைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாய் தன்னிடம் இருந்த உடைகளில் மேலானதாய் எடுத்து அணிந்து, கழுத்தில் முத்து ஆறம் பூண்டு, தலையில் இளவரசருக்கு ஏற்பட்ட தலைப்பாகை வைத்து, தனக்கு நேரில் இருந்த நிலக்கண்ணாடியில் பார்த்துத் தன் மனதுக்கு நன்றாய் இருக்கிறதென்று தெரிந்துகொண்டு, தன் தாயார் இருக்கும் அரண்மனை சென்று, தாயாரை வணங்கி, அதன் பிறகு குலகுருவையும் வணங்கி நின்று, "அம்மா, என்னை அழைத்த காரணம் யாதோ! எனக்குப் பகரவேண்டும்," என்று கேட்டார். அப்போது ராணி பார்த்து "அப்பா, மகனே! நான் உன்னைப் பார்க்கவேணுமென்று வரச்சொல்லவில்லை, நமது குருவானவர் எதற்காகவோ உன்னை அழைத்து வரச் சொன்னார். அதற்காகத்தான், நான் ஆள் அனுப்பினேன். அப்பா நீயும் இந்த ஆசனத்தில் உட்காரு," என்றாள்.

இளவரசர் தாய் சொன்ன உடனே உட்கார்ந்தார். அது சமயம் குருவின் குழந்தைகள் ஐந்தும், குரு பத்தினியும் அவ்விடம் இளவரசர் வருமுன்னதாகவே வந்துநின்றுகொண்டிருப்பதையும், இளவரசர் வந்து உட்கார்ந்திருப்பதையும் கண்டு, குரு ராணியைப் பார்த்து, "அம்மா, இப்போது பார்த்தீர்களா! நாம் இங்கிருந்து இரண்டு ஆள் தானே அனுப்பினோம். நாம் என்ன சொல்லிவிட்டோம். இப்போது நடந்திருக்கும் விபரங்கள் தெரிகிறதா! நான் இன்னும் விபரமாய் எடுத்துச் சொல்லவேண்டுமோ?" என்றார்.

ராணி:—"எங்கள் குருவே, எனக்கு இன்னும் ஒன்றும் மனதிற்குப் புலப்படவில்லை. ஆனபடியால், இன்னும் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா, நாம் ஆட்களிடம் என்ன சொல்லி அனுப்பினேம்; எனது பாரியையும், தங்கள் குழந்தையையும் ராணி பார்க்க வேண்டுமாம் என்று தானே! என் குழந்தைகளை எல்லாம் கூட்டிவரச் சொல்லவில்லையே. அப்படி வந்தாலும் என் குழந்தைகள் வந்திருக்கிற விபரத்தையும், தங்கள் குழந்தை வந்திருக்கிற விபரத்தையும் பாருங்கள். தங்கள் குழந்தை உதித்தது நல்ல நாளும் நல்ல நட்சேத்திரமும் ராஜ லக்ஷணத்திற்குப் பொருந்தியதும், வயது 120-ம், குணம் தகப்பனுருக்கு மேலானதும், குடிகளின் பேரில் அன்பு, நீதி முறை வழுவாதவருயும், அடுத்தவர்கள் பார்த்தால், பார்த்தவுடன். தாங்கள் சொல்வதே சரி என்று சொல்லும் தன்மையும் பொருந்திய காலத்தில் கூடி கருத்தரித்தவர் அம்மா. இப்படி இருக்கக்கூடிய குழந்தைகள் தரிக்கும் காலங்களை நானும் தினம், தினம் கவனித்துக் கொண்டேதான் வருகிறேன். இதன் விபரங்களை இன்னும் தெளிவாய்ச் சொல்கிறேனம்மா."

"இதை விட்டுவிட்டு என் மனையாட்டி கூப்பிட்ட நேரங்களிலெல்லாம் நான் போய் கூடியிருந்து பிறந்த குழந்தைகள் ஐந்தும் இப்போது கூப்பிடாமலேவந்து நிற்கின்றதைப்பாருங்கள். இந்த குழந்தைகளுக்குச் சரியான ஆயுசும் கிடையாது. நல்ல சுகமும் கிடையாது, நல்ல சாப்பாடும் கிடையாது. அவர்களின் வாழ்க்கை இன்னபடி தான் நடக்கும் என்று எனக்கும் தெரியாது. அது ஏன், அப்படி என்று கேட்கு முன்னமேயே சொல்கிறேன் அம்மா. அதன் காரணம் நான்

என் மனைவியிடம் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டாள். அடி பெண்ணே இன்னின்னபடி நடந்தால் இன்னது நடக்கும் என்று சொன்னால், அவள் என்னை என்ன சொல்லுகிறாள், நீங்கள் தான் கடவுளோ! நீங்கள் தான் சுமையை சுமக்கப் போகிறீர்களோ, அல்லது என் வயிற்றில் நல்லதாய் செய்துகொண்டு போய் அவ்விடம் வைக்கப் போகிறீர்களோ! அதெல்லாம் நீங்கள் சொன்னால் கேட்கமாட்டேன். நான் கூப்பிட்டால் நீங்கள் கண்டிப் பாய் வரத்தான்வேண்டும். நீங்கள் கூப்பிட்டால் என் திரேகத்திற்கு சௌகர்யமாயிருந்தால் வருவேன், இல்லா விட்டால் தங்களுக்கு இது தான் வேலையோ, எனக்கு கை வலிக்குது முதுகு நோகுது என்று ஏதாவது ஒரு குறையைச் சொல்லி விடுகிறது அவள் வழக்கம். அவள் கூப்பிட்ட நேரத் தில் போய் ஜெனித்த இக் குழந்தைகளுக்கு இன்னது தான் நடக்கும் என்று கணக்கு அறியமுடியாதம்மா. ஆனபடியால், நான் என்ன செய்வது, அவள்சொன்னபடி கேளாவிட்டால் சாப்பாட்டுக்குத் திண்டாட்டமாய்ப் போய் விடும்.''

"அதற்காக, நாம் தான் எல்லாம் கற்றும் இப்படிக் கெட் டுப்போனாலும், பிறர் நல்லா யிருக்கட்டு மென்று எனக்குத் தெரிந்தவரை சொல்லுவது வழக்கம். அது எப்படி யெனில் 'ஈன்ற மாட்டுக்குப் பால் இல்லை' என்ற முதியோர் வாக்குப் படி படித்தவர்களுக்கு அதன் பலன் கிடைப்பது கஷ்டம். அதைக் கேட்பவர்களுக்கு பலன் கிடைக்கிறது. ஈன்ற ஒரு பசுவானது தன் திரேகத்திலிருந்து சுமார் 1படி முதல் 3 படி பால் வரை கொடுக்கிறது. அதைக் கறக்கக் கூடியவன் இவ்வளவு பால் கொடுத்ததே என்று அந்த பால் கொடுத்த மாட்டுக்கு கொஞ்சமாவது கொடுக்கிறதில்லை. இதன் தன்மைபோல் உலகம் நடக்குதம்மா.''

"அதிலும் தங்களிடம் என் குடும்பத்திற்கும் எனக்கும் வேண்டிய திரவியத்தை வாங்கித் தின்று கொழுத்திருக்கிறேன். தங்கள் குடும்பம் இன்னும் எவ்வளவு மேலாக வர வேண்டும் என்று எனக்குத் தெரிந்த வரை தினம் ராஜாவுக்குச் சொல்லி அதன்படி நடக்கக் சொல்கிறேனம்மா. இன்னும் தங்களுகுச் சாவகாசம் ஏற்படும்போது இதின் விபரத்தைக் கேட்டால், முன்னோர்கள் சொல்லிவந்ததின்படி நடக்காமல் எல்லாம் நம்மள் செயல் என்று எண்ணி உலகத்தில் தரித்த குழந்தைகள் பூருவுக்கும், அவைகள் தரித்த நேரத்திலிருந்து அந்தக் குடும்பம் விருத்தியடைவதற்கும், சமமாய் இருப்பதற்கும், கெட்டுப் போவதற்கும், குழந்தை தரித்தவுடன் அந்தத் தாய் மரணமடைவதற்கும், குழந்தைகள் பிறந்த நாள் முதல் அதன் ஆயுசு பரியந்தம் நோயுடனிருப்பதற்கும், பிறந்த குழந்தைகள் ஊமையாயும், நொண்டியாயும், திரேக அவயவங்கள் ஊனமாயிருப்பதெல்லாம் ஒவ்வொரு குடும்பங்களிலும் அவரவர்கள் நடத்தையே காரணம். இரண்டு பேர்களும் எந்தக் காரியத்தையும் ஒத்து செய்தால்த்தான் அது நடைபெறும். தவறிநடந்தால் தவளையும் எலியும் உறவிருந்தால் அது எத்தன்மையோ அத்தன்மையாய் உலக மானிடர்கள் கெட்டு அலேந்து திரிய வேண்டும்."

ராணி:—"என் குல குருவே! தாங்கள் இது வரையில் சொல்லி வந்ததையும் நேரில் பிரதிஷ்டமாய் காண்பித்ததையும் கவனிக்கும்போது எங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் கடவுளுக்குச் சமானமாய் தங்களைச் சொல்லவேண்டுமே ஒழிய வேறில்லை. உலகத்தில் எந்த மாதிரி நடந்தால், மானிடர்கள் க்ஷேமமடைவார்கள் என்ற விபரத்தையும் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா! தாங்கள் கேட்டதற்கு நான் கற்றதையும், அதின்படி அனுபவத்தில் கண்ணாரப் பார்த்ததையும் விபரமாகச் சொல்கிறேன்."

"இந்த 25000 மைல் சுற்றளவுள்ள பூமியில் மூன்று பங்கு தண்ணீரும், ஒரு பங்கு மேடான தரை பாகமும் கடவுளால் உண்டாக்கப்பட்டு, நாமும் உலகத்திலுள்ள ஜீவராசிகளும் அதில் வாசஞ் செய்துகொண்டு வருகிறோம். அதில் மூன்று பங்கு ஜலம் என்று சொல்லக்கூடிய தண்ணீருள்ள பாகத்திற்கு சமுத்திரம் என்று பெயர். அந்த சமுத்திரத்தில் இருக்கக்கூடிய ஜலம் கெட்டது. அதை கெட்ட தண்ணீர் என்று சொல்வதற்குக் காரணம் அந்தத் தண்ணீர் ஆபத்துக்குக் குடிக்க உதவாததினால்த்தான். ஆனால், அந்த தண்ணீர் இல்லாவிட்டால் நாம் உயிருடன் இருக்கமுடியாது. அப்படி நம் உயிரைக் காப்பாற்றக் கூடிய தண்ணீரை நம் உயிருக்கு ஜீவாதாரமான பொருள் என்று சொல்ல என் மனம் இடம் தருகிறது. அந்தத் தண்ணீரை பாத்தியில் கட்டி அது காய்வு ஏற்பட்டு, கட்டியாகிய பின் உடைத்து உப்பாக்கி நாம் எந்த ஆகாரம் செய்தாலும் அதில் கொஞ்சம் சேர்க்காவிட்டால், ஆகாரத்தை உட்கொள்ள முடியாது. அது கொஞ்சம் சேர்ந்தவுடன் ருசி ஏற்பட்டு அந்த ஆகாரம் உடலுக்குள் போய் ஜீரண சக்தியாகிறது. அதனால் தான் அத் தண்ணீரை ஜீவத்தண்ணீர் என்று சொல்ல என் மனம் வந்தது. இதே மாதிரி உலகத்தில் நடப்பதெல்லாம் ஒரு வகைக்கு நன்மையாகவும் ஒரு வகைக்கு தீமையாகவும், அவரவர் நினைப்பின்படி அவரவர் கண்ணுக்குத் தெரிந்ததை மனதிற்குச் சொல்ல, அந்த மனமானது அதைப் பகுத்தறிந்து காலத்திற்குத் தக்கபடி அறிவானது தனது ஏவலாட்களை வேலை ஏவி அதன்படி செய்து முடிக்கிறது."

ராணி:—"என் குருவே! தாங்கள் சொன்னதின் அர்த்தம் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. விபரமாய்ச் சொல்ல வேண்டும்."

குரு:—"அம்மையே, சொல்கிறேன் கேள். அதாவது ஒரு மனிதன் ஒரு மாமரத்தினடியில் வெயிலுக்காக உட்கார்ந்து கொண்டிருக்கும்போது அவனுடைய கண்கள் மேலே பார்க்க, அந்த மாமரத்தில் நன்ருய்ப் பழுத்துத் தொங்கிக் கொண்டிருக்கிற பழங்களைக்கண்ட கண்ணானது மனதிற்குச் சொல்லியது, மனமானது உடனே கைகளுக்கும், கால்களுக்கும் சொல்லியது. கைகளும் கால்களும் மனம் சொன்னவுடன் அந்த மாமரத்தில் ஏறிப்பழத்தைப் பிடுங்கி, கீழே போட்டுவிட்டு கீழே இறங்கி மாம்பழத்தை கையால் எடுத்து வாயில் வைத்து பற்களால் கடித்து, நாவினுல் ருசி பார்த்து, சித்தூர் என்று சொல்லக்கூடிய ஊருக்கு அந்த மாம்பழத்தை அனுப்பி விடுகிறது. அந்த சித்தூரில் உள்ள ஜீவராசிகளும் மிஷின்களும் அதை அறைத்து அதிலுள்ள சத்துக்களை சாப்பிட்டு அதில் மீதப்படுவதை வெளியே மலமாயும் நீராயும் தள்ளி விடுகிறது."

ராணி:—"என் குருவே! தாங்கள் சொன்னது விந்தையிலும் விந்தையா யிருக்கிறது. நாம் சாப்பிடும் ஆகாரம் ஒரு ஊருக்குப் போகிறதா? அதில் மிஷின்களும் ஜீவராசிகளும் இருக்கிறதா? அவைகள் அதை அறைத்து அதிலுள்ள சத்துக்களை எடுத்துக் கொள்கிறதா? அதன் விபரமும் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா! நாம் சாப்பிடும் ஆகாரத்தை நம் உடலுக்குள்ளிருக்கும் மிஷின்கள் மூன்று மணி நேரத்திற்குள் பூருவையும் அறைத்து கெட்டியாக்கும்போது இரத்த

மாகவும், விந்துவாகவும், மலமாகவும், தண்ணீருகவும், ஆகார மாகவும் ஐந்து வகையாய்ப் பிரித்து அவ்விடமுள்ள ஜீவராசி களுக்கு ஆகாரத்தையும், நரம்புகள் வழியாய் இரத்தத்தை யும், விந்துவை ஒரு பையிலும், மலத்தை ஒரு பாதை வழி யாயும், நீரை ஒரு பாதை வழியாயும், ஆறு மணி நேரத்தில் அது வேலை செய்து முடித்து விடுகிறது. அந்த உடலுக்குள் இருக்கின்ற மிஷின் மாதிரி உலகத்தில் வேறு கிடையாது. அதெப்படியெனில், உலகத்திலுள்ள மிஷின்கள் நெல்லை அறைக்கவோ, ஆட்களை ஏற்றிக்கொண்டு போகவோ, பருத் தியை விதை எடுக்கவோ, பஞ்சை நூல் ஆக்கவோ, நூலைத் துணியாக்கவோ இன்னும் மற்ற வேலைகளை செய்யக்கூடும். நாம் சாப்பிடும் ஆகாரத்தையும் எந்த மிஷினில் போட்டா லும் அறைத்து விடுமே ஒழிய அதிலுள்ள சத்தை இரத்த மாக்கவோ, தண்ணீருகப் பிரிக்கவோ, மலமாகப் பிரிக்கவோ முடியாது. ஆனதினுல் ஒவ்வொரு ஜீவராசிகளிலுள்ள மிஷின் களுக்கு மேலான மிஷின் ஒன்றும் கிடையாது."

"அம்மா! இதுவரையில் சொல்லிவந்ததெல்லாம் உலகத்தில் மேடான பாகத்தில் ஜீவித்திருக்கும் ஜீவராசி களின் மிஷின்களைப் பற்றிச்சொல்லி வந்தேன். இன்னும் அந்த சமுத்திர ஜலத்தில் வாசம் செய்துகொண்டிருக்கிற ஜீவராசிகளின் மிஷினைப்பற்றி கொஞ்சம் சொல்கிறேன்."

"அம்மா! சமுத்திரத்தில் திமிங்கலம் என்ற ஒரு ஜந்து சுமார் 30 அடி சுற்றளவும், 100 அடி நீளமும், தனக்கு நிகரில்லையென ஜந்துக்களுக்கெல்லாம் மிகப் பெரிதென்று வாசம் செய்கிறது. அடுத்தது முதலை. அதற்கு அடுத்தது மற்ற மீன்களும், தவளைகளும், ஆமைகளும், பாம்புகளும், பறக்கும் மீன்களும், நீர் யானைகளும், நீர் மனிதர்களும்,

காக்கா சிப்பிகள் என்ற பூச்சிகளும், சமுத்திரத்திற்குள்ளேயே பெரிய மலைகளும், அதில் புல் பூண்டு செடி கொடி, மரங்களும், சங்குப் பூச்சிகளும், நாம் மாலையாக அணிந்து கொண்டிருக்கிற முத்துக்கள் உற்பத்தியாகக்கூடிய முத்துப் பூச்சிகளும் இச் சமுத்திரத்தில் தான் வாசம் செய்துகொண்டிருக்கிறது."

ராணி:—"என் குருவே! நான் அணிந்திருக்கும் இந்த முத்துச் சரமானது சமுத்திரத்திலா விளைந்தது? அதிலும் உப்புத் தண்ணீரிலா இந்த முத்து விளைந்தது? அதன் விபரத்தைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா! தாங்கள் கேட்பது சரி. அதன் விஷயத்தைச் சொல்கிறேன். சமுத்திரத்திலே முத்துச் சிப்பி என்று ஒரு விதமான பூச்சிகள் வாசம் செய்கிறது. அப்பூச்சியானது தனக்குப் பருவகாலம் வந்துவிட்டதென்று தெரிந்தவுடன் மழை எப்போது பொழியுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். மழை சப்தம் கேட்டவுடன் சுமார் 500 அடிகளுக்குக் கீழிருக்கிற அச் சிப்பியானது தண்ணீர் மட்டத்திற்கு வந்து, தன் உடலைத் திறந்து மழைத் துளியில் ஒன்று தன் உடலுக்குள் விழுந்ததும், குபீர் என்று மூடிக் கொண்டு, உள்ளேபோய் அந்த ஒரு சொட்டு மழைத் துளியை தன் திரேகத்திலிருக்கிற மிஷின் கருவியால் நன்று யறைத்து, அதை கடுகு பிரமாண்டமாய் சிறியதாக்கி கெட்டிப்படுத்தி, 12 வருஷங்களானதும் கடுகு அளவாயுள்ள முத்துத் தண்ணீரை ஒரு சுண்டக்காய் பெருமானமுள்ள முத்தாய் யாவரூலும் புகழத் தக்கதாகச் செய்து விடுகிறது. மனிதர்கள் நீரில் மூழ்கி அச்சிப்பியை எடுத்து, அதைக் கொன்று முத்தை எடுத்து விற்பனை செய்து, அதிலிருந்து

எத்தனையோ ஜீவகோடி ஜனங்கள் ஜீவனம் செய்துகொண்டு வருகிறார்கள் அம்மா."

அந்த முத்தை தனவந்தர்களும், தங்களைப் போன்ற அரச குடும்பத்திலுள்ளவர்களும், அதற்குப் பெருமான கிரயம் கொடுத்து வாங்கி அதை ஆபரணமாக அணிகிறார்கள். ஒரு சொட்டு மழைத் தண்ணீரானது முத்துச் சிப்பியில் விழுந்தால் விலை மதிப்புள்ள முத்தாகிறது. அதே ஒரு சொட்டு மழைத் தண்ணீர் தாமரை இலையில் விழுந்தால், அந்த முத்தின் வடிவத்தைக் காட்டுகிறது. அந்த ஒரு சொட்டு மழைத் தண்ணீர் கீழே விழுந்தால் உருப்படியில்லாமல் போய் விடுகிறது.

"அம்மா, இன்னும் அந்த முத்தானது 12 வருஷம் சென்று நன்றாய் விளைவாகுமுன் மனிதர் கைக்கு அகப்படுவதும் உண்டு. அப்படி 4, 6, 8, 10 வருஷங்களாய் ஒரு சொட்டு மழைத்துளியை வைத்திருந்த சிப்பிகளைக்கொன்று பார்க்கும்போது $\frac{1}{8}$, $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ விளைவுள்ள முத்துக்களும் கிடைத்து, அதில் அதிகப்பிரயோசனமில்லாமல், கொஞ்சம் பிரயோசனம் அடைவதுமுண்டு. இன்னும் சில மழைத் துளியே அறியாத கன்னிப்பருவம் உள்ள முத்துச் சிப்பிகளையும் மனிதர்கள் எடுத்து, அதில் முத்து இல்லாமல் ஏமாற்றம் அடைகிறவர்களுமுண்டு. ஓர் அறிவுள்ள முத்துப் பூச்சியானது தனக்குப்பருவகாலம் வந்தது என்று தனக்குத் தானே தெரிந்தவுடன் ஒரு சொட்டு மழைத் தண்ணீரை தன் உடலுக்குள் கிரஹித்து அதை 12 வருஷம் வளர்த்து அதைச் சுண்டக்காய்ப் பெருமானமுள்ள முத்தாக்குகிறது.

"இது நிற்க, ஒரு மரம் உண்டாக்க வேண்டுமானால் ஒரு முதிர்ந்த விதையை எடுத்து அதை பக்குவமாய் காய

வைத்து மழை காலத்தில் சரியான இடத்தில் ஊன்றி வைக்கிறோம். அது முளைத்து செடியாகி, மரமாகி, கிளையாகி, பூவாகி, பிஞ்சாகி, காயாகி, பழமாகி மரம் வைத்தவர்களுக்கு பலன் கொடுப்பதுடன் அந்த விதைமாதிரி பதினாயிரக்கணக்கான விதைகள் உண்டாகிறது. அப்படியிருக்க, ஆறறிவுள்ள மனிதர்கள் குழந்தை வேண்டுமென்று தன்னிடமுள்ள இன்னவிதை என்று தெரியாத விதையை தினம் விதைத்த இடத்திலேயே விதைத்துக்கொண்டிருப்பதால் அந்த விதை ஒன்றின் மேல் ஒன்றாய் அமுக்கி முளைக்காமல் போய் விடுகிறது. அந்த ஓர் அறிவுள்ள முத்துச் சிப்பிகளுக்கு இருக்கக்கூடிய அறிவுகூட ஆறறிவுள்ள மனிதர்களுக்கு இல்லை. அப்படி அறிவுள்ள மனிதர்களுக்குத் தப்பித்தவறி கிடைத்தாலும் 12 வருஷம் விளைவுள்ள முத்தைப்போல் ஆயிரத்தில் ஒருவருக்கொன்றும், 200 பங்கு சமமும், 200 பங்கு அதற்குக் கொஞ்சம் குறைவாகவும், 200 பங்கு கொஞ்சம் மத்திபமும், 200 பங்கு அதற்கும் குறைவாகவும், 100 பங்கு இன்னும் குறைவாகவும், 99 பங்கு ரெம்ப மோசமான நிலைமையாகவும் கிடைக்கிறது.''

மேற்சொல்லிய கன்னிகழியாத முத்துச்சிப்பி கிடைத்து அதில் முத்து இல்லாமல் கஷ்டப்படுகிறவர்களைப் போல் உலகத்தில் சிலர் கஷ்டப்படுகிறார்கள் அம்மா.

ராணி:—“தாங்கள் இதுவரை சொல்லி வந்ததெல்லாம் கேட்டு என் மனம் அளவு கடந்த ஆனந்தமடைகிறது. எலியும் தவளையும் உறவுகொண்டிருந்தால் எப்படிக் கெட்டுப் போகுமோ அதே மாதிரி கெட்டுப்போவார்களென்றதின் விபரம் சொல்லவேண்டும்.''

குரு:—"அம்மா, சமயபுரம் என்ற ஊரின் மேல் பக்கத்திலுள்ள சாத்தங்குளத்தில் காருங்கன் என்ற தவளையும் அக் குளக்கறையின் பொந்தில் வாரங்கன்னி என்ற ஓர் எலியும் வாசம் செய்து கொண்டு வருங்காலத்தில், தவளையானது பகலில் மேட்டுக்கு வந்த சமயம் எலிப் பொந்தைப் பார்த்து, ஓ, எனது ஆசையின் அன்பே, என்று சப்திக்கும் போது, பொந்துக்குள் இருந்த எலி தவளையின் சப்தம் கேட்டவுடன் வெளியே வந்து வாருங்கள் என்று தவளையை வரவேற்று, இரண்டும் ஒன்று சேர்ந்து உட்கார்ந்துகொண்டு நடந்ததையும், நடந்து கொண்டிருப்பதையும், இனி நடக்கப் போகும் காரியங்களையும், தினமும் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். ஒரு நாள் பெண் எலியானது தவளையைப் பார்த்து நாம் இருவர்களும் இவ்வளவு நேசத்துடனிருந்து என்ன பிரயோசனத்தை அடைந்தோம். ஒற்றுமை என்பது இவ்வுலகத்திற்கு எப்படித் தெரியும். கண்டிப்பாய் நீ என்னை திருமணம்செய்து கொள்ளவேண்டுமென்றது. அது கேட்ட தவளை சற்று நேரம் யோசனை செய்து அதற்கென்ன திருமணம் செய்து கொள்வோமென்று சொல்லி வாய் மூடுமுன் எலியானது தன் பொந்துக்குள் போய் சுமார் 2 முள நீளமுள்ள கந்தல் துணி ஒன்றை எடுத்து வந்து தவளையிடம் கொடுத்து, நாம் தாலி கட்டிக்கொள்வதற்காக இதில் ஒரு நுனியை உன் காலிலும், மற்றொரு நுனியை என் காலிலுமாகக்கட்டு என்று சொல்லிற்று. தவளையும் அதற்குச் சம்மதித்து இரண்டும் ஆளுக்கொருகாலில் கட்டிக்கொண்டு ஒன்றின் மேல் ஒன்றாய் விழுந்து புறண்டு சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருக்கும் சமயம் ஓர் கெருட பட்சியானது அங்கு வந்து உட்கார்ந்தது. அதைப் பார்த்த தவளை பயந்து தண்ணீரில் குதித்

தது. எலியும் தவளையின் பின்னேயே போக, தண்ணீருக்குள் மூச்சு அடக்க முடியாமல் கொஞ்ச நேரத்திற்குள் செத்து மிதந்து விட்டது. எலி மிதந்து கொண்டிருப்பதை அக்குளத்தின் மேல் பறந்து வட்டமிட்டுக்கொண்டிருந்த பருந்து, உடனே கீழே தாவி எலியைத் தூக்கிக்கொண்டு மேலே சென்றது. தண்ணீருக்குள் இருந்த தவளையினது கால் கட்டுண்டபடியால் ஐயையோ, ஐயையோ என்று சத்தம் போட்டுக்கொண்டே பருந்தின்கீழ் தொங்கிச் சென்றது. தவளை சத்தம் கேட்ட இன்னொரு பருந்து வேகமாய்ச் சென்று அதை இறக்கையால் அடித்து, கால்களால் கெட்டியாய்ப் பிடித்து, இழுத்துக்கொண்டு போய் தின்றுவிட்டது."

"இதன் மாதிரியாக உலகத்திற்கு ஔவையார் சொன்ன வாக்கின்படி சேராத இடந்தனிலே சேரவேண்டாம் என்ற பாட்டின் கருத்தை யறியாமல் உலகத்தில் பொருளையோ அல்லது அழகு சௌந்தர்யத்தையோ அல்லது மன ஆசாபாசமான நேசத்திலோ பின்வரும் காரியங்களை யோசனை செய்யாமல், மனம் கொண்டது மாளிகை என்ற எண்ணத்துடன் திருமங்கல்யதாரணம் செய்து, சதிபதிகள் ஒத்துவாழாமல் கொஞ்சகாலத்தில் ஒற்றுமைத் தாழ்வு ஏற்பட்டு, கீரியும் பாம்பும்போல் சதிபதிகள் நாள் தவறாமல் சச்சரவு செய்து கொண்டிருக்கும்போது, அக்கம் பக்கமிருக்கும் ஆண்களும் பெண்களும் அங்கு வந்து கூடி அவர்களுக்குப் புத்திமதி சொல்லிக்கொண்டிருக்கிற நோக்கத்துடன், அவர்களிருக்கும் நிலைமையைப் பார்த்து, அதில் ஒருவன் அந்தப் பெண்ணை தனியாய் அழைத்து நீ ஏன் அவனிடம் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாய், ஏன் தினம் அடிபட்டுக் கொண்டிருக்கவேண்டும், என்னிடம் ரூ. 5000 கைவசமிருக்கிறது. அதில் உனக்கு ரூ. 2000-க்கு

நகையும் ரூ. 100-க்கு சேலையும் வாங்கித்தருகிறேன். நாம் இருவரும் உன் புருஷன் கண்ணுக்குத் தெரியாமல் பல மைலுக்கப்பால் போய்ச் சுகமாய் வாழலாம் என்று தனிமையாய்ச் சொன்னவுடன், அவள் அதற்கு உடன்பட்டு அறியாத ஊர்களுக்குச் சென்று கையிலிருந்த பணம் செலவானவுடன் குடிக்கக் கஞ்சியில்லாமலும், உடுக்கத் துணியில்லாமலும், படுக்கப் பாயில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள்.''

''மேலும், ஒரு பெண் அந்த ஆடவனை பஞ்சாயத்துக்கென்று போய் ஞாயம் சொல்லுகிறவள்போல் தனிமையாய் அழைத்து, நீ ஏன் அவளை கட்டிக்கொண்டு தினம் சண்டை சச்சரவு செய்து கஷ்டப்படுகிறாய், என்னிடம் ரூ.3000-க்கு நகையும், ரூ. 1000 ரொக்கமும் இருக்கிறது. அதைக் கொண்டு நாம் இரண்டு பேர்களும் கண்ணுக்கு எட்டாத இடத்திற்குப் போய் சுகமாக வாழலாம் என்று அவள் சொல்ல, அதற்கு அவன் உடன்பட்டு, அவள் மையலில் விழுந்து, அன்றிரவே புறப்பட்டு அறியாத ஊர்களில் போய் கையிலிருந்த நகை ரூபாய்கள் சிலவாகிற வரையில் சந்தோஷமாய்க் காலம் கழித்து பிறகு சம்பாதிக்க வழியில்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறதையும் பார்க்கிறோம்.''

ராணி:—''என் குருவே! உலகத்தில் பூக்கக்கூடிய மரங்கள் காய்க்காமலிருக்க நாம் கேட்டதில்லையே! அப்படியிருக்க சில பெண்கள் மட்டும் மாதாமாதம் பூத்தும் அது கருத்தரிக்காமல் மலடாய்ப் போவதின் காரணத்தைத் தெளிவாய்ச் சொல்ல வேண்டுகிறேன்.''

குரு:—''அம்மா! தாங்கள் கேட்ட கேள்வி மிகவும் மேன்மையானது. உலகத்தில் பூக்கக்கூடிய மரங்களில் காய்க்காத மரம் கிடையாது. அப்படியிருக்க உலகத்திலுள்ள

பெண்கள் பூருவும் மலடாய்ப் போயிருக்கிருர்களா? அதுவு மில்லே. அதில் கணக்கெடுத்தால் 100-க்கு 20 மலடா யிருக்குமே ஒழிய மற்ற பெண்கள் எல்லாம் மலடாவதற்குக் காரணமில்லே. மலடாய்ப் போவதற்குக் காரணம் சொல்கி றேன். உலகத்திலுள்ள மரங்களில் பெண்களுக்குச் சமமாய் சொல்லக்கூடியது தென்னே மரம். அம் மரமானது மாதம் ஒரு தடவை தேங்காய்க்காக ஒரு பூவும், பூவைக் காப்பாற்ற ஒரு மட்டையையும், மாதா மாதம் தன் உடலிலிருந்து உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது. அம் மரத்தை கள்ளுக்கென்று மரமேறி இடம் ஒப்பித்து விட்டால், மரமேறி அதிலுள்ள பூவை முனேயில் சீவி, ஒரு கலயத்தை கட்டிவிட அது காய்க்கு என்று வந்த சத்தை அக் கலயத் தில் ரசமாய் வடித்து விடுகிறது. அதையும் நாம் பார்க்கி ருேம். அப்படிக் கள்ளுக்கென்று விடப்பட்டதால் அந்தப் பூ காய்க்காமல் போய் விடுகிறது. அதின் தன்மைபோல் குழந் தைக் கென்று மாதா மாதம் ஒரு பெண்ணிடம் பூக்கக்கூடிய பூவை, அவள் நாயகன் மரமேறி எப்படி தினம் தினம் அந்தப் பூவைச் சீவி கலயத்தைக் கட்டி விடுகிருனே அதன் படி ஒரு சொட்டு விந்து நின்று 100 வயது பயிர் உற்பத் தியாயிருக்க, அந்தப் பெண்ணே தினம் தினம் ஆலிங்கனம் செய்து அந்தப் பூவை காய்க்க விடாமல் தடுப்பது இவனே ஒழிய அந்தப் பெண்ணே மலடு என்று சொல்வதற்கு வேறு காரணம் கிடையாது. அவள் மலடாயிருப்பாளேயானல் மாதாமாதம் மாதவிடாய் ஆகாமலிருப்பாள். அவளே மலடி. மாதா மாதம் மாதவிடாய் ஆகக்கூடிய பெண் ஒருக்காலும் மலடாகமாட்டாள். அதில் இவன் விதை விதைப்பது சரி யில்லேயே ஒழிய அவள் மேல் ஒருவிதமான குற்றமும் கிடையாது அம்மா.”

# அத்தியாயம் 5.

## கால நிர்ணயப் பலன்.

**ராணி:**—என் குருவே! தாங்கள் இப்போது சொல்லி வந்ததைக் கவனிக்கும்போது உலகத்திலுள்ள மானிடர்கள் எல்லாம் ஒவ்வொரு சொட்டு விந்தில் உற்பத்தியாகியிருந் தால் ஒரே மாதிரி இல்லாமல் ஒருவர் கோடீஸ்வரனும், ஒருவர் லட்சாதிபதியாயும், ஒருவர் சுமாரான பணக்கார ருயும், ஒருவர் தினம் வேலை செய்தால் தான் ஜீவனம் நடத்துவதும், சிலர் ஜீவனத்துக்கே கஷ்டப்பட்டு அரை வயிறு சாப்பாட்டுக்கு அலைவதும், சிலர் திரேக அவயவங்கள் குறைந்தும் அலைவதின் காரணமென்ன ?''

**குரு:**—"அம்மா, தாங்கள் கேட்பது அபூர்வமான கேள்விதான். இவ்வுலகத்தில் தாங்கள் கூறியவாறு நடந்து கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அத் தன்மையானது அக் கருத்தரித்த நேர பலனே ஒழிய வேறில்லை. ஒரு குடும்பத்தில், ஒரு கருத்தரித்த நேரத்தி லிருந்து அக் குடும்பம் விருத்தி அடைவதையும், சில குடும் பத்தில் ஒரு கருத்தரித்த நேரத்திலிருந்து சமமாயிருப்ப தையும், இன்னும் சில குடும்பத்தில் ஒரு கருத்தரித்த நேரத் திலிருந்து கெட்டு அலைவதையும் பார்க்கிறோம். அவைக ளெல்லாம் அக் கருத்தரித்த நேரங்களை அனுசரித்தே இம் மூன்று விதமாய் உலகத்தில் நடைபெற்று வருகிறது. அவைகளை ஒருவரும் கவனிப்பதே கிடையாது. அது விபரங்களை பின்னால் சொல்கிறேன்.''

நிற்க, ஒரு வருடத்தில் 12 மாதத்தில் ஆடி மாதம் கரு உற்பத்தி செய்யக்கூடாது. மற்ற ஒவ்வொரு மாதத்திலும் 30 நாட்களில் 10 நாட்கள் நயமும், 10 நாட்கள் சமமும்,

10 நாட்கள் மிதமுமாயிருக்கிறது. அந்த 10 நாட்கள் நயத்தில், பெண்கள் தூரமான நாளிலிருந்து 6 நாளைக்குப்பின் 10 நாளைக்குள் அவர்களுக்கு சௌகரியப்பட்ட நாள் ஒன்றில் இரவு 10 மணிக்குமேல் $11\frac{1}{4}$க்குள் ஒரே தடவை ஒரு விதையை விதைத்து அந்த விதையை அடுத்த மாதம் பூக்கும் வரை எதிர்பார்த்திருந்து, போட்ட விதை முளைத்து விட்டதா என்று கவனித்து, அது முளைத்துவிட்டதென்று தெரிந்தால் அதிலிருந்து 5 மாதம் வரை அந்த விதைக்கு கைகால் முளைக்குமுன் எக்காரணத்தை முன்னிட்டும் அவளிடம் ஆண்கள் ஆலிங்கனம் செய்யக்கூடாது. அதன் பின் இருவர்களுக்கும் ஆசையிருந்தால் 6, 7 மாதத்தில் மாதம் ஒரு முறை அல்லது இரண்டு முறை சேரலாம். அதுவும் கெடுதிதானே ஒழிய நல்லதல்ல. மேல்க்கண்டபடி ஒரு சதிபதி சேர்ந்து நடப்பார்களேயானால் அவர்களுக்கு கெர்ப்பம் தரிக்குமென்பது நிச்சயம். அவளும் மலடாக மாட்டாள் அம்மா."

ராணி:—"தாங்கள் இதுவரை சொல்லியதைக் கவனிக்கும்போது பெண்கள் மலடு கிடையாது என்றும், ஆண்கள் அநுதினமும் விதை விதைப்பதில்தான் கெடுதி என்றும் கள்ளுக்கென்றுவிட்ட தென்னை மரத்தை ஒப்பிட்டுச் சொல்லியது உண்மையேயானாலும் ஒவ்வொருவருக்கும் பிறக்கும் குழந்தைகள் அற்ப ஆயுசுடனிருப்பதும், மத்தியில் இறந்து போவதும், முதிர்ச்சி அடையும் வரை இருப்பதையும் விபரமாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மையே! தாங்கள் கேட்பது விபரமான கேள்விதான். முன் சொல்லியபடி ஒரு மாதத்தில் நாட்கள் 30ல் மூன்றாய்ப் பிரித்து அதில் 10நாட்கள் உத்தமமானதும்,

10 நாட்கள் மத்திபமானதும், 10 நாட்கள் அதமமானதும் என்று கூறியபடி உத்தமமான 10 நாளில் ஒரு நாள் அவர்கள் சேர்ந்து கருத்தரித்திருந்தால், அக்குழந்தை தரித்த நாள் முதல் அக் குடும்பத்தில் தொட்டது விர்த்தியாகி அக் குழந்தை பிறக்கு முன் லாபகரமான சொத்துக்கள் கைக்குக் கிடைத்து, அதிலிருந்து தனவந்தனுயிருப்பதையும், அவனே அனுபோகத்தில் நமக்கு இவ்வளவு சொத்தும் சுகமும் இக் குழந்தை தரித்த நாள் முதலே என்று சந்தோஷமாய் அவர்கள் பேசிக்கொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம். இது நிற்க, மத்திபமான 10 நாளில் ஒரு நாள் அவர்கள் கூடி கருத்தரித்திருந்தால், அக் குழந்தை கருத்தரித்திருந்த நாள் முதல் அக் குடும்பத்தில் ஒரு விதமான லாபம் இல்லாமலும் நஷ்டங்கள் ஏற்படாமலும் சமமாக இருக்கிறதைப் பார்க்கிறோம். இது நிற்க, அதமமாகிய நாட்கள் 10-ல் ஒரு நாள் அவர்கள் கூடி கருத்தரித்திருந்தால் அக் கருத்தரித்த நாள் முதல் அக் குடும்பத்தில் தொட்டது விருத்தியாகாமல் அக் குழந்தை பிறக்கு முன் அவர்களிடம் இருந்த சொத்துக்கள் பூரா‌வும், பல வகையில் நஷ்டமாகி அக் குழந்தை பிறந்ததற்குக்கூட ம ரு த் து வ ச் சிலவுக்கில்லாமல் பிரத்தியில் யாசகம் வாங்கி சிலவு செய்து விட்டு அதன் பின் கூலி வேலை செய்து கால், அரை வயிற்று சாப்பாட்டுக்குக்கூட கிடையாமல் கஷ்டப்படும்போது அவர்கள் இக் குழந்தை தரித்த நாள் முதல் நமக்கு இவ்வளவு கஷ்டம் வந்ததென்று மனம் நொந்து பேசிக்கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்.''

''மேல்க்கண்ட மூன்று விதமாய் உலகத்தில் நடைபெற்று வருகிறது. இனி ஆயுள் விபரங்களைச் சொல்கிறேன். அதாவது உத்தமம் என்ற நாட்கள் 10-ல் முதல் நாளுக்கு கருத்தரித்திருந்தால் வயது 105, இரண்டாவது நாளுக்கு

வயது $101\frac{1}{2}$, மூன்றாவது நாளுக்கு வயது 98, நான்காவது நாளுக்கு வயது $94\frac{1}{2}$, ஐந்தாவது நாளுக்கு வயது 91, ஆறாவது நாளுக்கு வயது $87\frac{1}{2}$, ஏழாவது நாளுக்கு வயது 84, எட்டாவது நாளுக்கு வயது $80\frac{1}{2}$, ஒன்பதாம் நாளுக்கு வயது 77, பத்தாவது நாளுக்கு வயது $73\frac{1}{2}$. மேல் சொல்லிய உத்தமம் என்ற 10 நாட்களில் உற்பத்தியாகிய ஆண் அல்லது பெண் குழந்தைகளுக்கு இதன்படி ஆயுளும் நல்ல சுக க்ஷேமத்திலிருந்து அவர்கள் ஆயுசுபரியந்தமும் கெட்டவர்கள் என்று பெயர் எடுக்காமலும் அவர்களால் கூடிய வரை உலகத்திற்கு நன்மை செய்து அவர்கள் இறந்தாலும் இறவாதவர்கள் மாதிரி அவர்கள் பேர் வழங்கிக்கொண்டிருப்பதையும் பார்க்கிறோம் அம்மா, இன்னும் சொல்கிறேன் கேள்."

"மத்திபம் என்ற நாட்கள் 10-ல் முதல் நாள் அவர்கள் கூடி கருத்தரித்திருந்தால் வயது 70, இரண்டாவது நாளுக்கு வயது $66\frac{1}{2}$, மூன்றாவது நாளுக்கு வயது 63, நான்காவது நாளுக்கு வயது $59\frac{1}{2}$, ஐந்தாவது நாளுக்கு வயது 56, ஆறாவது நாளுக்கு வயது $52\frac{1}{2}$, ஏழாவது நாளுக்கு வயது 49, எட்டாவது நாளுக்கு வயது $45\frac{1}{2}$, ஒன்பதாவது நாளுக்கு வயது 42, பத்தாவது நாளுக்கு வயது $38\frac{1}{2}$. மேல் சொல்லிய மத்திபம் என்ற 10 நாட்களில் உற்பத்தியாகிய ஆண் அல்லது பெண் குழந்தைகளுக்கு இதன்படி ஆயுளும் அவர்கள் ஆயுள் பூராவும் வரவுக்குத் தகுந்த சிலவும் நடு நிலைமையில் அவர்கள் ஜீவனம் நடந்து ஒருவருக்கும் கெடுதி செய்யாமலும் நன்மை செய்யாமலும் அவர்கள் தனக்கு மரியாதையாய் நடந்துகொள்வதையும் பார்க்கிறோம். இன்னும் சொல்கிறேன் அம்மா."

அதர்மம் என்ற நாட்கள் 10-ல் முதல் நாள் கூடி கருத் தரித்திருந்தால் வயது 36, இரண்டாவது நாளுக்கு வயது $31\frac{1}{2}$, மூன்ருவது நாளுக்கு வயது 28, நான்காவது நாளுக்கு வயது $24\frac{1}{2}$, ஐந்தாவது நாளுக்கு வயது 21, ஆருவது நாளுக்கு வயது $17\frac{1}{2}$, ஏழாவது நாளுக்கு வயது 14, எட்டாவது நாளுக்கு வயது $10\frac{1}{2}$, ஒன்பதாவது நாளுக்கு வயது 7, பத்தாவது நாளுக்கு வயது $3\frac{1}{2}$. மேற்சொல்லிய அதமம் என்ற 10 நாட்களில் கூடி உற்பத்தியாகிய ஆண் அல்லது பெண் குழந்தைகளுக்கு இதன்படி ஆயுளும் தரித்திர திசையுடனும் பொய், களவு, குடி, கொலைகள், வேசித்தனம் செய்து அவர்களைப் பெற்ற தாய் தகப்பனர்களுக்கும் கெட்ட பேருகி குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பு என்று சொன்ன முதியோர் வாக்கின்படி உலகத்தில் நிந்தித்துப் பேசிக்கொண்டிருப்பதையும் பார்க்கிருேம்.

ராணி:—"என் குருவே, தாங்கள் இதுவரை சொல்லி வந்ததையும், இப்போது சொன்ன கால நிர்ணயக் கணக்குகளையும் கவனிக்கும்போது தாங்களே கடவுள் என்று என்னல் சொல்லமுடியும். ஆனல் தாங்கள் சொல்லிய 30 விதமான கெர்ப்பங்களின் தனித்தனி விபரம் சொல்ல வேண்டும்."

குரு:—"அம்மையே கேளுங்கள். உலகத்தில் முக்கியமானது உத்தமம் என்று சொல்லக்கூடிய நல்ல தினமான ஒன்றில் சதிபதிகள் கூடி அன்று கருத்தரித்தால் தாய் வயிற்றில் நின்ற முதல் மாதத்திலிருந்து தாயாருக்கு சௌகர்யமான சுக போகங்களும் தகப்பனருக்கு முன்னிருந்த வரவைக் காட்டிலும் பதின்மடங்கு லாபமும் கிடைக்கும். அக்குழந்தை பிறந்தவுடன் 32 லக்ஷணங்களும்

பொருந்தியதாயிருக்கும், கல்வியிலும் கடவுள் பக்தியிலும் சம்பாதிப்பதிலும், சுற்றத்தாருக்கு உதவி செய்வதிலும் பொது ஜனங்களுக்கு நன்மை செய்வதிலும் அக்குழந்தைக் குச் சமானமாய் ஒருவரையும் சொல்லமுடியாது, அக்குழந் தையைப் பெற்றவளே உலகத்தின் தாய்.''

இரண்டாவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந் தால் அக்குழந்தைக்கு 31 லக்ஷணங்களும் முதலில் சொல் லியபடி குணுகுணங்களும், தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான 2-வது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு ஒன்பது பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

மூன்ருவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந் தால் அக்குழந்தைக்கு 30 லக்ஷணங்களும் பொருந்தி முதலில் சொல்லியபடி குணுகுணங்களும், தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான 3-வது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு எட்டுப் பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

நான்காவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந் தால் அக்குழந்தைக்கு 29 லக்ஷணங்களும் பொருந்தி குழந்தை முதலில் சொல்லியபடி குணுகுணங்களும் தகப்ப னுருக்கு உற்பத்தியான 4-வது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு ஏழு பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

ஐந்தாவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந் தால் அக்குழந்தைக்கு 28 லக்ஷணங்களும் பொருந்தி முத லில் சொல்லியபடி குணுகுணங்களும் தகப்பனுருக்கு அக் குழந்தை உற்பத்தியான 5-வது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு ஆறு பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

ஆருவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந் தால் அக்குழந்தைக்கு 27 லக்ஷணங்களும் பொருந்தி

முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான ஆருவது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு ஐந்து பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

ஏழாவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந்தால் அக்குழந்தைக்கு 26 லக்ஷணங்களும் பொருந்தி முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான ஏழாவது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு நாலு பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

எட்டாவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந்தால் அக்குழந்தைக்கு 25 லக்ஷணங்களும் பொருந்தி முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான எட்டாவது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு மூன்று பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

ஒன்பதாவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந்தால் அக்குழந்தைக்கு 24 லக்ஷணங்களும் பொருந்தி முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான ஒன்பதாவது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு இரண்டு பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

பத்தாவது தினத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகியிருந்தால் அக்குழந்தைக்கு 23 லக்ஷணங்களும் பொருந்தி முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனுருக்கு அக்குழந்தை உற்பத்தியான பத்தாவது மாதத்திலிருந்து வரவு ஒன்றுக்கு ஒரு பங்கு அதிகமாயும் கிடைக்கும்.

இதுவரையில் சொல்லி வந்தது உத்தமம் என்ற 10-நாட்களின் பலன்களைச் சொல்லியிருக்கிறது. இனிமேல் மத்திபம் என்று சொல்லக்கூடிய நாட்கள் 10-ன் விபரங்களையும் சொல்லுகிறேன்.

மத்திபம் என்று சொல்லக்கூடிய முதல் தினத்தில் கூடி கெர்ப்பம் உற்பத்தியானால் அக்குழந்தை அதிக லக்ஷணமில்லாமலும் உற்பத்தியான நாள் முதல் அக்குடும்பத்திற்கு லாப நஷ்டமில்லாமலும் 3வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும். அக்குழந்தை ஒருவருக்கும் கெடுதி செய்யாமலும் தன்னால் உலகத்தாருக்கு என்ற உதவியும் செய்யும்.

இரண்டாவது தினத்தில் கூடி கெர்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடி குணாகுணங்களும் தகப்பனாருக்கு அக்குழந்தை பிறந்த 6 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

மூன்றாவது தினத்தில் கூடி கெர்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடி குணாகுணங்களும் தகப்பனாருக்கு அக்குழந்தை பிறந்த 9 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

நான்காவது தினத்தில் கூடி கெர்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடி குணாகுணங்களும் தகப்பனாருக்கு குழந்தை பிறந்த 12 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

ஐந்தாவது தினத்தில் கூடி கெர்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடி குணாகுணங்களும் தகப்பனாருக்கு குழந்தை பிறந்த 15 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

ஆறாவது தினத்தில் கூடி கெர்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடி குணாகுணங்களும் தகப்ப

5

னருக்கு அக்குழந்தை பிறந்த 18 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

ஏழாவது தினத்தில் கூடி கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனருக்கு அக்குழந்தை பிறந்த 21 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

எட்டாவது தினத்தில் கூடி கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனருக்கு அக்குழந்தை பிறந்த 24 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

ஒன்பதாவது தினத்தில் கூடி கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனருக்கு அக்குழந்தை பிறந்த 27 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

பத்தாவது தினத்தில் கூடி கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடி குணகுணங்களும் தகப்பனருக்கு அக்குழந்தை பிறந்த 30 வயதிற்குமேல் கொஞ்சம் லாபமும் கிடைக்கும்.

அதமம் என்ற 10 நாட்களின் விபரம் சொல்லுகிறேன்.

முதலாவது தினத்தில் கொர்ப்பம் உற்பத்தியானல் அக்குழந்தை உற்பத்தியான நாள் முதல் தொட்டது விருத்தியாகாமலும் கொஞ்சம் கொஞ்சமாய் நஷ்டமாகியும் அக்குழந்தைக்கு வயது 30 முடியுமுன் முன்னேர்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரவும் போய்

அதற்குமேல் அவனும் அவனைப் பெற்ற தாய் தகப்பனும் கெட்டு அல்லவார்கள்.

இரண்டாவது தினத்தில் கொ்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 27-முடியுமுன் முன்னோர்கள் சேகரித்து வைக்கப் பட்டிருந்த சொத்துக்கள் பூரா்வும் போய்விடும்.

மூன்றாவது தினத்தில் கொ்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 24 முடியுமுன்,முன்னோர்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரா்வும் போய்விடும்.

நான்காவது தினத்தில் கொ்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 21 முடியுமுன், முன்னோர்களால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரா்வும் போய்விடும்.

ஐந்தாவது தினத்தில் கொ்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 18 முடியுமுன் முன்னோர்களால் சேகரித்து வைக்கபட்டிருந்த சொத்துக்கள் பூரா்வும் போய்விடும்.

ஆறாவது தினத்தில் கொ்ப்பம் உற்பத்தியானால் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 15 முடியு முன் முன்னோர்களால் சேகரித்து வைத்திருந்த சொத்துக் கள் பூரா்வும் போய்விடும்.

ஏழாவது தினத்தில் கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 12 முடியு முன் முன்னோர்களால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரவும் போய்விடும்.

எட்டாவது தினத்தில் கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 9 முடியுமுன், முன்னோர்களால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரவும் போய்விடும்.

ஒன்பதாவது தினத்தில் கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 6 முடியுமுன், முன்னோர்களால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரவும் போய்விடும்.

பத்தாவது தினத்தில் கொர்ப்பம் உற்பத்தியானல் முதலில் சொல்லியபடியும் அக்குழந்தைக்கு வயது 3 முடியுமுன், முன்னோர்களால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் பூரவும் போய்விடும்.

"அம்மா, மேலே சொல்லி வந்த அதர்மம் என்ற 10-ல் கொர்ப்பம் உற்பத்தியானல் மேலே சொல்லியபடி நடப்பதுடன் அக்குழந்தைகள் உலகத்திலுள்ள கெட்ட காரியங்களுக்கெல்லாம் நான் தான் என்று முன்னே நின்று அதில் வரும் பலவித கஷ்டங்களை அனுபவிப்பார்கள்."

காலநிர்ணயப்படி உலகத்தில் ஜெனிக்கும் குழந்தைகளின் வயதும், குணமும், சுகமும், சம்பாத்தியமும் இதன்படி நடைபெறும்.

| நிர். | வயது | குணம் | தாய், தகப்பனருக்கு | மாதம் 1-க்கு வரவு ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| 1 | 105 | நல்லது | சுகம் | 3000—0—0 |
| 2 | 101½ | ,, | ,, | 2000—0—0 |
| 3 | 98 | ,, | ,, | 1500—0—0 |
| 4 | 94½ | ,, | ,, | 1000—0—0 |
| 5 | 91 | ,, | ,, | 750—0—0 |
| 6 | 87½ | ,, | ,, | 600—0—0 |
| 7 | 84 | ,, | ,, | 500—0—0 |
| 8 | 80½ | ,, | ,, | 400—0—0 |
| 9 | 77 | ,, | ,, | 300—0—0 |
| 10 | 73½ | ,, | ,, | 200—0—0 |
| 11 | 70 | சுமார் | சுமார் | 150—0—0 |
| 12 | 66½ | ,, | ,, | 125—0—0 |
| 13 | 63 | ,, | ,, | 100—0—0 |
| 14 | 59½ | ,, | ,, | 90—0—0 |
| 15 | 56 | ,, | ,, | 80—0—0 |
| 16 | 52½ | ,, | ,, | 70—0—0 |
| 17 | 49 | ,, | ,, | 60—0—0 |
| 18 | 45½ | ,, | ,, | 50—0—0 |
| 19 | 42 | ,, | ,, | 40—0—0 |
| 20 | 38½ | ,, | ,, | 30—0—0 |
| 21 | 35 | கெடுதி | கெடுதி | 25—0—0 |
| 22 | 31½ | ,, | ,, | 22—8—0 |
| 23 | 28 | ,, | ,, | 20—0—0 |
| 24 | 24½ | ,, | ,, | 18—0—0 |
| 25 | 21 | ,, | ,, | 16—0—0 |
| 26 | 17½ | ,, | ,, | 14—0—0 |
| 27 | 14 | ,, | ,, | 12—0—0 |
| 28 | 10½ | ,, | ,, | 7—8—0 |
| 29 | 7 | ,, | ,, | 0—0—0 |
| 30 | 3½ | ,, | ,, | 0—0—0 |

ராணி:—"குருவே தாங்கள் இதுவரை சொல்லிவந்த கால நிர்ணயப்படியும் அதற்கு தனித்தனி விபரங்களேயு கேட்டு என்மனமானது அதிக ஆனந்தத்திலும் ஆனந்தம் அடைகிறது. தாங்கள் சொல்லி வந்ததில் பெண்கள் மாத விடாயான 6 நாட்களுக்குப்பின் 10 நாட்களுக்கு கணக்கு சொல்லியிருக்கிறீர்கள். மாதவிடாயான, 6 நாளேக்குள் ஒரு சதிபதி சம்போகம் செய்யலாமா? அப்படிச் செய்தால் அதனால் ஏற்படும் கெடுதியையும் சொல்ல வேண்டும்."

குரு:—"அம்மா, தாங்கள் கேட்ட கேள்விக்கு சரியான பதில் தெரிவிக்கிறேன். ஒரு பெண் தூரமானவுடன் அவ்விடத்தை விட்டு விலகி, தனியான இடத்தில் ஒதுங்கி தன்னே யாரும் தொட்டுவிடாமலிருக்கவேண்டியது. அப்படி நாலுதினங்கள் இருந்து ஸ்நானம் செய்து வீட்டில் வேலே செய்யலாம். ஆரும் நாள் மரு ஸ்நானம் செய்து அவள் எந்த இடத்திற்கும் செல்லலாம். அதுவரை அந்தப் பெண்ணுக்கு ஒருவிதமான அசூசை உண்டு. அந்தப் பெண் இரண்டு தடவை ஸ்நானம் செய்து கொண்டவுடன் அவளுக்கு சுத்த மான திரேகம் ஆகிவிடுகிறது. ஆனபடியால் பெண்களிடம் ஆண்கள் தூரமான 6 நாளேக்குள் செல்லக்கூடாது. அப்படி 6 நாளேக்குள் அவர்கள் சேர்ந்து கருத்தரிக்குமேயானால் அதில் வரும் நஷ்டங்களே கீழே சொல்லுகிறேன். ஒரு பெண் தூரமானவுடன் அவளுடைய நிழல் ஒரு மனிதன் மேல்படுமானல் ஒரு விதமான காங்கையானது அந்நிழலின் வழியாக வந்து அம்மனிதனுக்கு அன்று சாயந்திரத்திற்குள் சூடு ஏற்பட்டு அவன் கண்ணில் சிகப்பாய்தென்பட அதற்கு வைத்தியம் செய்யும்போது, தீட்டடி நிழல் பட்டிருக்கிற தென்று, சாம்பிருணி புகை பிடிக்க நிவர்த்தியாகும்."

அது நிற்க, ஒரு பூஞ்செடியோ அல்லது முளைக்கக் கூடிய செடிகளிடத்திலோ தூரமான பெண்ணின் நிழலோ அல்லது மூச்சோ படுமாகில், சூடுபட்டு அந்தச் செடி தழையாமல் கருகிப்போய்விடுகிறதையும் பார்க்கிறோம்.

"அப்படி நடக்கக்கூடிய தூரமான 6 நாட்களுக்குள் ஒரு சதிபதி சேர்ந்து ஆலிங்கனம் செய்து கருத்தரித்தால் அக்கருத்தரித்த நாள் முதல் தகப்பனுருக்கும் தாயாருக்கும் சூட்டினுல் ஏற்படக்கூடிய நோய்கள் ஆரம்பித்து அவர்கள் தலைசாயும் வரை பலவிதமான நோய்கள் உற்பத்தியாகி கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அந்த உள்ளத்தில் தரித்த ஆண் அல்லது பெண் குழந்தையானது பிறந்த $3\frac{1}{2}$ வயதிற்குள் அது தேரைவாய் கரும்புபோல் மெலிந்து நோயில் அழுந்தி தாய் தகப்பனுருக்கு சிரமத்தைக் கொடுத்து அது உயிர்விடும் அம்மா."

ராணி:—"என் குருவே தாங்கள் இப்போது சொல்லி வந்ததின்படி உலகத்தில் பாதிக்கு மேலிருக்கும். அது எப்படியெனில், அக்குழந்தைகள் பிறந்த நாள்முதல் 10, 15, 30, 40, 50 நாளில் அவைகளுக்கு வரும் சீக்கை வைத்தியர்களிடம் காண்பித்தால் இக்குழந்தைக்கு கெற்பச்சூடு என்றும் இதற்கு ஒரு வருஷம் சென்றால்தான் ஆயுசு சொல்ல முடியுமென்றும், சில குழந்தைக்கு இதற்கு இரண்டு வருஷம் சென்றால்தான் ஆயுசு சொல்லமுடியுமென்றும் மற்றொரு குழந்தைக்கு மூன்று வருஷம் சென்றால்தான் ஆயுசு சொல்ல முடியுமென்றும், மற்றொரு குழந்தைக்கு $3\frac{1}{2}$ வருஷம் சென்றால்தான் ஆயுசு சொல்லமுடியுமென்றும் எத்தனையோ குடும்பத்தில் நானும் அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். தாங்கள் இப்போது சொல்லிவந்த விபரங்களையும் கேட்கும்

போது என் மனதில் அதன் விபரங்களெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய்த் தெரிகிறது. ஆனால் தாங்கள் முன் சொல்லிவந்த தூரமான 6 நாள் கழித்து அதற்குமேல் 10 நாளைக்குள் அச்சதிபதி சம்போகம் செய்தால் அந்த 10 நாளில் எந்த நாள் ஆண் குழந்தையும், எந்த நாள் பெண் குழந்தையும் உற்பத்தியாகும். அதின் விபரங்களைச் சொல்லவேண்டும்."

குரு:—"அதன் விபரங்களையும் சொல்கிறேன். அதாவது ஒரு பெண் மாதவிடாயான 6-ம் நாள் கழித்து 7-ம் நாள் சேர்ந்தால் பெண் குழந்தையும், 8-ம் நாள் சேர்ந்தால் ஆண் குழந்தையும், 9-ம் நாள் சேர்ந்தால் பெண் குழந்தையும், 10-ம் நாள் சேர்ந்தால் ஆண் குழந்தையும், 11-ம் நாள் சேர்ந்தால் பெண் குழந்தையும், 12-ம் நாள் சேர்ந்தால் ஆண் குழந்தையும், 13-ம் நாள் சேர்ந்தால் பெண் குழந்தையும், 14-ம் நாள் சேர்ந்தால் ஆண் குழந்தையும், 15-ம் நாள் சேர்ந்தால் பெண் குழந்தையும், 16-ம் நாள் சேர்ந்தால் ஆண் குழந்தையும் தரிக்கும் அம்மா."

# அத்தியாயம் 6.

## சற்புத்திரர்கள் உற்பத்தி.

ராணி:—"என் குருவே, தாங்கள் சொல்லி வந்ததின்படி ஒரு சதிபதி சேர்ந்தால் மேல்க்கண்டபடி ஆண் அல்லது பெண் உற்பத்தியாகிறது. கால நிர்ணயப்படி உத்தமம், மத்திபம், அதர்மம் என்ற குழந்தைகளில் ஏதாவது ஒன்று தானே பிறக்கும். ஒரு சதிபதி உத்தமமான குழந்தை வேண்டுமென்று நினைத்தால் அதற்கு எந்தப்படி நடந்தால் அந்த உத்தமமான குழந்தை பிறக்கும். அதற்கு விபரம்

தாங்கள் இதுவரையில் சொல்ல வில்லையே. ஆனதால், அதை எனக்கு விபரமாகச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா, தாங்கள் கேட்பது சரி. அதற்கும் விபரமாகச் சொல்லுகிறேன். இப்போது நடப்பது கலியுகம். இதில் தற்சமயம் இவ்வுலகத்தில் நல்லது 5-ல் ஒரு பங்கும், சமமானது இரண்டு பங்கும், கெட்டது இரண்டு பங்குமாய் நடந்து கொண்டு வருகிறது. அதன்படியே ஒரு மனிதனுக்கும் ஒரு நாளில் பகல் 12 மணி நேரத்தில் $2\frac{1}{4}$ மணி நேரம் நல்லதும், $4\frac{7}{8}$ மணி நேரம் சமமும், $4\frac{7}{8}$ மணி நேரம் அதர்மமும்; அதே மாதிரி இரவிலும் நல்லது $2\frac{1}{4}$ மணி நேரமும், மத்திபம் $4\frac{7}{8}$ மணி நேரமும், அதர்மம் $4\frac{7}{8}$ மணி நேரமும் நடந்து கொண்டே வருகிறது. அதிலும் மேலே சொல்லிய கால நிர்ணயப்படி ஒரு மாதத்தில் 30 நாட்களில் 10 நாட்கள் நல்லதும், 10 நாட்கள் மத்திபமும், 10 நாட்கள் கெட்டதாயிருக்கிறதை மூன்ருய்ப் பிரித்து அதன் விபரமும் நல்லது என்று சொல்லக் கூடிய நாளில் நல்ல நேரமாகிய $2\frac{1}{4}$ மணியையும் தனித்தனி கால நிர்ணயம் போட்டு காண்பிப்பதுடன் அவரவர்கள் பேர் ராசிகளையும் விபரமாகச் சொல்கிறேன்."

## அதர்மம் என்ற 10-நாட்களின் விபரம்.

| | |
|---|---|
| கார்த்திகை | உத்திரம். |
| உத்திராடம் | மிருகசீரிடம் |
| சித்திரை | அவிட்டம் |
| புனர் பூசம் | விசாகம் |
| பூரட்டாதி | அமாவாசை |

மேல்க்கண்ட நக்ஷத்திரங்கள் வரக்கூடிய நாட்கள் 10-ம் கெட்டவை என்றும், இந்த நாட்களில் குடும்பஸ்தனுயிருக்

கக்கூடியவர்கள் யாத்திரைபோக, மனைகட்ட, நல்ல காரியங்கள் முதலில் ஆரம்பிக்கவோ, திருமங்கல்யதாரணம் செய்யவோ மற்ற எவ்விதமான காரியங்களும் ஆரம்பிக்கக்கூடாது. நல்ல காரியங்களை அவர்கள் செய்வார்களேயானால் அக்காரியங்கள் முன்னேற்றத்துக்கு வராமலும், முடிவு அடையாமலும், தொட்டது விர்த்தி யடையாமலும் நஷ்டமாகிக் கொண்டே வரும்.

## மத்திபம் என்ற 10-நாட்களின் விபரம்.

ஒரு மாதத்தில் வரக்கூடிய வாரம் 4-ல் ஞாயிற்றுக் கிழமை, திங்கள் கிழமைகள் 8-ம், அஷ்டமி, நவமி வரக் கூடிய நாள் 2-ம் ஆக நாள் 10-ல் மத்திப நாட்கள். மேல்க் கண்ட நாட்கள் ஒரு மாதத்தில் கட்டுப்பட்டது. ஆனதால் 2-நாட்களில் ஒரு சதிபதி சம்போக லீலை செய்யக்கூடாது. அப்படி ஒரு சதிபதி கூடி அதில் கருத்தரித்தால் அக் கருவில் உற்பத்தியான குழந்தை கால நிர்ணய கணக்குப்படி வயதில் மேற் சொன்ன கணக்குப்படி சம்பாதிப்பதும் ஆயுளும் உண்டாகும்.

முதலில் சொல்லிய நக்ஷத்திரங்களும், இந்த நாளும் கூடினல், அதில் கரு உற்பத்தியானல் அக்கருத் தரித்த 10-மாதத்திற்குள் தகப்பனையாவது தாயாரையாவது கொன்று தான் குழந்தை பிறக்கும்.

பின்வரும் கால நிர்ணயமானது ஒவ்வொரு ஆண் அல்லது பெண் பெயரின் முதல் எழுத்திலிருந்து அவர்களுக்கு ஏற்பட்ட நல்ல நாளைக் கவனித்து பகலில் இருக்கக்கூடிய $2\frac{1}{4}$ மணி நல்ல நேரத்தில் நல்ல காரியங்களையும், இரவில் இருக்கக்கூடிய $2\frac{1}{4}$ மணி நல்ல நேரத்தில் உத்தமம் என்ற கரு உற்பத்தியும் செய்துகொள்ளவேண்டியது.

அ, ஆ என்ற சப்தம் வரக்கூடிய முதலெழுத்துள்ள பெயருக்கு கீழ்க்கண்ட நாட்களே உத்தமமானது.

| பூர்வபக்ஷம் | | அமரபக்ஷம் | |
|---|---|---|---|
| பகல் | இரவு | பகல் | இரவு |
| செவ்வாய் மணி $10\frac{3}{4}$-1 | செவ்வாய் மணி 6-$8\frac{1}{4}$ | செவ்வாய் மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | செவ்வாய் மணி $10\frac{3}{4}$-1 |
| புதன் மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | புதன் மணி $10\frac{3}{4}$-1 | புதன் மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | புதன் மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ |
| வெள்ளி மணி 6-$8\frac{1}{4}$ | வெள்ளி மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | வெள்ளி $10\frac{3}{4}$-1 | வெள்ளி மணி $10\frac{3}{4}$-1 |

இ, ஈ என்ற சப்தம் வரக்கூடிய முதலெழுத்துள்ள பெயருக்கு கீழ்க்கண்ட நாட்களே உத்தமமானது.

| பூர்வபக்ஷம் | | அமரபக்ஷம் | |
|---|---|---|---|
| பகல் | இரவு | பகல் | இரவு |
| செவ்வாய் மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | செவ்வாய் மணி $1\frac{1}{4}$-$3\frac{1}{2}$ | புதன் மணி 11-$1\frac{1}{4}$ | புதன் மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ |
| புதன் மணி $11\frac{3}{4}$-2 | புதன் மணி 6-$8\frac{1}{4}$ | வியாழன் மணி 6-$8\frac{1}{4}$ | வியாழன் மணி $10\frac{3}{4}$-1 |
| வியாழன் மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | வியாழன் மணி $10\frac{3}{4}$-1 | வெள்ளி மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | வெள்ளி மணி 6-$8\frac{1}{4}$ |
| சனி மணி 6-$8\frac{1}{4}$ | சனி மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | சனி மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | சனி மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ |

## உ, ஊ என்ற சப்தம் வரக்கூடிய முதலெழுத்துள்ள பெயருக்கு கீழ்க்கண்ட நாட்களே உத்தமமானது.

| பூர்வபக்ஷம் | | அமரபக்ஷம் | |
|---|---|---|---|
| பகல் | இரவு | பகல் | இரவு |
| செவ்வாய் மணி 6-8$\frac{1}{4}$ | செவ்வாய் மணி 8$\frac{1}{2}$-10$\frac{3}{4}$ | செவ்வாய் மணி 10$\frac{3}{4}$-1 | செவ்வாய் மணி 6-8$\frac{1}{4}$ |
| புதன் மணி 8$\frac{1}{2}$-10$\frac{3}{4}$ | புதன் மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ | புதன் மணி 6-8$\frac{3}{4}$ | புதன் மணி 3$\frac{3}{4}$-6 |
| வியாழன் மணி 10$\frac{3}{4}$-1 | வியாழன் மணி 6-8$\frac{1}{4}$ | வியாழன் மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ | வியாழன் மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ |
| வெள்ளி மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ | வெள்ளி மணி 10$\frac{3}{4}$-1 | வெள்ளி மணி 8$\frac{1}{2}$-10$\frac{3}{4}$ | வெள்ளி மணி 3$\frac{3}{4}$-6 |
| சனி மணி 3$\frac{3}{4}$-6 | சனி மணி 3$\frac{3}{4}$-6 | சனி மணி 3$\frac{3}{4}$-6 | சனி மணி 10$\frac{3}{4}$-1 |

## எ, ஏ என்ற சப்தம் வரக்கூடிய முதலெழுத்துள்ள பெயருக்கு கீழ்க்கண்ட நாட்களே உத்தமமானது.

| பூர்வபக்ஷம் | | அமரபக்ஷம் | |
|---|---|---|---|
| பகல் | இரவு | பகல் | இரவு |
| புதன் மணி 6-8$\frac{1}{4}$ | புதன் மணி 8$\frac{1}{2}$-10$\frac{3}{4}$ | செவ்வாய் மணி 6-8$\frac{1}{4}$ | செவ்வாய் மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ |
| வியாழன் மணி 8$\frac{1}{2}$-10$\frac{3}{4}$ | வியாழன் மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ | வியாழன் மணி 10$\frac{3}{4}$-1 | வியாழன் மணி 8$\frac{1}{2}$-10$\frac{3}{4}$ |
| வெள்ளி மணி 10$\frac{3}{4}$-1 | வெள்ளி மணி 6-8$\frac{1}{4}$ | சனி மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ | சனி மணி 6-8$\frac{1}{4}$ |
| சனி மணி 1$\frac{1}{2}$-3$\frac{3}{4}$ | சனி மணி 10$\frac{3}{4}$-1 | | |

## ஒ, ஓ என்ற சப்தம் வரக்கூடிய முதலெழுத்துள்ள பெயருக்கு கீழ்க்கண்ட நாட்களே உத்தமமானது.

| பூர்வ பக்ஷம் | | அமர பக்ஷம் | |
|---|---|---|---|
| பகல் | இரவு | பகல் | இரவு |
| செவ்வாய் | செவ்வாய் | செவ்வாய் | செவ்வாய் |
| மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | மணி $10\frac{3}{4}$-1 | மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ |
| வியாழன் | வியாழன் | புதன் | புதன் |
| மணி 6-$8\frac{1}{4}$ | மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | மணி 6-$8\frac{1}{4}$ |
| வெள்ளி | வெள்ளி | வியாழன் | வியாழன் |
| மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ | மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ | மணி $8\frac{3}{4}$-11 |
| சனி | சனி | வெள்ளி | வெள்ளி |
| மணி $10\frac{3}{4}$-1 | மணி 6-$8\frac{1}{4}$ | மணி $3\frac{3}{4}$-6 | மணி $8\frac{1}{2}$-$10\frac{3}{4}$ |
| | | சனி | சனி |
| | | மணி $10\frac{3}{4}$-1 | மணி $1\frac{1}{2}$-$3\frac{3}{4}$ |

மேலே சொல்லப்பட்ட அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்ற சப்தம் உதிக்கக்கூடிய ஆண் அல்லது பெண் பெயரின் முதலெழுத்தின்படி வரக்கூடிய நாட்களில் மேல் சொல்லிய நல்ல நேரமாகிய $2\frac{1}{4}$ மணிக்கு (நிமிஷம் 135-க்கு) கால நிர்ணயப்படி $13\frac{1}{2}$ நிமிஷம் வீதம் பத்தாய்ப் பிரித்து முதல் $13\frac{1}{2}$ நிமிஷத்திற்கு கால நிர்ணயத்தில் சொல்லியபடி 1-ம், இரண்டாவது $13\frac{1}{2}$ நிமிஷத்திற்கு 2-ம், மூன்றாவது $13\frac{1}{2}$ நிமிஷத்திற்கு 3-ம், நான்காவது $13\frac{1}{2}$ நிமிஷத்திற்கு 4-ம், ஐந்தாவது $13\frac{1}{2}$ நிமிஷத்திற்கு 5-ம் இதின் மாதிரி $2\frac{1}{4}$ மணி நேரத்தை கால நிர்ணயத்தில் சொல்லியபடி 10 வரையிலுள்ள கணக்கை எடுத்துக்கொள்ளவும்.

மேல்கண்ட நல்ல நாட்களில் முன் சொல்லிய கெட்ட நக்ஷத்திரம் வந்து குறுக்கிட்டால் அந்த நாட்களை விலக்கி விடவேண்டியது. இதில் சொல்லியது நல்ல நேரம் தான் என்று ஒரு காரியமும் செய்துவிடக்கூடாது. அப்படி தவறி செய்து விட்டாலும் அக்காரியமானது மத்திபத்திற்கு வந்து சேருமேயொழிய கெடுதி ஒன்றும் ஏற்படாது.

ராணி:—"என் குருவே, தாங்கள் இதுவரையில் சொல்லி வந்தவைகளெல்லாவற்றையும் கேட்டு ஆனந்த மடைகிறேன். ஆனால் தாங்கள் சொல்லி வந்த நல்ல நாளி லிருக்கக்கூடிய $2\frac{1}{4}$ மணி நேரம் இரவில் அகால காலங்களி லும் இருக்கிறதே அதன்படியே, நடந்து கொள்கிறதா. அதில் இன்னும் சொல்ல வேண்டியதிருக்கிறதா? அதன் விபரங்களைச் சொல்ல வேண்டும்."

குரு:—"அம்மா, விபரமாய்ச் சொல்கிறேன். நன்றாய் கவனியுங்கள். அதாவது ஒரு சதிபதிக்கு ஆண் குழந்தை வேண்டுமென்றால், அந்த ஆடவனுக்கு மேல்க்கண்ட கால நிர்ணயத்தில் சொல்லியபடி இருக்கக்கூடிய நல்ல நேரத்தை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். அந்நாளில் கெட்ட நக்ஷத்திரம் இருக்கக்கூடாது. அப்பெண்ணுக்கு தூரமான 6 நாள் கழித்து இருக்க வேண்டும். அந்த ஆறு நாளைக்கு மேல் 16 நாளைக்குள் இருக்கக்கூடிய 10 நாட்களில் இரட் டைப்பட்ட நாளாய் கவனித்து அதிலிருக்கக்கூடிய $2\frac{1}{4}$ மணிக் குள் அவர்களுக்கு இஷ்டப்பட்ட தேவதைகளை வணங்கி ஒரே தடவை ஆண் விதையை விதைக்கவேண்டும். மேல்க் கண்டபடியே ஒத்தைப்பட்ட நாளில் ஒரே தடவை பெண் விதையை விதைக்க வேண்டும். அதிலும் இன்னும் ஒன்று சொல்லுகிறேன். மேல்க்கண்ட ஆண் அல்லது பெண் விதையை விதைப்பதற்கு $10\frac{3}{4}$ மணிக்குமேல் 1 மணி வரை

யில் சொல்லியிருக்கும் நந்நாளே மேலானது. அதிலும் $10\frac{3}{4}$ மணிக்குமேல் 11 மணிக்குள் விதை விதைப்பார்களே யானால் அதற்கு மேலானது உலகத்திலேயே கிடையாது. மற்றநேரங்களிலெல்லாம் தொழில் ஆரம்பிக்கவும், விபசாயம் செய்யவும், திருமாங்கல்யதாரணம் செய்யவும், யாத்திரை போகவும், நோயாளிகள் முதலில் மருந்து சாப்பிடவும் சகல விதமான நல்ல காரியங்களையும் செய்யலாம்.''

ராணி:—"என் குருவே, தாங்கள் சொல்லி வந்தவை களை அறிந்து கொண்டேன். ஆனால் மேல்க்கண்ட நேரம் ஒரு சதிபதிக்கு ஒரு மாதத்தில் இல்லாமலிருப்பதுண்டா?''

குரு:—"அம்மா அவைகளையும் சொல்கிறேன். ஒரு சதிபதிக்கு ஒவ்வொரு மாதத்திலும் மேல்க்கண்ட நேரமி ருக்கும், ஒவ்வொரு மாதத்தில் ஒரு சதிபதிக்கு பெண் குழந் தைக்குமிருக்கும், ஒவ்வொரு சமயம் ஆண் குழந்தைக்கு மிருக்கும், ஒவ்வொரு சமயம் ஆணுக்கும் பெண்ணுக்குமி ருக்கும், ஒவ்வொரு மாதத்தில் இல்லாமலுமிருக்கும், அவை களெல்லாம் அந்தப்பெண் மாதவிடாயானநாளே காரணம்.''

ராணி:—''என் குருவே, தாங்கள் சொல்வது சரி. பெண்கள் தூரமாவதிலும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா? எந்த நாளில் தூரமானல் நல்லது? அது விபரத்தையும் சொல்ல வேண்டும்.''

குரு:—''தாங்கள் கேட்டது சரி. அதில் கொஞ்சம் விஷயமிருக்கிறது. அதாவது ஒரு பெண் ஞாயிறு, திங்கள், அமாவாசை, பௌர்ணமி என்ற தினங்களில் தூரமானல் உத்தமமான குழந்தை உற்பவிக்க நல்லது. புதன், வியாழன் இந்நாளில் தூரமானல் மத்திபமான குழந்தை உற்பவிக்கும்.

செவ்வாய், வெள்ளி, சனி தினங்களில் தூரமானால் அதர்ம மான குழந்தை உற்பத்தியாகும்.''

ராணி:—“என் குருவே, தாங்கள் சொல்வது சரி. பெண்கள் தூரமாவதிலுமா இப்படியிருக்கிறது, இருக்கட்டும். ஆனால், ஒரு சதிபதிக்கு இரட்டைக் குழந்தை தரிப்பதின் காரணமென்ன ?''

குரு:—“அதன் விபரத்தையும் சொல்கிறன். அதாவது ஒரு சதிபதி, பெண் தூரமான 6-வது நாளில் கூடினால் அன்று விதைத்த ஆண் விதையும், 14-ம் நாள் கூடினால் அன்று விதைத்த ஆண் விதையும் அக்கருக் குழியில் சேர்ந்து, அக்கருகுழியானது 16-ம் நாள் நன்றாய் மூடிக் கொண்டு, அந்த இரண்டு கருவையும் வளர்த்து, அதற்கு வயது வந்தவுடன் இரண்டு குழந்தைகளும் சுமார் 1, 2 மணி நேரத்தில் முன்பின் பிறக்கும். மேல் சொல்லியபடி ஒத்தைப் பட்ட நாளாய் இரண்டுமிருந்தால் இரண்டு பெண் குழந்தை கள் பிறக்கும். மேல் சொல்லியபடி ஒரு நாள் இரட்டையும், மற்றொரு நாள் ஒத்தைப்பட்ட நாளிலும் சேர்ந்து இருப் பார்களேயானால் அதில் ஆணும் பெண்ணும் பிறக்கும்.''

ராணி:—“ஒரு சதிபதிக்கு கூண், குருடு, செவிடு, மொண்டியாய், ஊமையாய்ப் பிறப்பதின் காரணமென்ன?''

குரு:—“தாங்கள் கேட்பது சரி. ஒரு சதிபதியின் சம் போக காலங்களில் அவர்கள் இருவரும் ஒத்திருக்கும்போது திடீரென்று ஏதாவது சத்தம் கேட்டு, அதின் அதிர்ச்சியினால் திடுக்கிட்டு அதை விட்டுப் பிரிவார்களேயானால் அந்தநேரம் விதைத்த விதையானது சின்னாபின்னப்பட்டு $\frac{7}{8}$ திட்டம் கருக்குழியிலும், $\frac{1}{8}$ வாசி வெளியிலும் சென்று, அந்த $\frac{7}{8}$ திட்டம் விந்தானது அக்கருக்குழியில் வாசம் செய்து எந் தப்பாகம்கீழேசிந்தியதோ அந்தப்பாகமில்லாமல் பிறக்கும்.''

ஆனதால் ஒரு சதிபதி சம்போகம் செய்யக்கூடிய இடமானது பிறர் சப்தமில்லாமலும், அவரவர்களுக்குத் தக்கபடி கூடியவரை சுத்தமான இடமாயிருப்பதுடன், பெருமழை பெய்து கொண்டிருக்கும் நேரமும், பெருங் காற்று அடிக்கும் நேரமும் சம்போகத்திற்குத் தகுந்த காலமில்லை.''

# அத்தியாயம் 7.

## முற்காலமும் தற்காலமும்

ராணி:—''என் குருவே, தாங்கள் இதுவரை சொல்லி வந்த விஷயங்களையெல்லாம் கேட்டு மிக சந்தோஷமடைகிறேன். ஆனால், மேற்சொல்லி வந்த உத்தம புத்திரர்களைப் பெற ஒரு சதிபதிக்கு வயதின் விபரங்களைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்.''

குரு:—''அம்மா, விபரமான பதில் கூறுகிறேன். அதாவது முன் காலத்தில் நமது பெரியோர்கள் பெண்களுக்கு வயது 21-ம், ஆண்களுக்கு வயது 28-ம் கழிந்தபின் திருமாங்கல்யதாரணம் செய்து அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தையானது பிறந்த அன்று விடும் நீர் சுமார் 10 அடிவரை மேலே சென்று கீழே விழும். அப்படி நீர் விழுவதற்குக் காரணம் அக்குழந்தையின் தைரியமும் ஊக்கமுமே. ஊக்கத்திற்குக் காரணம் அக்குழந்தையைப் பெற்ற தாயாரே. அத்தாயாருக்கு அவ்வயது வந்த கணவன் விதைத்த விதையே காரணம்.''

முன் சொல்லிய வயது வந்த சதிபதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு வயது 100 முதல் 120 வரையில் சொல்லலாம். அப்படிச் சிலருக்கு வயது 100 வரையில் திடகாத்திர

மாயிருந்து அதற்குமேல் ஆகாரம் செல்லாமலும், உயிருனது சரீரத்தை விட்டுப் பிரியாமலும், நெஞ்சுக்கும் தொண்டைக்கும் இழுத்துக்கொண்டே 10 அல்லது 20 வருஷகாலம் கழித்துக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய பிள்ளைகள் அந்த வயது முதிர்ந்த தாய் தகப்பன்மார்களை பெரிய மண் குழுமை செய்து அதில் அவர்களை வைத்து பெரிய குழி தோண்டி அக்குழுமையை வைத்துப் புதைத்து விடுவது வழக்கம்.

அப்படியிருந்த காலமானது எப்படியிருக்கிறதென்றால் பெண்ணுக்கு 10 வயதிலும் ஆணுக்கு 15 வயதிலும் திருமணம் செய்து வைத்து விடுகிறார்கள். அச்சதிபதிகள் இளங் கன்று பயமறியாது என்ற தன்மையைப்போல் அவர்கள் சிற்றின்பத்தில் ஆழ்ந்து பிஞ்சில் பழுத்து உதிர்ந்த பழம்போலும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் 40 வயது வரையில் நீடித்திருப்பது கஷ்டம். அதற்கு வரும் நோய்களை கணக்கிட முடியாது. (ஆனபடியால் குழந்தையைப் பெற்ற தாய் தகப்பன்மார்களுக்கு என் அன்பான வார்த்தையைச் சொல்கிறேன்) பழையகாலம் மாதிரி இல்லாவிட்டாலும் கூடியவரை ஆணுக்கு வயது 21-ம் பெண்களுக்கு வயது 15-ம் ஆனபின் திருமாங்கல்யதாரணம் செய்யவும். அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் 50 முதல் 80 வயது வரையில் இருக்கும். அத்துடன் முன் அத்தியாயங்களில் சொல்லியபடி நடப்பார்களேயானால் கால நிர்ணயக்கணக்கின்படி நடக்கும். அக்குழந்தை 25மாதம் தாய்ப்பால் குடித்து வளரவேண்டும். அதற்குள் மறுகுழந்தைக்கு ஆசைப்படுவார்களேயானல் கைக்குழந்தைக்கு சுகக்கேடுண்டாகும். ஆனபடியால் குழந்தையைப் பெற்ற தாயே அது வகையில் ரெம்ப ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது.

ராணி:—"சதிபதிகள் குடும்ப வாழ்க்கையில் நடந்து கொள்ளும் விதத்தைக் கொஞ்சம் சொல்லவேண்டும்."

குரு:—"அதன் விபரத்தையும் சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள். சதிபதிகள் தாய் தகப்பனை விட்டுத் தனியாய் குடும்பத்தை நடத்தும்போது ஆணுக்குப் பெண் அடங்கியும், பெண்ணுக்கு ஆண் அடங்கியும் நடந்து கொள்ளவேண்டியது. ஒரு பதியை கட்டிய பெண் தன் தாய் தகப்பனிடம் தனக்கு வேண்டியவைகளை அவர்களிடம் கேட்டு வாங்கிக் கொண்டு எப்படி வணங்கி ஒடுங்கி நடந்து வந்தாளோ, அதேமாதிரி இனிமேல் நமக்கு தாயும் தகப்பனும் நம் கணவன்தான் என்று நடந்து கொள்ள வேண்டியது. அது எப்படியெனில், அப்பெண்ணுக்கு வயது 15-வரையில் வேண்டிய ஆகார வசதிகளும் துணிமணி வகைகளும் தாய் தகப்பனல் கொடுக்கப்பட்டும் திருமணமானவுடன் அவளுக்கு வேண்டிய ஆகாரம் துணிமணி வகைகள் கணவன் கொடுப்பதால் அதுவும் அவள் ஆயுள் பரியந்தம் கொடுப்பதால் கல்யாணமான பெண்ணுக்கு கணவனே தாயும் தகப்பனும் என்று சொல்வதுடன், ஒரு ஆடவன் தான் திருமாங்கல்யதாரணம் செய்து கொண்ட பெண்ணே இனி நமக்கு தாய் என்று நினைக்க வேண்டும். அது எப்படியெனில், அவன் பிறந்ததிலிருந்து தாயானவள் பால் ஊட்டி, அதன்பின் லேசான ஆகாரங்களையும் சேர்த்து, பிறகு கெட்டியான ஆகாரங்களையும் கொடுத்து வளர்த்து, வயது வந்தவுடன் ஒரு பெண்ணை விவாஹம் நடத்தி, இனிமேல் அவளும் நீயும் மனமொத்து குடும்பத்தை நடத்துங்கள் என்று ஒதுக்கி விடுகிறார்கள். அதன் பின் அவனுக்கு ஆயுள் பரியந்தம் ஆகார வசதிகள் அவள் செய்யக் கடமைப்பட்டிருப்பதால் அவளை அவன் தாய் என்று கருத

வேண்டும். அவர்களிருவர்களும் மேலே சொல்லியபடி நடப்பார்களேயானல் அவர்கள் அன்பை கடவுளாலும் பிரிக்கமுடியாது. மேற்படியார்கள் எப்போது கணவன் மனைவி என்று நினைக்க வேண்டுமென்றால் இப்புத்தகத்தில் கண்ட கால நிர்ணய கணக்கைக் கவனித்து அதில் நல்லது என்று சொல்லியிருக்கிற $13\frac{1}{2}$ நிமிஷத்தில் மட்டும் அவர்கள் சதிபதிகளாயிருந்து விட்டு, மற்ற காலங்களில் தாயும் பிள்ளையும் மாதிரி இருந்து, மூன்று வருஷத்திற்கொரு தடவை ஒவ்வொரு நாகரத்தினங்களாகப்பெற்று, வளர்த்து அதன்படி ஒன்பது தடவை மூன்று வருஷத்திற்கொரு தடவையாய்ச் சேர்ந்து ஒன்பது நவரத்தினங்களையும் பெற்று வளர்த்து இவ்வுலகத்திற்கே மேலான பதவியை அடைவார்கள்.

ராணி:—"என் குருவே, முன் காலத்தில் சில ரிஷிகள் ஒரு பெண்ணை லீலை செய்தவுடன் குழந்தைகள் உற்பத்தியாகி பிறப்பதின் காரணங்களைப்பற்றிச் சொல்லவேண்டும்."

குரு:—"தாங்கள் கேட்டது இதுவரையில் கேட்டு வந்த கேள்விகளுக் கெல்லாம் மேலானது. அந்த ரிஷிகள் என்று சொல்லப்பட்ட மகான்கள் பெண், பொன், மண் என்ற மூன்று ஆசைகளையும் வெறுத்து, தன்னையும் மறந்து,ஓரிடத்திலுட்கார்ந்து ஐம்புலன்களையும் அடக்கி, அன்ன ஆகாரங்களை வெறுத்து, நீர் மலத்தை நிறுத்தி, உட்கார்ந்த இடத்திலேயே வருஷக் கணக்காய் காலம் கழித்து, தன்னை உந்திக் கமலத்தில் உயிர் கொடுத்தவனென்று பொய் என்ற இரண்டு கண்களை மூடியும், ஞானக் கண்ணினல் அவனைத் தேடிக் கொண்டிருக்கும் காலங்களில், அந்த ரிஷியின் இந்திரியம் கட்டுண்டு உடலிலேயேயிருந்து அதற்கு எல்லா அவயவங்களும் உற்பத்தியாகிறதுடன் அந்த ரிஷியினுடைய

ஞானமெல்லாம் உண்டாகி அக்குழந்தை வெளியே வரமாட்டாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் காலத்தில் அக்கருவைப்படைத்த ஈசன் எங்கும் பராபரமாய் இருக்கக்கூடியவன் அக்குழந்தையை வெளியேற்ற எண்ணங் கொண்டு ஒரு பெண் வடிவாக வந்து, ரிஷிக்கு முன்பாக தவத்தைக் கெடுப்பதுபோல் அவர் முன்னின்று தன் மேல் இன்டாங் கொள்ளும்படி செய்து, அவரே அந்த தவத்தைவிட்டு விட்டு பெண் ஆசைகொண்டு ஒரு விதமான சந்தோஷத்தோடு லீலை செய்ய வரும்போது, அவர் உடலில் பல வருஷங்களாக உற்பத்தியாகி ஞானங்களெல்லாம் அறிந்த அக்குழந்தையின் கட்டை அவிழ்த்து விட்டு இப்பெண்ணிடம் லீலை செய்ய வரும் போது அது கீழே லெகுவாய் விழுந்து விடுவதே ஒழிய அப்பெண் அக்குழந்தையை பத்துமாதம் சுமந்து பெறுவது கிடையாது. ஆனபடியால் அப்பெண் வந்து, அவர் முன்னின்று, அவர் தவத்தை விட்டு இந்நோக்கத்தை அவருக்கு ஊட்டியவுடன் அக்குழந்தை லகுவாய்ப் பிறந்து விடுகிறது. அக்குழந்தை பிறந்தவுடன் அந்த ரிஷி திடுக்கிட்டு நாம் எந்த நோக்கத்தில் இருந்தோம், நமக்கு குடும்ப கஷ்டம் வந்து விட்டதே என்று எண்ணி உடனே அதை மறந்து அந்த இடத்தை விட்டு மறு இடம் சென்று மறுபடியும் தவம் செய்ய ஆரம்பிக்கிறது வழக்கம். அப்பெண்ணானவள் நமக்கு ஏன் இந்தத் தொல்லை என்று அவளும் அக்குழந்தையை அவ்விடமே விட்டு விட்டு மறைந்து போகிறது வழக்கம். அக் குழந்தையோ எல்லாவற்றையும் கற்று உணர்ந்து பிறந்தபடியால் இவ்வுலகத்தோர்க்கே மேலான பதவியை அடைவதுடன், அக்குழந்தையினால் உலகம் க்ஷேமம் அடைவதுண்டு. தற்காலத்திலும் காலையில் சேவல் கூவினவுடன் நாம் எழுந்திருந்து கோழி கூவி விட்

டது என்று நாம் எண்ணிக் கொள்வதின் தன்மையைப் போல், ரிஷிப் பிண்டம் ரத்தங்காது என்ற வாக்கியம்."

ராணி:—"சதிபதிகள் எவ்விதமிருந்தால் சுகமாக ஜீவித்து காலங் கழிக்க முடியும். அதன் விபரத்தைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"இதற்கென்ன தடை. அதன் விபரங்களைக் கூறுகிறேன். தற்கால நிலைமையோ சதிபதியானவுடன் அவர்களுக்கு உண்டான சந்தோஷத்திஞல் இடைவிடாமல் (அது யாதெனில்) பகல் இரவு என்றுகூட இல்லாமல் அவர்கள் சையோத்தியமாயிருந்து, ஒன்று அல்லது மூன்று வருஷத்திற்குள் அச்சதிபதியின் திரேகமும் கெட்டு சம்பாத்தியமும் கெட்டு முன்ஞேர்கள் தேடிவைத்திருந்த பொருளை மேல்க்கண்ட 3 வருஷத்திற்குள் தின்று குறைத்து விட்டு, வருகிற 4-வது வருஷத்தில் சத்துக்கு சத்தும்போய், கையிலிருந்த பொருளும்போய் நோய்வாய்ப் பட்டு வேலை செய்யப்போஞலும் செய்ய முடியாமலும், வீட்டிலே யிருந்தாலும் சாப்பாட்டிற்கு வழியில்லை என்ற கவலையால் மனம் நொந்து உடல் மெலிந்து அக்கவலையால் அவன் உயிர்விட, அதுகண்ட பெண்ணும் மனம் நொந்து இறந்து விடுகிறுள்."

ஒவ்வொரு சதிபதியும் மேலே சொல்லியபடி செய்யாமல், ஒருவனிடம் அடிமைத் தொழில் செய்து அவன் கொடுக்கும் கூலியை வாங்கிவந்து ஜீவனம் நடத்துவதைக் காட்டிலும் இழிவானது வேறென்றுமில்லை என்று அவனும் நம்மைப் போல ஒரு மனிதன் தானே நாம் மட்டும் அவன் சொல்லக் கூடிய வேலைகளை பொழுது முழுவதும் செய்து அவன் கொடுக்கும் கூலியைப் பெற்று நாம் ஏன் ஜீவனம் செய்ய

வேண்டும், அவன் மாதிரி நாமும் ஏன் இருக்கக்கூடாது என்ற எண்ணம் அவன் மனதில் உதித்த அந்நாளே அவனும் அந்த ஸ்தானத்திற்கு வந்து விடுவான். அதற்குக் காரணம் அவன் எண்ணமும், அதற்குத் தகுந்த ஊக்கமும் அவனுக்கு உண்டாகிவிடுகிறது. கீழே சொல்லியபடி நடப்பார்களேயானால் ஒருவனுக்கு ஒருவன் அடிமை என்ற வார்த்தையே உலகத்திலில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அதன் விபரங்களையும் சொல்கிறேன்.

வேளாளர் சிறப்பு.

அந்தணர்கள் கருமமுஞ் சகராசர் புசபலமு
மவனிவர்த் தகலாபமு
மனைவர்க்கு மேன்மையுந் தருமமுந் தானமு
மன்புமங் கையரின்பமும்
புந்திதெளி நியமமுஞ் சாத்திரமு மாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாத வுண்மையுங் கீர்த்திப்ர தாபமும்
புகழ்கின்ற தேவர்நிலையும்
விந்தைபுரி மானமுங் குலமரபு நீதியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர் குவளைபுனை காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றோ.

என்ற பாட்டின்படி உலகத்திலே (அந்தணர்கள் கருமமுஞ்) பிருமணர்கள் செய்யக்கூடிய யாக யக்ஞங்களும், (சகராஜர்புசபலமும்) ராஜாங்கத்துக்கு சேனை, சைனியங்களின் திறமும், (மவனிவர்த் தகலாபமும்) வியாபாரம் செய்து அதில் கோடிக் கணக்காய் லாபம் எடுத்தும், (மனைவர்க்கு மேன்மையுந்) உலகத்திற்கே நான் தான் மேலானவன் என்று தற்பெருமை கொண்டாடியும், (தருமமுந் தானமு) நான் தருமம் செய்

கிறேன், தானம் செய்கிறேன் என்ற பெருமையும், (மன்பு மங்கையரின்பமும்) தன்னைக்கட்டிய மனைவியிடம் என்னைப் பார்க்கிலும் யார் சம்பாதித்து இருக்கிறார்கள் என்று தற் பெருமை கொண்டாடுவதும், (புந்திதெளி நியமமுஞ்) என்னைப் பார்க்கிலும் புத்தியுடன் நியாயமாய் நடப்பதும் உலகத்திலே ஒருவரும் கிடையாதென்பதுவும், (சாத்திரமுமாகம புராணமொடு சகலகலையும்) பெண்ணே, உலகத்திலே சாத்திரங்களையும், புராணங்களையும் என்னைமாதிரி யார் படித்திருக்கிறார்கள் என்று சொல்வதும், (பொய்யாத உண்மையுங்) பெண்ணே, இவ்வுலகத்திலே பொய்யே சொல்லாதவன் யார் என்றால் நானே என்றும், (கீர்த்திப் பிரதாபமும்) இவ்வுலகத்திலே எந்த இடத்திலேயும் என்னுடைய நாமதேயத்தைச் சொன்னால் அவ்வார்த்தை கேட்டவுடன் என்ன அவரு! என்று சொல்லக்கூடிய கீர்த்தியும், (புகழ்கின்ற தேவர் நிலையும்) என்னைப் படைத்த கடவுள்கூட நான் கூப்பிட்டால் வருவார் என்றும், (விந்தைபுரி மானமுங்) பெண்ணே, என்னுடைய மனதில் இருக்கக்கூடிய எண்ணமானது மறு பெண்களை ஏறிட்டுப் பார்க்காமலும், (குலமரபு நீதியும்) பெண்ணே நம்முடைய ஜாதியும் அதன் மாதிரி நீதியும் உலகத்திலே வேறே கிடையாது என்றும், (விதரண முதற் சகலமும்) என்னைப்போல் புத்திமதியுடன் இன்னும் மற்றவித காரியங்களும், (வேளாளர் குவளைபுனை காராளர் தங்களுடை மேழியின் பெருமையன்றோ) மேலே சொல்லி வந்தவைகளெல்லாம் யாரால் உற்பத்தி என்று கவனிக்கும் போது உழுது பயிர் செய்து கொண்டிருக்கிற ஜனங்களினால் அல்லவோ மேல் சொல்லியவர்களுக் கெல்லாம் கீர்த்தி உண்டாகிறது. விபசாயம் செய்யக்கூடியவர்கள் ஒருவருக்கும் அடிமையாகமாட்டார்கள்.

மேலே சொல்லி வந்தது உலகத்தைப் பொருத்தது. இனிமேல் சதிபதிகள் சுகமாய் வாழ்வதற்கு முதலில் சொல்லுகிறேன். ஒரு சதிபதிக்கு மீ 1-க்கு வரவு ரூபாய் 20 வரக் கூடியதை அவர்கள் இருவரும் ஒத்துப்பேசி 5 பங்கு செய்து அதில் 4-பங்கை சிலவு செய்து, 1-பங்கை மீதம் செய்யக் கூடியவன் கூடியவரையில் அவன் சதிபதியான 21 வருஷத்திலிருந்து சம்பாதிக்கும் வயது 61 வரையில் அவன் மீதம் செய்து வைத்திருந்த அசல் ரூபாய் 2880. அந்த துகைக்கு வட்டி ரூபாய் 1200 ஆக வகை இரண்டுக்கு ரூபாய் 4000 மீதமாகி வருகிறது. அதை விட்டு விட்டு மாதம் 1-க்கு 20 ரூபாய் வரக்கூடிய ஒருவன் 1-மாதத்தில் ரூபாய் 24 வீதம் சிலவு செய்து வருவானாகில் அவன் 61 வயதில் அசலும் வட்டியும் சேர்த்து 4000 ரூபாய் கடன்காரனாகி அக்கடனுக்கு தன் முன்னோர்களால் சம்பாதித்து வைத்திருந்த நிலங்களையோ அல்லது வீடுகளையோ விற்று, அதுவும் காணாமல் தன் மனைவியிடம் இருந்த தங்க நகைகளையும் விற்றுக் கொடுத்து சாகும் தருவாயில் நாயினும் கேடாய் அலைந்து திரிவான். இதுபோல் அநேகம் மனிதர்கள் உண்டு. மேலே சொல்லியபடி ஒரு சதிபதி நடப்பார்களேயானால் அவர்களுக்கு வாழ்நாளில் கஷ்டம் என்பது கிடையாது.

மேலே சொல்லிய கீழ்கண்ட விபரத்துக்கு சிறு கதை ஒன்று சொல்கிறேன். காமாக்ஷிபுரம் என்ற ஊரில் காத்தலிங்கம் செட்டி என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு சுப்பம்மாள் என்ற பெண்ணை திருமணம்செய்து வருஷம் 3-ல் ஒரு ஆண் குழந்தையைப் பெற்று அக்குழந்தைக்கு சுப்பன் செட்டி என்று பெயர் வைத்து வளர்த்து வருங்காலத்தில் அச்சுப்பனுக்கு வயது ஐந்தாகும்போது காத்தலிங்கம் செட்டி இறந்து போய் விட்டான். அப்போது அவன் சம்

பாதித்து வைத்திருந்தது ரூபாய் 50. அதை வைத்துக் கொண்டு அவன் தாயான சுப்பம்மாள் கூலி வேலை செய்து தானும் தன் மகனும் ஜீவனம் செய்துவர சுப்பனுக்கு வயது 18 ஆகும்போது தாயும் இறந்து விட்டாள். அவனுடைய தாயிறக்கும்போது சுப்பனுக்குக் கிடைத்த அசல் ரூபாய் 50-ம் அதற்கு வட்டி ரூபாய் 50-ம் ஆக மொத்தம் ரூபாய் 100 தன் கையில் வைத்துக்கொண்டு நான் என்ன தொழில் செய்யட்டும் இதுவரை 3-பைசாகூட சம்பாதித்துக் கொண்டு வந்து நம் தாயிடம் கொடுத்து சாப்பிடவில்லையே. நாம் சும்மா, சும்மா ஊரைச் சுற்றி விட்டு வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோமே, இனி நாம் என் செய்வோம் என்று நினைத்து கவலைப்பட்டு மனம் தேறி, இவ்வூரிலில்லாத வியாபாரம் எது என்று கவனிப்போமென்று ஊர் பூரவும் சுற்றி வந்து, இந்த ஊரில் கண்ணாடிச் சாமான் கடை ஒன்று தான் இல்லை என்று மனதில் நினைத்தவுடனே ஊரை விட்டுப் புறப்பட்டு சென்னைபட்டணம் என்றடவுனுக்குப்போய் தன்னிடமிருந்த ரூ. 100-ல் ரூபாய் 85-க்கு கண்ணாடிச் சாமான்களாய் வாங்கிக் கொண்டு தன் ஊருக்கு வந்து கடை வீதியில் மாதம் 1-க்கு ரூ. 3-வீதம் வாடகை பேசி தான் வாங்கி வந்த சாமான்களை எல்லாம் அக்கடையில் ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கி நாம் கடையில் கீழே தரையில் உட்கார்ந்து வியாபாரம் செய்யக்கூடாதென்று ரூ. 2-8-0-க்கு ஒரு நாற்காலி வாங்கி ஒரு கூலிக்காரனிடம் ஒரு அணா கொடுத்து தூக்கி வந்து அக்கடையில்போட்டு அந்த நாற்காலியில் உட்கார்ந்து தன் கண்கள் இரண்டையும் மூடிக்கொண்டு, கையை வாயில் வைத்து யோசனைசெய்து கொண்டிருந்தான். அவன் செய்த யோசனையானது நாம் இப்போது கையிலிருந்த ரூபாய் 100-க்கு சாமான்களை வாங்கி கடையில் வைத்

திருக்கிறோம். இதை விற்றால் ரூ. 150-க்கு விற்கும்; அப்படி விற்ற ரூ. 150-க்கும் சாமான்கள் மறுபடியும் வாங்கி விற்றால் ரூ 250-க்கு விற்கும். அந்த 250-க்கு மறுபடியும் சாமான் வாங்கிக் கொண்டு வந்து விற்றால் ரூ. 500-க்கு விற்கும். 500-க்கும் சாமான் மறுபடியும் வாங்கி கொண்டு வந்து விற்றால் ரூ. 1000-க்கு விற்கும். அந்த ரூ.1000-க்கும் சாமான் வாங்கி மறுபடியும் கொண்டு வந்து விற்றால் 2000க்கு விற்கும். அப்படியே ரூபாய் 2000-ம் கைக்கு வந்தவுடன் கல்யாணம் செய்ய வேண்டியது. கல்யாணம் யார் வீட்டில் செய்வது என்றால் நம் கையில் ரூபாய் 2000 இருக்கும் போது இவ்வூர் ஜமீன்தார் மகளை பெண் கேட்டு என் கட்டக்கூடாது. அவளையே கட்டிக் கொள்வோம். அப்படி அவளை கட்டிக்கொண்டாலும் நான் மெத்தையில் படுத்துக் கொண்டே தானிருப்பேன். அவள் நம்மை அடிக்கொருதரம் வந்து எழுப்பத்தான் வருவாள். அது சமயம் நான் அவளை உனக்கு என்ன வேலை என்று என் காலால் உதைத்துத் தள் ளுவேன் என்று தன் கால்களால் ஓங்கி ஒரு உதை உதைத் தான். அவன் ஓங்கி உதைத்தவுடனே அடுக்கடுக்காய் வைத் திருந்த கண்ணாடிச் சாமான்கள் ஒன்றின்மேல் ஒன்றாய் விழுந்து ஒரு சாமான்கள் கூட உருப்படி யில்லாமல் அவ்வ ளவு சாமான்களும் உடைந்து போய்விட்டன. உடனே திடுக் கென்று கண்களைத் திறந்து பார்த்தான். சாமான்கள் பூரா வும் உடைந்து கிடைப்பதைப் பார்த்து மன வருத்தப்பட்டு இந்தக் கண்ணாடிச் சாமான்களை யார் கொண்டுபோய் வெளி யே போடுகிறதென்று மனதில் நினைத்து உடனே நான் இனி இந்த ஊரில் இருக்கமாட்டேனென்று அப்போதே கடையை விட்டுக் கீழே இறங்கி காட்டு மார்க்கமாய் போய்க் கொண்டி ருக்கும்போது, அக்காட்டில் வாசம் செய்து கொண்டிருந்த

புலியானது இவனைக் கண்டு துறத்த, சுப்பன் நம்மை புலியல்லவா விறட்டிக்கொண்டு வருகிறதென்று ஓடி ஒரு பாழுங் கிணற்றில் விழுந்தான். புலியானது, இவன் கிணற்றில் விழவும் இனி இவன் நமக்கு இறையாக மாட்டான் என்று திரும்பிப் போய் விட்டது. கிணற்றில் விழுந்த சுப்பன் தண்ணீரில் நீந்திக் கறை யேறுவதற்கு பாதையே கிடையாது. அக்கிணற்றின் பக்கம் வளர்ந்திருந்த ஒரு புளிய மரத்திலிருந்து ஒரு ஊணுங்கொடி அக்கிணற்றுக்குள் தொங்கியிருந்தது. அதைப் பிடித்தாவது ஏறி மரத்திற்குப் போய் அம்மரத்திலிருந்து கீழே இறங்கி விடலாம் என்று மனம் தேறி அவ்வூணுங் கொடியைப் போய் பிடித்து அதன் வழியாக ஏறிக் கொண்டிருக்கும்போது அந்தப் புளிய மரத்தில் தேனீக்கள் கூடு கட்டி அக்கூட்டிலிருந்து தேன் சொட்டுச் சொட்டாய் கீழே விழுந்து கொண்டிருந்தது. அத்தேன் சொட்டு சுப்பன் வாயில் விழ அவன் அடைந்த ஆனந்தம் சொல்ல முடியாது. அப்போது அம்மரப் பொந்திலிருந்த ஒரு எலியானது அவ்வூணுங் கொடியை நருக்கு நருக்கு என்று கடித்துக் கொண்டிருந்தது. இவன் மரத்தை ஏறிப்பிடிக்கும் சமயம் அவ்வூணுங் கொடி அறுந்து விழ சுப்பன் மறுபடியும் கிணற்றில் விழுந்து இறந்து போனான். ஆனபடியால், ஒருவன் கல்வி கற்றுக் கொள்ளுங் காலம் கல்வி கற்றும், அதன்பின் தொழில் கற்குங்காலம் தொழில் கற்றும், தொழில் கற்றபின் ஒரு பெண்ணை மணந்து தான் கற்ற தொழிலைக்கொண்டு செய்துவரக் கூடிய ஆதாயத்திலிருந்து தானும் தன்னை மணந்துகொண்ட பெண்ணும் வரக்கூடிய வருமானத்தைக் கணக்கிட்டு அதில் 4 பங்கை சிலவு செய்தும், ஒரு பங்கை மீதமும் வைத்து ஜீவிக்கவேண்டும்.

இன்னும் ஒரு சிறு விஷயம் சொல்கிறேன். மாணிக்கபுரம் என்ற ஊரில் ராமலிங்கம் செட்டியார் என்ற ஒருவர் லக்ஷ ரூபாயை சம்பாதித்து செல்வந்தராய் இருக்கும்போது அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து, கந்தசாமி என்ற நாமதேயமிட்டு, கல்வி கற்பித்து, 21-வது வயதில் தக்க இடத்தில் பெண் பார்த்து திருமணம் செய்து இருவர்களையும் தன் மனையிலேயே வைத்து அவர்களுக்கு வேண்டிய சவரக்ஷணைகள் செய்துகொண்டுவரும் காலத்தில் அப்பையனுடைய தகப்பனான ராமலிங்கம் செட்டிக்கு ஆயுள் முடிந்து உயிர்விடப்போகும் தருணம் அப்பையன் தன் தகப்பனாரைப் பார்த்து, "என் உயிருக்கு உயிரான அப்பா, எனக்கு என்ன சொல்கிறாய்," என்றுகேட்க, "அப்பா எனது அருமையான மகனே உனக்கு என்ன குறை வைத்திருக்கிறேன். உனக்குத்தானே லக்ஷ ரூபாய் சம்பாதித்து வைத்திருக்கிறேன். ஆனாலும் உனக்கு ஒன்று சொல்கிறேன். அதாவது நீ ஒரு அணா சம்பாதித்து, ரூபாய் பத்து வேண்டுமானாலும் சிலவுசெய்," என்ற வார்த்தை சொன்னவுடன் உயிர் பிரிந்து விட்டது. உடனே மகன் தகப்பனார் மேலே விழுந்து அழுது புறண்டு எழுந்திருந்து அவருக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து அதன்பின் 16-ம் நாள் கருமாதி செய்து முடிந்தபின் என் தகப்பனார் உயிர்விடும் தருவாயில் சொன்ன வாக்கின்படி ஒரு அணா சம்பாதித்து பத்து ரூபாய் வேண்டுமானாலும் சிலவு செய்துகொள் என்று தானே சொன்னார். ஆனபடியால், என் தகப்பனார் சொன்னபடியே நான் போய் நாளைக்கு ஒரு அணா சம்பாதிக்கவேண்டுமென்றால், உள்ளூரில் நமக்கு ஒருவரும் வேலை கொடுக்கமாட்டார்கள் என்று நினைத்து ஒரு பழைய வேஷ்டியை எடுத்துக்

கட்டிக்கொண்டு அன்றிரவு தன் பெண்சாதியை அவள் தகப்பனார் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்து வீடுகளையெல்லாம் நன்ருய்ப் பூட்டி துறவுகோலை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு அன்று விடியற்காலம் கால் நடையாய் நடந்து ஒரு ஊரை அடைந்து அன்று இராத்திரி அவ்வூரில் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்து காலையில் எழுந்து ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலை கேட்டான். அவன் கேட்ட தொழிற்சாலைகள் ஒன்றிலாவது கூலிக்கு ஏற்றுக்கொள்ளவில்லை. கடைசியில் அவன் ஒரு கொல்வேலை செய்யும் ஆசாரியிடம் வேலை கேட்டான். அந்த ஆசாரி மனம் சந்தோஷப்பட்டு தனக்கு எப்போதும் துருத்தி ஊதக்கூடிய பையன் காலை 10 மணி வரையில் வருமலிருப்பது கண்டு நமக்கு கடவுள் தான் ஒரு ஆளனுப்பினுர் என்று மனதில் நினைத்து அப்பா நீ வேலை செய்கிறேனென்று சொல்கிருய், எனக்கு வழக்கமாய் வந்து துருத்தி ஊதும் பையன் இன்று வரவில்லை. ஆனபடியால், நீ இந்தத் துருத்தி ஊதினுல் சாயந்திரம் உனக்கும் அவனுக்குக் கொடுப்பதுபோல் சம்பளம் ஒரு அணு கொடுப்பேன். சம்மதமானுல் நீ இந்த துருத்தியை ஊது. நான் வேலை செய்ய ஆரம்பிக்கிறேன் என்றுன். அதன்படி ஊதுகிறேன் என்று அந்த ஆசாரி வேலை சொல்லுமுன் அத்துருத்தி ஊதுமிடத்தில் உட்கார்ந்து துருத்தியை ஊதினுன். அதுகண்ட ஆசாரி இவன் நன்ருய் வேலை செய்வான் என்று நினைத்து, வேலைசெய்ய ஆரம்பித்து தன்வேலைகளை முடித்துக் கொண்டிருந்தான். சாயந்திரம் மணி ஆறு அடித்ததும் வேலையை நிறுத்தி பட்டறையிலிருந்த சாமான்களை எல்லாம் ஒரு கட்டாய்க் கட்டி தூக்கிக் கொண்டும், துருத்தியை அவனை தூக்கச் சொல்லி இருவருமாய் ஆசாரி வீடுசேர்ந்து சாமான்களை இறக்கி வைத்து விட்டு அடே

யப்பா நாளைக்கும் நீ வேலைக்கு வருகிறாயா, அப்படி வந்தாலும் பழைய பையன் வந்து விட்டால் உன்னை நான் வேலைக்கு அமர்த்திக் கொள்ளமாட்டேன். இந்தா ஒரு அணா என்று கொடுக்க, அவன் இரண்டு கரங்களையும் ஒன்று சேர்த்து கையேந்தி வாங்கி ஒரு அணாவை இரண்டு கண்களில் பல தடவை ஒத்தியும், அந்த ஆசாரியைப் பார்த்து ஐயா நான் போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு, ஒரு சாப்பாட்டு கிளப்புக்கு வந்து அன்று சம்பாதித்த ஒரு அணாவைக் கொடுத்து சாப்பிட்டு விட்டு அன்று ராத்திரி தங்கியிருந்த சத்திரத்தையடைந்து நித்திரை செய்து காலை மூன்று மணிக்கு எழுந்திருந்து, தன்னுடைய ஊரை நோக்கிப் புறப்பட்டு சாயந்திரம் 6-மணிக்கு வீடு வந்து சேர்ந்து, வீட்டைத் திறந்து லைட்டைப் பொருத்தி வைத்து விட்டு, மறுபடியும் வீட்டை, பூட்டி விட்டு தன் பெண்சாதி வீட்டிற்குப்போய் அவளை அழைக்க அவளும் தன் நாதனைப் பார்த்து தாங்கள் களைத்து வந்ததுபோல் தெரிகிறது, வெண்ணீர் வைக்கிறேன், ஸ்நானம் செய்து சாப்பிட்டு விட்டுப் போவோம் என்றாள். அவனும் அதற்கிசைந்து சாப்பிட்டு விட்டு இருவருமாக தன் இல்லம் வந்து சேர்ந்தார்கள்.

அன்றிரவு இரண்டு பேர்களும் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருக்கும்போது, பெண்ணானவள், "என் நாதா தாங்கள் முந்தாநாள் சாயந்திரம் என்னைக் கொண்டுபோய் என் தகப்பனார் வீட்டில் விட்டு விட்டு, இந்த இரண்டு நாட்களாய் எங்கு சென்றீர்களென்று கேட்டாள்." அதற்கு அவன் "என் கண்ணே, நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது சுமார் 30 மைலுக்கப்பால் உள்ள சிநேகிதர் ஒருவர் இருந்தார். அவரைப் பார்க்கவேணுமென்று என் மனதில் ஓர் எண்ணம் வந்தது. அதற்காக உன்னைத் தனியே விட்டுப்

போகக்கூடாதென்று உன் தகப்பனார் வீட்டில் விட்டுப் போனேன். நான் போய் அவர் க்ஷேமலாபங்களை விசாரித்து வந்தேன். அவரும் என்னை நீ நல்ல ஒழுங்கு முறையில் காலங்கழிக்க வேண்டும், வீண் சிலவு செய்யக்கூடாது, கெட்டவர்களுடன் சிநேகம் செய்யக்கூடாது, லாகிரி வஸ்துக்களை எப்பவும் உபயோகிக்கக்கூடாது, வேசிகளோடு சாவகாசம் செய்யக்கூடாதென்று எனக்கு நல்ல வழிகளைச் சொன்னார். நானும் அவர் சொன்னதற்கெல்லாம் அதன்படி நடந்து கொள்கிறேன், தாங்களும் சாவகாசமான காலங்களில் வந்து நான் நடந்துகொள்ளும் விதங்களைப் பாருங்கள் என்று சொல்லி விட்டு அவர் வீட்டில் நேற்றுச் சாயந்திரமும், இன்று மத்தியானமும் சாப்பிட்டு வந்தேன்," என்றான். அதன்பின் அவன் அனுதினமும் தான் ஆசாரிக்கு துருத்தி ஊதினதை மனதில் நினைத்து சுகமாக காலங் கழித்து வந்தான்.

ராணி:—"தாங்கள் முதலில் சொல்லி வந்ததையும் இரண்டாவது சொல்லி வந்த இரண்டு விஷயங்களையும் சதிபதிகள் கவனித்து நடந்தால் அவர்களுக்கு வேறொருவரும் ஞானம் உபதேசிக்க வேண்டாம். ஆனாலும் ஒரு சதிபதி ஒருவருக்கு அடிமை செய்யக்கூடாதென்றும் அடிமை செய்வது இழிவு என்றும், அதற்காக மேழியின் பெருமையே பெருமையென்றும் சொன்னீர்கள். அம் மேழியின் பெருமையை விபரமாகச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மையே, அந்த மேழியின் பெருமையைச் சொல்கிறேன். இவ்வுலகத்திலே முன் காலத்தில் நம்முன்னோர்கள் வாசம் செய்து கொண்டிருக்கும்போது வருண பகவானானவர் மாதம் ஒன்றுக்கு மூன்று மழை பெய்தும், அந்த மூன்று மழை யாருக்கென்றால் வேதமோதிய அந்த

ணர்க்கோர் மழையும், நீதி தவறாத அரசர்களுக்கு ஒரு மழையும், கற்புத் தவறாத பெண்களுக்கோர் மழையுமா னதால் அம்மேழியில் உழுது பயிர் செய்த பயிர் களானது தண்ணீர் தட்டு ஏற்படாமல் செழுமையாய் ஓங்கி வளர்ந்து அப்பயிர்கள் விளைந்ததால் அக்காலத்தில் வாசம் செய்துகொண்டிருந்த ஜனங்கள் கஷ்டமில்லாமல் ஜீவனம் செய்துகொண்டு வந்தார்கள். தற்காலம் பொய்யே கை முதல் என்று நினைத்துக்கொண்டிருக்கிற பிராமணர்களுக்கு ஒரு மழையும், நேரே பார்க்காத செய்கைகளுக்கு சாக்ஷி களே பிரதானம் என்று தண்டனை செய்யும் அரசர்களுக்கு ஒரு மழையும், ஒரு பெண் கணவனை மணந்து அவனிடம் வாழ்க்கை நடத்திவரும் காலத்தில், மற்றொருவன் ஓர் பெண்ணை மணந்து அவர்கள் க்ஷேமமாய் வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து, நாமும் மேல் கண்டவ னைப்போல் ஒருவனை திருமணம் செய்திருந்தால் சுகமாக வாழலாமே என்று நினைத்தவுடன் அவளுடைய கற்பு அன்றே அழிந்து விடுகிறதைப்போல் கற்பின் பெருமை இன்னதென்று தெரியாத பெண்களுக்கு ஒரு மழையுமாக வருஷம் 1-க்கு மூன்று மழையாக பெய்து, அம்மழையை நம்பி மேழியைக்கொண்டு உழுது பயிர் செய்த அப்பயிரா னது முளைத்து கருது பருவத்தில் மழையில்லாமல் பட்டுப் போய், போட்ட விதை, உழுது பயிர்ச் சிலவு செய்த தொகைகளும் வீணாகி அச்சமுசாரியே கெட்டு அலைந்து கொண்டு வானத்தை, வானத்தைப் பார்த்து கொட்டாவி விட்டு மனமும் நொந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் காலம் இதுவே.

அப்படியில்லாமல், ஒரு சதிபதி 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்ற வாக்கியத்தின்படி ஒரு குழி அல்லது

60 செண்டு நிலத்தை அவன் விபசாயம் செய்து வருவானு கில் சுகமாக வாழலாம். விபசாயம் செய்யும் முறை; தனக்கேற்பட்ட ஒரு குழி நிலத்தில் 4-முழ நீளமும், 4-முழ அகலமுமுள்ள ஒரு கிணறு தோண்டி, ஒரு யேத்து மரம் போட்டு, அக்கிணற்றிலுள்ள ஜலத்தைப் பாய்ச்சி, பருவகாலம் கண்டு விதைத்தும், விளைவு ஏற்பட்ட வுடன் அறுவடை செய்தும், அறுவடை செய்த நிலத்தை ஒரு வாரத்தில் மறுபடியும் உழுது எந்தத் தானியம் அக்காலத் துக்கு வருமோ அதை விதைத்து விளைவு ஏற்பட்டவுடன் அதையும் அறுவடை செய்து, ஒரு வருஷத்திற்கு கண்டிப் பாய் ஒரு குழி நிலத்தில் மூன்று போகம் வெள்ளாண்மை எடுத்துக் கொண்டும் அந்த நிலத்தின் அருகாமையிலேயே அச்சதிபதி வாசம் செய்துகொண்டிருப்பார்களேயானுல், அவர்களே மேலானவர்கள்.

அவர்களுடைய வரவு சிலவுக்கும் விபரம் சொல்கிறேன். ஒரு குழி நிலத்தில் தண்ணீர் தட்டில்லாமல் விளைந்தால் $3\frac{1}{2}$ அல்லது 4 மாதத்தில் 48-படி கொண்ட நெல் அல்லது சோளம், கேப்பை வகையரு தானியங்கள் மூடை 15-க்கு குறையாமல் விளையும். அந்த 15-மூடை தவசம் எக்கார ணத்தை முன்னிட்டும் ரூபாய் 60 பெறும். அதன்படி மூன்று போகத்திற்கும் ஒரு குழி நிலத்தின் வரவு ரூபாய் 180. அதற்குச் சிலவு, உழுது பயிர் செய்து அறுவடைக்கு வருவ தற்கு உரத்துடன் ரூபாய் 20 ஆகிறது. அதன்படி 3 போகத்திற்கும் ரூபாய் 60 சிலவானதுபோக பாக்கி ரூபாய் 120 மீதம். ஒரு வருஷத்திற்கு ஒரு சதிபதி வீண் சிலவு செய்யாமல் மாதம் 1-க்கு ரூபாய் 8 வீதம் நியாய மான முறையில் சிலவு செய்தால், 12 மாதத்திற்கு ரூ. 96-ம் போக, பாக்கி ரூபாய் 24 வீதம் அவர்கள் மீதம் வைத்து

அதன்படி 5-வருஷத்துக் கொருதரம் மொத்தம் சேர்ந்த ரூபாய் 120-க்கு மறுபடியும் ஒரு குழி நிலம் ஒத்தி செய்து கொண்டே வருவாளுகில், இவர்கள் ஆயுளுக்குள் சுமார் 10-குழி நிலத்தை ஒழுங்காக விபசாயம் செய்தும் இப்புஸ்தகத் திலுள்ளபடி நடந்து சற்புத்திரர்களைப் பெற்று அவர்கள் வம்ச பரம்பரையாய் உலகத்திற்கே க்ஷேமமாய் வாழ்வார்கள்.

ராணி:—"என் குருவே, தாங்கள் ஒரு சதிபதிக்கு சொல்லி முடித்தீர்கள். தற்காலத்திலோ, மழை பெய்தவுடன் அந்தண்ணீர் குளங்களில் நிரம்பி வெள்ளாண்மை செய்யக் கூடிய நிலங்கள் நம் நாட்டிலே அதிகமிருக்கிறது. அப்படி யிருக்கக்கூடிய குளத்துத் தண்ணீர், பயிர்கள் விளைவாகிற நேரத்தில் வற்றி அப்பயிர்கள் விளைவு குன்றியோ அல்லது பூறுவும் சாவியாகியோ, ஒவ்வொரு நேரங்களில் அக்குளத் திற்கு தண்ணீர் வருமல் தருசாகப் போட்டு விடுகிருர்களே, அவர்களும் 1-வருஷத்தில் மூன்று போகம் வெள்ளாண்மை செய்ய வழியிருக்கிறதா, அது விபரத்தையும் தங்களுக்குத் தெரிந்தவரையில் சொல்ல வேண்டுகிறேன்."

குரு:—"ஒரு குளத்தில் நீர்ப்பாய்ச்சி வெள்ளாண்மை செய்யக்கூடிய நிலத்தின் சுவான்தார்களெல்லோரும் ஒன்று கூடி அக்குளத்து நீர் எத்தனை குழி நிலத்திற்குப் பாய்கிற தென்று கணக்கெடுத்து, ஒரு குளத்தில் 1000-ம் குழி நிலம் இருந்தால் ஒரு குழி நிலத்திற்கு ரூ. 20 வீதம் வரிப்போட்டு மொத்தம் சேர்ந்த ரூ. 20000-த்தையும் ஒரு பண்டு அல்லது ஒரு பாங்கு அவ்வூரிலேயே ஏற்படுத்தி அதை நிலத்துக் காரர்களுக்குள்ளேயே மேல்பார்வை செய்துகொண்டும், மேல்க்கண்ட ரூபாயைக்கொண்டு அக்குளத்தில் உள்ள மடைகள் எத்தனை இருக்கிறதென்று கணக்கெடுத்து

ஒவ்வொரு மடையிலும் வரக்கூடிய தண்ணீர் எத்தனை குழி நிலத்திற்குப் பாய்கிறதென்று கணக்கெடுத்து, சுமார் 300 குழிக்கு பாய்கிறதென்றிருந்தால் ஒரு குழி நிலத்திற்கு 4 அடி நீளம், 4 அடி அகலம் வீதம் 300 குழிக்கும், 1200 அடி நீளமும் 1200 அடி அகலமுமுள்ள கிணறு ஒன்று தோண்டி அம்மண்ணை அக்குளக்கரையிலேயே கெட்டியாய்ப் போட்டுவிட்டு, அக்கிணற்றில் அக்கடாசியில் ஒன்றும், மத்தியிலொன்றும், இக்கடாசியில் ஒன்றுமாக 10 குதிரை வேகமுள்ள மூன்று மோட்டார் பம்புகள் ஸ்தாபனம் செய்யவேண்டியது. அக்கிணற்றில் எக்காரணத்தை முன்னிட்டும் தண்ணீர் எவ்வளவு இறவை செய்தாலும் வற்றாத நிலைமையில் ஊற்றுகள் வந்து சேரும் வரையில் வெட்டிவிட வேண்டியது. மழைபெய்து குளத்தில் தண்ணீர் இருக்கும் வரை எப்போதும்போல் விபசாயம் செய்துகொண்டும், குளத்தில் தண்ணீர் தாழ்வு ஏற்பட்டவுடன் தன்னிடமிருக்கக்கூடிய மோட்டார்களை ஓட்டி தண்ணீர் இறைத்து பயிர்கள் வாடாதபடியும், நிலங்களை தருசாய்ப் போடாமலும் நல்ல உரங்களைக் கொடுத்து வருஷம் 1-க்கு 3 தடவை வெள்ளாண்மை செய்து வருவார்களானால் அவ்வூருக்கு எக்காலங்களிலும் பஞ்சமென்பதே கிடையாது.

அதை விட்டுவிட்டு உழுகிற காலத்தில் ஊர்வழி போய் விட்டால் அறுக்கிற காலத்தில் ஆள்தேட வேண்டியதில்லை என்ற தன்மைப்போல் இக்காலத்தில் மழையை நம்பி ஒருவர் பிழைக்க வேண்டுமென்று எவனொருவன் நினைத்துக் கொண்டிருக்கிறானோ அவன் ஒருக்காலமும் முன்னேற்றத்திற்கு வரமாட்டான். அவ்வூரும் பாழடைந்தே போகும். ஆகையால் மேலே சொல்லியபடி ஒவ்வொரு கண்மாய் புரவு நிலச் சுவான்தாரர்களும் இதன்படி செய்து அப்பாங்குக்கு

ஒவ்வொரு போகத்திலும் வரக்கூடிய மகசூலை 5 பாகம் செய்து 1 பாகம் பாங்குக்கும், 2 பாகம் நிலத்திற்கும், 2 பாகம் உழவடை செய்யக்கூடியவனுக்கும் பிரித்துக்கொள்ளவேண்டியது. அந்தப் பாங்குக்கு கொடுக்கக்கூடிய ஒரு பாகத்தில் அவர்கள் அந்த நிலங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்ய வேண்டியது. உழுகிறவன் 2 பாகத்தைக்கொண்டு உழுது பயிர் செய்யவேண்டியது. நிலக்காரன் 2 பாகத்தைக்கொண்டு கிஸ்தியும் தன் குடும்பச்சிலவும் செய்துகொள்ளவேண்டியது. ஒவ்வொரு வருஷமும் பாங்கின் வரவு சிலவுகளில் சம்பளம் வகையறுபோக மீதமிருக்கக்கூடியதை ஒவ்வொரு குழி நிலத்திற்கும் கணக்குப்படி பிரித்துக்கொடுத்துவிட வேண்டியது. அக்கிணற்று மூலம் வரவு ஏற்படவேண்டுமென்றால் சினை விருள் மீன்களை வாங்கிப்போட்டு விட்டால் 1 வருஷத்திற்கு 1000 ரூபாய் பெறுமான மீன்களை பெற்று வளர்த்து விடுகிறது. அதையும் பருவகாலம் கண்டு பிடித்து விற்பனை செய்து அதில் வரக்கூடிய லாபத்தையும் பாங்கில் சேர்த்துக்கொள்ளலாம்.

ராணி:—"குருவே தாங்கள் சொல்லி வந்தவைகளெல்லாம் கேட்டு என் மனம் ஆனந்த பரவசமானது. இவ்வுலகத்தில் ஊர்வன, நகர்வன, நீந்துவன, பறப்பன, நடப்பன என்ற ஐந்துவகை ஜீவராசிகளின் உயிர்கள் ஒவ்வொரு ஜென்மத்திலும் ஒவ்வொன்றாக மாறிக் கொண்டிருக்கிறதா அல்லது அதன் வகைக்கே மாறி மாறிப் பிறக்கின்றதா! அதன் விபரத்தை தெளிவாய்ச் சொல்ல வேண்டும்."

குரு:—"அம்மா, தாங்கள் கேட்ட கேள்வி மேன்மையானது. முன் காலத்தில் கிருஷ்ணபகவானும், தர்மபுத்திரரும் ஒரு தெருவின் வழியாய்ப் பேசிக்கொண்டு போகும்போது அத்தெருவிலுள்ள பள்ளிக்கூட மாணவர்கள்

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நால்லார் சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று."

என்ற பாட்டைப் பாட, அதுகேட்ட தர்மபுத்திரர் மனதிற்குள் வைத்து ஆராய்ந்து நல்லார் என்பவர் யார்? அவரை நாம் நேரில் கண்டு அவரோடிணங்கி இருந்தாலென்ன என்ற எண்ணம் மனதில் தோன்றி தன்னுடன் வந்த கிருஷ்ண பகவானை நமஸ்காரம் செய்து எனது அன்புள்ள மைத்துனு, "என் மனதில் ஒருவிதமான எண்ணம் உதயமாகிறது. அதை உம்மிடம் கேட்கிறேன். பதில்கூற வேண்டுமென்ருர்."

கிருஷ்ண பகவான்:—"என்னுடைய உயிருக்குயிருன மைத்துனு, நீர் பார்த்து எதைக் கேட்டாலும் அதற்குப் பதில் சொல்லத் தயாருயிருக்கிறேன்."

தர்மபுத்திரர்:—"இந்த வழியாக நாம் வந்து கொண்டிருக்கும் சமயம் வழியிலிருந்த பள்ளிக்கூட மாணவர்கள் பாடிய பாட்டைக் கேட்டாயா? அதில் சொல்லும் நல்லவரை பார்க்க வேண்டும்? அவர்கள் எங்கே இருக்கிருர்கள்? அவர்களுடனே பழகவேண்டுமென்று பிரியமாயிருக்கிறது. அவர்களைப் பார்க்காமல் உன்மேல் ஆணையாக நான் சாப்பிடுவதில்லை."

அதுகேட்ட கிருஷ்ணபகவானும் மனம் திடுக்கிட்டு என்ன சபதம் செய்து விட்டார்! இவரைப் பார்க்கிலும் இவ்வுலகத்தில் நல்லவர்கள் யார் இருக்கிருர்கள்? நாம் யாரைச் சொல்வதென்று மனதில் நினைத்து, தர்மரைப் பார்த்து, "அதற்கென்ன, நான் சொல்கிறேனென்று" அவ்விடம் விட்டு இருவர்களும் திரும்பி அரண்மனை வந்து சேர்ந்து, கிருஷ்ணபகவான், "நான் போய் விட்டு வருகிறேனென்ருர்."

அதைக் கேட்ட தருமர், "நான் சற்று நேரத்திற்குமுன் சொன்னதை மறந்து விட்டீர்களே. அதைச் சொன்னால் தான் நான் சாப்பிடுவேன்," என்றார்.

இது கேட்ட கிருஷ்ணபகவான், "எனது மைத்துனா, இதற்கு ஏன் கவலைப்படவேண்டும். நீர் காலையில் எழுந்து கொஞ்ச தூரம் சென்று, மலஜலம் கழித்துக் கொண்டிருக்கும்போது உமக்குமுன் இரண்டு மலவண்டுகள் ஒருவிதமான உருண்டை ஒன்றை உருட்டிக் கொண்டுவரும். அதை ஒரு சிறு குச்சியால் உருண்டையை தள்ளிவிட்டு வண்டுகளை அக்குச்சியைக்கொண்டு தூக்கினால் வண்டுகள் உம்மை ஏறிட்டுப் பார்க்கும். அப்போது நல்லார் யாரென்று கேட்டால் அவைகள் சொல்லுமென்றார்."

அதைக் கேட்ட தர்மரும் அதன்படி செய்கிறேனென்று காலையில் எழுந்திருந்து கிருஷ்ண பகவான் சொன்னபடி போய் மலஜலம் கழித்துக்கொண்டிருக்கும்போது அவர் முன் இரண்டு வண்டுகள் ஒரு உருண்டையை உருட்டிக் கொண்டு வந்தது. உடனே அவர் அவ்விடம் கிடந்த ஒரு குச்சியை எடுத்து அவ்வுருண்டையைத் தள்ளிவிட்டு அவ் வண்டுகளை அக்குச்சியில் தூக்கிவிட அவைகள் இரண்டும் அவர் முகத்தைப் பார்க்க, அச்சமயம் அவர் வண்டுகளைப் பார்த்து, "நல்லவர் யார், என்றார்." அச்சத்தம் கேட்டவுடன் வண்டுகள் இரண்டும் உயிர்விட்டன. அதைக் கண்டு மனம் நொந்து இப்பாவத்தை எங்கே தொலைப்பது என்ற வருத்தத்துடன் அதைவிட்டுப் புறப்பட்டு, கைகால் அலம்பிக் கொண்டு, நேரே கிருஷ்ண பகவான் இருக்குமிடம் சென்று அங்கு நடந்தவைகளைச் சொல்ல, அதைக்கேட்ட கிருஷ்ண பகவான், "நீ வருத்தப்படாதே, அந்த வண்டுகள் போனால் போகட்டும் இதிலிருந்து 40-ம் நாள் கிழக்கேயுள்ள ரோட்டுச்

சாலையில் 4-வது பர்லாங்கிலுள்ள ஆலமரப் பொந்தொன்றில் இரண்டு பஞ்சவர்ணக் கிளிகள் இருக்கிறது. அதனிடம் நீ போய் நல்லவர் யாரென்று கேட்டால் சொல்லுமென்றூர்.''

அதுகேட்ட தர்மரும் மனம் ஒரு விதமாகத்தேறினூர். 40-ம் நாள் அன்று காலையில் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, அவர் சொன்ன இடத்திற்குப்போய் ஆலமரத்தை ஏறிட்டுப் பார்த்தார். அம்மரத்தின் பொந்திலுள்ள இரண்டு பஞ்சவர்ணக் கிளிக் குஞ்சுகள் தன் தாய் இறைதேட வெளியே போனது இன்னும் வரவில்லையே என்ற எண்ணத்துடன் சப்தமிட்டுக்கொண்டு, பொந்தின் வெளியே தலையை நீட்டிக்கொண்டிருந்தது. தருமர் அக்கிளிக் குஞ்சுகளைப் பார்த்து, "நல்லவர் யாரென்று'' உறத்த சப்தத்துடன் கேட்டார். அச்சப்தம் கேட்ட இரண்டு கிளிக்குஞ்சுகளும் உடனே இறந்து கீழே விழுந்தது. அதைப் பார்த்த தருமர் அக்கிளிக் குஞ்சுகளைக் கையில் எடுத்து சற்று நேரத்திற்குமுன் நான் பார்க்க சப்தம் செய்து கொண்டிருந்த நீங்கள் என் சப்தம் கேட்டவுடன் இறந்து கீழே விழுக நான் என்ன பாபம் செய்தேனே, தெரியவில்லை என்று மனம் நொந்து, அவ்விடமே ஒரு குழிதோண்டி அக் கிளிக்குஞ்சுகளை புதைத்துவிட்டு வருத்தத்துடன் திரும்பி வந்து, கிருஷ்ணபகவான் இருக்குமிடம் சென்று, அங்குநடந்தவைகளைச் சொல்லி, "அன்று இரண்டு வண்டுகள் என்னைப் பார்த்தவுடன் இறந்து விட்டது, இன்று இரண்டு கிளிக் குஞ்சுகள் இறந்து விட்டது என்ற கவலை மேல்கொண்டு தங்களிடம் வந்தேன். தாங்கள் என்னை ஏன் இவ்வளவு பரிகாசம் செய்யவேண்டும். நான் நல்லார் யாரென்று கேட்டால் தாங்கள் மல வண்டையும், கிளிக் குஞ்சுகளையும் கேட்டால் சொல்லுமென்பது தங்களுக்குத் தர்மமா.''

அது கேட்ட கிருஷ்ண பகவானும், "என் அன்பிற்குரிய மைத்துனு, நீர் ஏன் இதற்குக் கவலைப்பட வேண்டும். மன வருத்தம் வேண்டாம். இதிலிருந்து 270 நாளைக்குப்பின் உன்னுடைய ராஜாங்கத்தில் நிடதேசத்தை அரசு செய்து கொண்டிருக்கிற சிற்றரசனை காமதேனு அரசனுடைய பத்தினிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறக்கப்போகிறது. ஆகையால், நீ அங்கு சென்று அம்மன்னனிடம், நாளை காலை பத்து மணிக்கு உனது பத்தினிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறக்கும். அக்குழந்தைகளை பூமியில் விழாமல், தங்கத் தாம்பாளத்தில் ஏந்தி உன்னிடம் காண்பிக்கும்படி கேள். அம்மன்னனும் அவ்வாறே செய்வான். அப்போது அக்குழந்தைகளிடம் நல்லவர் யாரென்று கேட்டால் அவைகள் சொல்லுமென்றார்."

அதன் பின் தன் அரண்மனைக்குப்போய் கிருஷ்ணபகவான் சொன்ன நாளை எதிர்பார்த்திருந்து, 267-ம் நாள் தன் நகரை விட்டுப் புறப்பட்டு 269-ம் நாள் காலையில் நிடதேசம் அடைந்து, காமதேனுவைப் பார்த்து, "நான் உன்னிடம் ஒரு காரியமாக வந்தேன். அதைச் செய்ய வேண்டுமென்றார்." அதைக்கேட்ட காமதேனு "நான் தாங்கள் என்ன சொன்னாலும் அதன்படி நடக்கச்சித்தமாயிருக்கிறேன் என்றார்." தர்மரும், "அப்பா காமதேனு உனது பத்தினிக்கு நாளை காலை 10-மணிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறக்கப் போகிறது. அக்குழந்தை இரண்டையும் பூமியில் விழாமல் தங்கத் தாம்பாளத் தட்டில் யேந்தி அக்குழந்தைகள் இரண்டையும் என்னிடம் காண்பித்துவிட்டு அக்குழந்தைகளின் தாயாரிடம் கொண்டு போய் விட்டுவிடு என்றார்." காமதேனுவும் அதிக சந்தோஷம் கொண்டு அதற்கென்ன தடை, அதன்படியே செய்கிறேனென்று தர்மரை அழைத்

துக் கொண்டுபோய் சாப்பாடு சௌகர்யங்களெல்லாம் செய்து முடித்து நித்திரை செய்யதார்கள்.

காலையில் எழுந்தவுடன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு தங்கத்தாம்பாளத் தட்டை எடுத்து சுத்தம் செய்து மணி 10 அடிப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். மணி 10 அடித்ததும் ராணி அம்மாளுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்க, தருமர் சொற்படி அக்குழந்தைகளை தங்கத் தாம்பாளத்தட்டில் யேந்திக் கொடுக்க, திறைமறைவில் நின்று கொண்டிருந்த ராஜன் வாங்கி தர்ம ராஜாவிடம் கொண்டு வந்தார். தர்ம ராஜனும் அக்குழந்தைகள் இரண்டையும் தங்கத் தாம்பாளத் தட்டுடன் வாங்கி தன் கையில் வைத்து ஏந்தி அந்தக் குழந்தைகளை ஏறிட்டுப் பார்த்து "ஏ, குழந்தைகாள்! நல்லவர் யார். அது விபரங்களை எனக்குச் சொல்ல வேண்டுமென்றார்." அதுகேட்ட அக்குழந்தைகள் இரண்டும் தர்மரைப் பார்த்து "நமஸ்காரம் என்று கை கூப்பி, ஓ, தர்ம புத்திரரே, நாங்கள் இரண்டு பேர்களும் ஒரு வருஷத்திற்குள் முதல் ஜென்மத்தில் இரண்டு மல வண்டுகளாக யிருந்தோம். அது சமயம் தங்களை நாங்கள் தரிசித்தவுடன் எங்கள் உயிர் நீங்கி அன்றே இரண்டு பஞ்சவர்ணக் கிளியின் முட்டையானோம். அம்முட்டைகளிலிருந்து 30-ம் நாள் வெளியேறி, 40-ம் நாள் தங்கள் தரிசனம் மறுபடியும் கிடைத்தவுடன் அக்கிளிக் குஞ்சுகளின் உயிர் நீங்கி அன்றிரவே காமதேனு ராஜனின் பத்தினிக்கு அபூர்வ ராஜ அம்சமாக அவள் வயிற்றில் தரித்து, உற்பத்தியாகி 270-ம் நாளாகிய இன்று பிறந்தோம். அதிலும் இன்று தங்கள் தரிசனம் கிடைத்தபடியால் நாங்கள் இரண்டு பேர்களும் இந்த ராஜனிடத்தில் 18 வருஷ காலமிருந்து விட்டு 19-வது வருஷம் முதல்நாளே இரண்டு பேர்களும் புறப்பட்டுப்போய் மனித சஞ்சாரமில்

லாத இடங்களில் தபசு புரியப் போகிறோமென்றும், தாங்கள் ஒருவரே உலகத்தில் நல்லவர், தங்களைப் போலொற்ற நல்லார் உலகத்தில் ஒருவருமில்லை" என்று இரண்டு குழந்தைகளும் ஒருமித்து சொல்லியதைத் தர்ம புத்திரர் கேட்டு உள்ளக் களிப்படைந்து சந்தோஷ கரத்துடன் பிள்ளைகள் இரண்டையும் காமதேனு மன்னனிடம் கொடுக்க, அவர் வாங்கி தன் பத்தினியிடம் கொடுத்து அக் குழந்தைகளை பூமியில் எடுத்துப் போட்டவுடன் அக் குழந்தைகளுக்கு உலக மாயை தோன்றி உங்கா, உங்கா என்ற சப்தம்போட்டு அலறி அழுதது.

இக்காலத்திலும் நல்லவரை ஒருவன் அண்டிப் பிழைத்து அவர் வாயால் சொல்லக்கூடிய காரியங்களை மனதில் நினைத்து கைகளால் செய்து அவருடைய சொற்படி நடந்து அவனும் கொஞ்ச காலத்திற்குள் நல்ல மனிதன் என்று பெயர் வாங்கிக் கொண்டிருப்பதையும் நம் கண்களால் பார்க்கிறோம். அதேமாதிரி ஒரு கெட்ட மனிதனிடம் எவன் அண்டிப் பழகி வருகிறானோ அவனும் கெட்டு இவனும் கெட்டு அலைந்து திரிவதையும் நாம் பார்க்கிறோம். அதன் தன்மை, பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்; பன்றியோடு சேர்ந்த கன்றும் பீ தின்னும் என்னும் பழமொழிக்கிணங்க, உலகத்தில் நல்லோருடன் ஒருவன் கூடினால் அவன் எக்காலத்திலும் நல்லவனே யாவான், கெட்டவனோடு கூடினால், கெட்டவனே யாவான்.

ராணி:—"என் குருவே, தாங்கள் இப்போது சொல்லி வந்த பிறப்பின் விபரங்களைக் கேட்டு என்மனம் ஆனந்தமடைகிறது. ஆனால் இவ்வுலகத்தில் மதங்கள் எத்தனையோ இருக்கிறது. அதில் ஒவ்வொரு மதத்திற்கும் தனித்தனி கடவுள் இருக்கிறார் என்றும், அதிலும் என் மதம் பெரி

தென்று ஒருவருக்கொருவர் சச்சரவு ஏற்படுத்திக்கொண்டும் இருக்கிறார்களே, அதன் விபரங்களையும் தெளிவாய்ச் சொல்லவேண்டும்.''

குரு:—''அம்மா தாங்கள் கேட்டது சிறப்புடைய கேள்விதான். இவ்வுலகத்தில் கடவுள் ஒருவர் உண்டு. அவர் எங்கும் நிறைந்தவர். நீரிலும், நிலத்திலும் ஆகாய வெளியிலும், அண்ட சராசரங்களிலும், சகல ஜீவராசிகளிலும், ரக்ஷகராய்ப் பிணைந்து நன்மை செய்வோருக்கும், தீமைசெய்வோருக்கும் அவரவர்கள் எண்ணத்திற்குத் தக்கவாறு அவர்கள் மனம்போல் நடப்பார். பூமியில் அதர்மம் உண்டாகி தர்மம் ஒழியும் காலத்தில் தன்னிஷ்ட பக்தர்களை ரக்ஷிக்க துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனராய் அவதரிக்கிறார்.''

முன் காலத்தில் துரியோதனன், பஞ்ச பாண்டவர்கள் என்ற ஒன்றுவிட்ட, ஒரு சகோதரர்கள் புத்திரர்களாய் உதித்து, குருக்ஷேத்திரத்தில் அவர்கள் ராஜரீகம் செய்து கொண்டுவரும் காலத்தில் துரியோதனனும் அவனைச் சேர்ந்த மற்றவர்களும் செய்த அட்டூழியங்களையும், கெடுதிகளையும் பொறுக்கமாட்டாமல் (பகவானே) கிருஷ்ணனாய் அவதரித்து பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் பகையை உண்டுபண்ணி யுத்தம் யேற்படுத்தி, நல்லவர்களாகிய பஞ்ச பாண்டவர்களுடன் சேர்ந்துகொண்டு அத் துரியோதனாதிகளை கொல்லப்போகும் சமயம், பஞ்சவர்களில் ஒருவராகிய அர்ச்சுனன் கிருஷ்ணபகவானைப் பார்த்து ''நான் ஒன்று சொல்கிறேன் இந்த உயிர் பிழைப்பதற்காக இப்போது என் முன்னால் நிற்கும் எத்தனையோ கோடி ஜனங்களைக் கொன்று அதிலும் எனக்குச் சொந்தமானவர்களையும் என் குருவையும் கொன்று எங்கள் ஜீவன் வாழவேண்டும். இது என் மனதிற்கு நேராகத் தெரியவில்லையே, நான் மர

உறி தரித்து தபசு செய்து மோக்ஷமடையக் கூடாதா," என்று தன் கையிலிருந்த அம்பைக் கீழே போட்டான்.

அதைக்கண்ட கிருஷ்ண பகவானனவர் நாம் என்ன நினைத்திருக்க, இவன் என்ன நினைத்து விட்டானென்று, "அர்ச்சுனா, நீ இப்போது என்ன நினைக்கிறாய். இவ்வுலகத்தில் வேறொரு கடவுள் இருக்கிறார், அவரை நீ போய் மரவுறி தரித்து தபசு செய்து மோக்ஷமடையலாம் என்று சொல்லியது என் மனதில் ஊடுருகிப் பாய்கிறது. இவ்வுலகத்தில் நான் ஒருவன் தவிர வேறு கடவுள் யார் இருக்கிறார்கள். அதற்கெல்லாம் நான் ஒருவனே கடவுளாயிருந்து யார் யார் எப்படித் தொழுது வருகிறார்களோ அவரவர்களுக்கு பல விதமான காக்ஷிகள் காண்பிப்பதே ஒழிய, மற்ற கடவுள் ஒன்றும் கிடையாது. நானே ஆண், பெண், இயேசுகிறிஸ்து, முகம்மதுநபி நாயகம், ஈஸ்பரன், விஷ்ணு, சுப்ரமணியம், விநாயக் கடவுள், கருப்பணசாமி, சூரியன், சந்திரன் இன்னும் அநேக நாமதேயத்துடனிருக்கிறேன் என்பதை நீ மட்டும் நேரில் பார்க்கவேண்டுமானல் இப்பொழுதே எல்லாவற்றையும் காண்பிக்கிறேனென்று," கோபத்துடன் தன் திருவாயைத் திறந்து காண்பித்தார். அதுகண்ட அர்ச்சுனன் மனம் திடுக்கிட்டு கிருஷ்ண பகவான் வாய்க்குள் சூரியனையும், ஆகாயத்தையும், பூமியையும், முப்பத்து முக்கோடி, தேவர்களையும், உலகத்தில் ஜீவிக்கக்கூடிய ஜீவராசிகளும், குருக்ஷேத்திரத்தில் யுத்தம் செய்ய வந்த சைனியங்களும் அதில் நானும் நீயும் இருக்கிறோமென்றார். உடனே கிருஷ்ண பகவான் தன்வாயை மூடிக்கொண்டு, "ஏ, அர்ச்சுனா இனி மேலாவது வில்லெடுத்து யுத்தம் செய்ய எண்ணம் வந்ததா, என்றார்."

அதுகேட்ட அர்ச்சுனனும் கிருஷ்ண பகவான் காலில் விழுந்து சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு நான் முன் தெரியாமல்ச் சொன்னதற்கு மன்னித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்க, அப்போது கிருஷ்ண பகவான், "அர்ச்சுனு நான் பார்த்து வாயை இருக்கி மூடிக்கொண்டால் இவ்வுலகத்தையெல்லாம் கண் மூடித்திறக்குமுன் பஸ்பம் ஆக்கிவிடுவேன். அப்படிச் செய்தால் என்னை நினைத்துக்கொண்டிருப்பவர்களும் மடிந்து போவார்கள். அதற்காக நான் மானிடராய் அவதரித்து துஷ்டர்களைக் கொன்று பக்தர்களை பரிபாலித்து மறைவதுண்டு. நான் ஒருக்காலும் அழிவதில்லை" என்று கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்திருக்கிறார். அப்படியிருக்க, உலகத்தில் ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு நாமதேயம் வைத்துக் கொண்டு நமது கடவுள் தான் உலகத்திற்கே மேலானவரென்றும், ஒருவருக்கொருவர் சச்சரவு செய்து வீணுகப் பொருள்களைச் சிலவழித்தும் கடைசியில் கடவுள் என்பது இன்னுரென்று தெரியாமலும் அலைகிறவர் பலகோடி இருக்கிறார்கள்.

நிற்க, என்னுடைய அபிப்பிராயத்தைத் தங்களுக்குச் சொல்லுகிறேன். ஒவ்வொரு மதத்தினரும் கடவுள் என்ற பதத்தை மட்டும் மாற்றவில்லை. எப்படியெனில், தங்கம் என்ற உலோகத்தை கடவுளுக்குச் சமமாக வைத்துக் கொள்வோம். அத்தங்கத்தை எப்படி மனிதர்களில் ஒருவன் தங்க காசுமாலை என்றும், ஒருவன் தங்கக்காப்பு என்றும், ஒருவன் தங்க வளையல் என்றும், ஒருவன் தங்க மோதிரம் என்றும், ஒருவன் தங்கச் சரடு என்றும், ஒருவன் தங்க ஒட்டியாணம் என்றும், அவரவர்கள் தங்கள் இச்சைக்குத் தகுந்தவாறு தங்கத்தில் செய்த ஆபரணங்களை எப்படித் தனித்தனி நாமதேயம் வைத்துக்கொண்டார்களோ, அது

போல் கடவுள் என்ற பதத்தை ஒவ்வொருவரும் பல நாம தேயமாக மாற்றி வைத்துக் கொண்டார்களே தவிர கடவுள் ஒருவர்தான். இன்னும் ஒரு சிறு அர்த்தம் சொல்லலாம். ஒவ்வொரு ஜீவராசிகளிலும் ஒருவரும் போகமுடியாத திரேகத்தினுள் போயும் வெளியே வந்தும் இருக்கக்கூடிய கடவுள் இருந்து கொண்டு நமக்கு இவ்வளவு காரியங்களையும் ஆட்டி வைக்கிறார். அப்படி அக்கடவுக்குள் அவர் போகாமலும் வராமலுமிருப்பாரானால் இவனுடைய திரேகமானது உடனே சீவித்துப்போய் விடுகிறது. அவனைப் பார்த்து, கடவுக்குள் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருக்கக் கூடிய ஐந்து அறிவுள்ள ஜீவன்கள் அதைப் பகுத்தறிந்து அவனுக்கு ஜீவன் போய்விட்டதென்று அவரவர்கள் மதக் கொள்கைக்குத் தகுந்தவாறு அந்த உபயோகம் இல்லாத கட்டையை எவ்வளவோ மேன்மைப்படுத்தி அடக்கம் செய்கிறார்கள்.

இன்னும் அதிலொரு சிறு விஷயமிருக்கிறது. உலகத்தில் ஐந்தறிவுள்ள மானிட ஜென்மத்திற்கு மட்டும் கடவுள் என்ற பதமிருக்கிறது. ஓர் அறிவுள்ள ஜீவராசிகளுக்கு கடவுள் என்ற பகுத்தறிவைக் கொண்ட பதம் கிடையாது. அவைகள் இறந்தாலும் அந்த ஜீவராசிகளின் சுற்றத்தாருக்குக் கவலை கிடையாது. இந்த ஐந்தறிவுள்ள மானிட ஜென்மமொன்றுக்கே பகுத்தறிவான 6-வது அறிவையும் கடவுள் கொடுத்து, நன்மை, தீமை என்ற இரண்டு விதமானவைகளையும் ஏற்படுத்தி, அதிலிருந்து அவன் நன்மை செய்தால் ஒவ்வொரு படியாய் மேலேறி, அக்கடவுலுடன் நேசிக்கிறான். தீமை செய்துகொண்டு வருகிறவன் படிக்குப்படி பாவ கன்மங்களில் ஈடுபட்டு, அவன் மறு ஜனனங்களில் கீழ்க்கடையான ஜீவராசிகளின் கருவில் உற்பத்தி

யாகி அதின் உயிர் நீங்கும்வரை பலவித துன்ப சாகரத்தில் அழுந்தி மாறி வருகிறான்.

ராணி.—"என் குருவே, தாங்கள் இதுவரையில் சொல்லி வந்த ஜாதி மதங்களைக் கவனிக்கும்போது உலகத்தி லுள்ள ஜீவராசிகள் எல்லோருக்கும் ஒரே கடவுளென்று என் மனம் நிச்சயித்து விட்டது. ஆனால், விவசாயிகள் நடந்து கொள்ளும் விதமும் சொல்லிவிட்டீர்கள். பணக் காரர்கள் எவ்விதம் நடந்து கொள்வது. அதன் விபரத்தை யும் சொல்ல வேண்டும்."

குரு:—"அம்மா, தாங்கள் கேட்டது சரியே. பணத்தை சம்பாதித்தவர்களைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். பணம் வைத்திருந்தாலும் அதைக்கொண்டு வியாபாரம் அல்லது தொழில் செய்து அதில் வரக்கூடிய லாபத்தைச் சிலவு செய்ய வேண்டும். தன்னிடம் அதிகப் பணமிருக் கிறதென்று எவ்விதமான தொழிலும் செய்யாமல் சிலவு செய்வானாகில் அவன் ஆயுள்வரை போதாமல் கொஞ்ச காலமாவது கஷ்டப்படுவான். அப்படிக் கஷ்டம் வரும்போது தான் அவனுக்கு ஞாபகம் வரும். இது நிற்க உலகத்தில் புதிதாய்ப் பணம் சம்பாதித்தவுடன் நம்மைக் காட்டிலும் யார் பணத்தை வைத்திருக்கிறார்களென்று மனதில் நினைத்துக் கொண்டு பிறத்தியாரையும், இனஜன பந்துக்களையும் மதியா மலும் கையில் பணமிருக்கும்வரை தாறுமாறாய் சிலவுசெய்து விட்டு அவர்கள் கூடிய சீக்கிரம் கஷ்டப்படுவார்கள்."

மேற்சொல்லியபடி செய்யாமல் பணம் சேகரித்தவர் கள் தன்னிடம் பணம் வந்துவிட்டதென்று கர்வம் கொள் ளாமல் தன்னால் செய்யக்கூடிய தொழிலோ வியாபாரத் தையோ செய்து, அதில் தன்னிடம் வேலை செய்யக்கூடிய கூலியாட்களை தன்னுடைய குழந்தைகள் மாதிரி பாவித்து

அவர்கள் செய்யக்கூடிய வேலைகளைக் கவனித்து, வேலைக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுத்து, அவர்களுடைய மனம் எக்காரணத்தைக் கொண்டும் வருத்தமடையாமல் வேலை வாங்க வேண்டியது. அவ்வேலை செய்யக் கூடியவர்களும், நமக்கு அவர் கொடுக்கும் கூலி பாதகமில்லை என்று நினைத்து நடந்து கொள்ளவேண்டியது. அந்த முதலாளியும் ஒருக்காலமும் கெட்டுப்போகக் காரணமில்லை. ஏனென்றால், அக்கூலியாட்கள் சந்தோஷத்துடன் செய்யக்கூடிய வேலை ஒரு பங்குக்கு $1\frac{1}{2}$ பங்கு செய்வதால், அந்த முதலாளிக்கு லாபமும் ஒரு பங்குக்கு $1\frac{1}{2}$ பங்கு கிடைத்து, அதிலிருந்து அவன் முன்னேற்றத்திற்கு வந்து விடுகிறான். அதை விட்டுவிட்டு கூலியாட்கள் சம்பளத்தையும் குறைத்து, வேலை வாங்கும்போது அவர்களை கடு கடுத்துப் பேசியும், அவர்கள் மனது நோகச்செய்வதால் அக்கூலியாட்கள் முதலாளி நேரில் இருக்கும்வரை சுறுசுறுப்புடன் வேலை செய்தும், அவர் சென்றவுடன் சாவகாசமாய் செய்தும், எப்போது பொழுது மறையுமென்று எதிர்பார்த்துக் கூலி வாங்கிக்கொண்டு போவோமென்ற எண்ணத்துடன் செய்யக் கூடிய வேலையானது முதலாளி கொடுத்த கூலிக்குக்கூட வேலை செய்திருக்கமாட்டார்கள். அப்படி செய்து வருவதால் அம் முதலாளிக்கும் நஷ்டம் ஏற்பட்டு அதிலிருந்து அவன் கஷ்டப்படுவதுமுண்டு. ஆனபடியால் பணம் சம்பாதித்தவர்கள் முதலில் சொல்லியபடி நடந்துகொள்ளவேண்டியது.

ராணி:—"குருவே, இவ்வுலகத்தில் மானிடர்கள் நோயில்லாதிருக்க எப்படி நடந்து கொள்ளவேண்டும்."

குரு:—"அம்மையே, தாங்கள் கேட்டது சரி, இவ்வுலகத்திலுள்ள ஆண்களும், பெண்களும் 100-க்கு 95-பேர் நோயால் கஷ்டப்படுகிறார்கள். அக்கிரமமே நஞ்சு என்று நம்

முன்னோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். நம் அனுபவத்திலும் பார்த்துக் கொண்டே வருகிறோம். நாம் சாப்பிடக்கூடிய ஆகாரமே கொஞ்சம் அதிகரித்து விட்டால் அது நோயை உண்டு பண்ணுகிறது. அப்படியிருக்க தற்காலம் நிதானம் என்பது கிடையாது. ஒரு சதிபதிக்கு கெர்ப்பம் நின்று விட்டதென்று தெரிந்தும் அவர்கள் அளவுக்கு மிஞ்சி சேர்க்கை ஏற்பட்டு அதில் குழந்தைகள் பிறந்தால் கெர்ப்பச் சூடு அதிகரித்து, திடகாத்திரமாயிருக்கும்போது திரேகத்தில் எந்தப் பாகத்திலாவது ஒரு பாகத்தில் கொப்பளங்கள் வெடித்து ஆறுவதும், மறுபடி வெடித்துப் புண்ணுகுவதும் அக்குழந்தையை நீத்திக்கொண்டேவரும். ஆணுக்கு 15-வயதிலும் பெண்ணுக்கு10-வயதிலும் திருமணம்செய்து அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பிஞ்சு விதையில் முளைத்த மரம் காய்க்காமலும், சீக்கிரம் கெட்டுப் போகிற தன்மைபோல, சிறியோரிட்ட வெள்ளாண்மை வீடு வந்து சேராது என்ற முதியோர் வாக்கியப்படி அக்குழந்தை ரூபத்தைக் காண்பித்து நோய்வாய்ப்பட்டு இறக்க, அக்குடும்பத்துக்கே பெரும் கஷ்ட நஷ்டத்தை உண்டு பண்ணி விடுகிறது. அந்த வியாகூலமே வியாதிக்குக் காரணமாகி இன்னதினுல்தான் இந்த நோய் ஏற்பட்டிருக்கும் என்று வைத்தியருக்கும் தெரியாமல், ஒன்றிருக்க மற்ருெரு மருந்தைக் கொடுத்து நோயை அதிகப்படுத்தி விட்டுப் போய் விடுகிறுன். அதன்பின் பல வைத்தியர்களிடம் மருந்து சாப்பிட்டு அதிலும் தீராமல் பலவகையிலும் கஷ்டப்பட்டு அவர்கள் இறக்கநேரிடுகிறது. இக்குடும்பம் நோயால் கெட்டதற்கு, பால்ய விவாஹமே காரணம். இப்பால்ய விவாஹம் செய்யும்போதிருந்த சந்தோஷத்திற்கு அளவே கிடையாது; அதற்குத் தகுந்த துக்கத்தை அனுபவிக்கிறுர்கள்.”

நிற்க,விந்தை விட்டான் நொந்து கெட்டான் என்ற முதியோர் வாக்குப்படி தன்னுடைய விந்தை அதிகமாய் சிலவு செய்யக்கூடியவனுக்கு வரும் வியாதிகளை யாராலும் தீர்க்க முடியாது. ஏனென்றால் அந்த விந்து சுமார் 120 சொட்டு ரத்தத்திலிருந்து ஒரு சொட்டு உற்பத்தியாகிறது. அப்படியிருக்க தன் தேகம் பூரவும் விந்தாயிருக்கிறதென்று கண் மூடித்தனமாய் லீலைகள் செய்யும்போது விந்து பூரவும் வெளியேறி, அதற்குமேல் விந்து இருக்குமிடமும் ரத்தமாய் விடுகிறது. மறுபடி உற்பத்தியாகும் விந்து இருப்பதற்கு இடமின்றி இவன் நீர் விடும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறி வந்து விடுவதால் பலக்குறைவு ஏற்பட்டு அந்நோயே அவன் ஆயுளையும் குறைத்து, கூடிய சீக்கிரம் மரணத்துக்காளாகி விடுகிறான்.

நாள் 2, வாரம் 2, மாதம் 2, வருஷம் 2 என்ற முன்னோர்கள் வாக்கின்படி ஒரு மனிதன் நோய் அணுகாமலிருக்க, நாள் 2, காலை மாலை மலஜலம் கழிக்கவும், வாரம் 2 ஒரு வாரத்தில் இருமுறை எண்ணை ஸ்நானம் செய்யவும், மாதம் 2, ஒரு மாதத்தில் இருமுறை 15 நாளுக்கொருதரம் போகமும், வருஷம் 2, வயற்றிலுள்ள அஜீரணங்களை சுத்தப்படுத்த 6 மாதத்திற்கொருமுறை பேதி மருந்து சாப்பிட்டும் இதன்படி நடப்பதுடன் நித்திரை பங்கம் செய்யாமலும் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஒரு நாள் இரவு விழிப்பது ஆறு மாதம் ஒழுங்காக நித்திரை செய்து வந்த பலனை கெடுப்பதுடன் நோயும் உண்டாகிறது. ஆனபடியால் மேலே சொல்லிவந்த நாலு விதமான காரியங்களையும் கவனித்து நடந்து வருவாராகில் நோயினால் கஷ்டப்படமாட்டார்கள்.

## குடியினால் விளையும் கேடு.

ராணி:—"குருவே, இவ்வுலகத்தில் மது என்ற குடியின் விபரத்தைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா, அதையும் சொல்கிறேன் கேளுங்கள். குடி என்பது இவ்வுலகத்தில் பாதிக்குமேலிருக்கிறது. அக்குடியினால் கெட்டவர்கள் அநேகம் கோடி. ஒருவன் கள்ளோ, சாராயமோ அல்லது மேல்நாட்டு பிராந்தி வகையறாவோ கணக்குப்படி சாப்பிடுவதால் அந்த வஸ்துவானது அவன் திரேகத்தில்ப்போய் ஜீரண சக்தியாகும் வரை அவன் ஒரு விதமான உணர்ச்சியுடன் அவன் ஒரு பங்கும், அக்குடி ஒரு பங்குமாக இரண்டாள் பலம் கிடைக்கிறது. அதன்பின் ஜீரணமாகிவிட்டால், அவனுடைய பலம் முன்னிருந்ததிலும் பாதியாகிவிடுகிறது. அப்படி அவனுக்கு பலம் பாதியானவுடன் மறுபடியும் குடிக்க ஆரம்பிக்கிறான். அப்படி அவன் தினம்தினம் குடிக்கும்போது அவனுடைய எண்ணமெல்லாம் அக்குடியிலேயேயிருப்பதால் அவன் ஒரு வேலையும் செய்ய முடியாமலும், தன்னிடமுள்ள முன்னோர்கள் தேடிவைத்திருந்த பொருள்கள் பூராவையும் கொஞ்சம் கொஞ்சமாய் விற்றுக் குடித்து விட்டு கடைசியில் அவன் படும் கஷ்டத்திற்கு அளவே கிடையாது."

இன்னும் குடியினால் வரும் பெருங் கொலை பாதகங்களையும் சொல்லுகிறேன். சேரமான் என்ற நகரில் ராமலிங்கம் செட்டியார் என்ற லக்ஷாதிபதி இருந்தார். அந்த பிரபுக்கு ஏற்பட்ட நோயைத் தீர்க்க வந்திருந்த வைத்தியர் கையைப் பிடித்துப் பார்த்து, "உங்களுக்கு தற்சமயம் ஏற்பட்டிருக்கக்கூடிய உஷ்ணம்; அதிகக் குடியினால் உண்டாகியிருக்குமோ என்றார்." "ஆம் ஐயா, இந்த உஷ்ணக் கடுப்பானது சாராயத்தை அளவுக்கு மிஞ்சி குடித்ததினால் தானென்று எனக்குத் தெரிகிறது." அது கேட்ட வைத்தியரும், "என்னிடம் தாழக பஸ்பம் இருக்கிறது. அதில் 3 வேளை மருந்து தருகிறேன். அதைச் சாப்பிட்டால் நின்றுவிடும் என்று

கொஞ்சம் தேன் கேட்டார்." உடனே தன் வேலைக்காரனான சுப்பனைக் கூப்பிட்டு 3-பைசாவுக்கு தேன் வாங்கிவரச் சொன்னார். அவன் தேன் வாங்கப் போகும்போது அவ் வீட்டிலுள்ள நாய் ஒன்றும் அவன்கூட ஓடி, அக்கடையில் அவனும் நாயுமாக இரண்டு பேர்களும் போய் நின்று "3-பைசாவுக்கு தேன் இப்பாத்திரத்தில் ஊத்துங்கள் என்றான்." அது கேட்ட செட்டியாரும் 3-பைசாவை வாங்கி கல்லாவில் போட்டுக் கொண்டு தான் கடையிலிருந்த தேன் சீசாவை எடுத்து அவன் கொண்டு வந்த பாத்திரத் தில் விட்டான். அதில் ஒரு சொட்டுத்தேன் கீழே விழ வும், அந்தத் தேனில் ஒரு ஈ உட்கார்ந்தது. அந்த ஈயை அக்கடையிலுள்ள பல்லி பிடிக்கப் பாய்ந்தது, அந்தப் பல்லி ஈயைப் பிடிக்க பாய்ந்த சமயம் கடைக்காரன் வளர்த்து வரும் பூனை அப்பல்லிமேல் பாய்ந்தது. பல்லிமேல் பூனை பாய்ந்து கொண்டிருக்கும்போது வெளியே நின்று கொண்டிருந்த நாயானது பூனையைப் பார்த்தவுடன் அதன்மேல் பாய்ந்து கௌவிக் கொண்டது. அதைக் கண்ட கடைக்காரன், நாம் அருமையாய் வளர்த்து வந்த பூனையை நாய் பிடித்துக் கொண்டதே என்று தன் பக்கத்திலிருந்த ரூல் தடியை எடுத்து அந்த நாயின் தலையில் ஓங்கி ஒரு அடி கொடுத்தான். அந்த அடியினால் நாயின் தலையில் ரத்தம் பீறிட்டு ஓடிய தைக்கண்ட சுப்பன் நம் எஜமான் அருமையாய் வளர்க்கக் கூடிய நாயை இப்படி அடித்தானே என்று கோபம் கொண்டு அவன் கையிலிருந்த ரூல் தடியைப் பிடுங்கி செட்டியாரை அடிக்க, அது சமயம் பக்கத்துக் கடைக்காரர்கள் வந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு சுப்பனை அடிக்க, அடிபட்டுக் கொண்டிருக்கிற சுப்பனுடைய சொந்தக்காரர் கள் தெரிந்துவந்து கடைக்காரர்களை அடிக்க, அங்கு பெரிய

கலகம் ஏற்பட்டு கடைக்காரர்கள் பக்கம் 15-பேர்களுக்கும் தேன் வாங்க வந்த சுப்பன் பக்கம் 15-பேர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டு இரண்டு கக்ஷிக்காரர்களும் உடனே ஆஸ்பத்திரிக்குப்போய் காயங்களுக்கு டாக்டர் சர்டிபிக்கேட் வாங்கி, அந்த சர்டிபிக்கேட்டை வைத்து இரு கக்ஷிக்காரர்களும் பிருதுகொடுக்க, பிருதை அவ்வூர் கலெக்டர் வாங்கிக்கொண்டு வாய்தா போட்டு விசாரணை செய்ய ஆரம்பித்தார். விசாரணை செய்யும்போது அவர்களுடைய வாக்குமூலங்கள் எல்லாம் முன் நடந்தவைகளையே சொன்னார்கள்.

இக்கலகத்தின் முதல் காரணம் ஒரு சொட்டு தேனால்த்தான் வந்திருக்கிறது. அந்தத் தேனோ மதுவைச் சேர்ந்தது. இக் கேசானது மதுவினால் ஏற்பட்டபடியால் கேசை தள்ளுபடி செய்வதுடன் இரண்டு கக்ஷிக்காரர்களும் ஒரே ஜாதியாயிருப்பதாலும் ராஜியாய்ப் போகவேண்டியதென்று கலெக்டர் சொல்ல, எல்லோரும் ஒத்துக்கொண்டு சந்தோஷமாய் அவரவர் இல்லம் சேர்ந்தார்கள்.

ராணி:—"என் குருவே, தாங்கள் இப்போது சொல்லி வந்த மதுவினால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்து கொண்டேன். ஆனால் தேனை மது என்று எப்படிச் சொல்வது. பால் குடிக்கும் குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை உபயோகம் செய்யக்கூடிய மதுரமான தேனை தாங்கள் கள்ளுடனும் சாராயத்துடனும் மேல்நாட்டுப் பிராந்தியுடனும் ஒப்பிட்டுச் சொல்வதின் காரணம் தெரியவில்லையே. அதன் விபரத்தையும் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா, தாங்கள் கேட்டது சரியே. அத்தேனுடைய உற்பத்தியும், கள், சாராயம், பிராந்தி இவைகளின் உற்பத்தியும் இன்னும் எந்த விதமான போதை வஸ்துக்

களும், செடி, கொடி, மரமாகிய தாவர வஸ்துவின் புஷ்பங்களிலிருந்துதான் கிடைக்கிறது. மேற்சொல்லிய மதுவின் உற்பத்தி விபரங்களைச் சொல்லுகிறேன். தேன் என்ற மது உற்பத்தியானது செடி, கொடி மரங்களில் பூக்கக்கூடிய பூவிலுள்ள தேன் சத்தை தெரிந்தெடுக்கக் கூடிய தேன் ஈக்கள் ஒவ்வொரு பூவிலும்போய் உட்கார்ந்து அப்பூவிலுள்ள தேனை தன் வாயில் எடுத்துவந்து தான் சாப்பிட்டது போக பாக்கியிருப்பதை வாசம் செய்யுமிடத்தில் சேகரித்து வைக்கிறது. அப்படி பலகோடி தேன் ஈக்கள்கூடி சேகரித்து வைத்த தேன் ராட்டை மனிதர்கள் எடுத்துப் பிழிந்து அதிலிருந்து வரக்கூடிய தேனை விற்பனை செய்கிறார்கள். அதையே நாமும் வாங்கி உபயோகிக்கிறோம்.''

கள் என்ற மது உற்பத்தியானது தென்னை மரத்திலே தேங்காய்க்கென்று விடக்கூடிய பூவை முனையில் சீவி மண் கலயத்தைக் கட்டி விட்டால், அந்தப் பூ தேங்காய்க்கு என்று வந்த சத்தை வெண்மையான தண்ணீராய் அக்கலயத்தில் வடித்து விடுகிறது. அக்கலயத்தில் வந்து சேர்ந்த வெண்மையான நீரை எடுத்து கள் என்று விற்பனை செய்கிறார்கள். மனிதர்களுடைய எவ்விதமான உஷ்ணத்தையும், அளவுப்படி சாப்பிட தீர்ந்துவிடும், அளவுக்கு மீறி சாப்பிட்டால் அளவுக்குமிஞ்சிக் கஷ்டப்படுத்தும்.

சாராயம் என்ற மது உற்பத்தியானது பனை மரத்தில் நொங்கு காய்ப்பதற்காக விடப்பட்ட பூவை முனையில் சீவி அப்பூவின் முனையில் மண் கலயத்தைக் கட்டி விடுவதால் நொங்குக்கென்று வந்த சத்தை அக்கலயத்தில் வெண்மையாகவும், தித்திப்பாகவும் நீராய் வடித்து விடுகிறது. அந்த நீரை நாம் பதினியென்று சாப்பிடுகிறோம். அப்பதினியைக் காய்ச்சினால் அது கெட்டியாக கருப்பட்டியாகிவிடுகிறது.

அக் கருப்பட்டியையும் நாம் வாங்கி உபயோகிக்கிறோம். அந்தக் கருப்பட்டியையும் இன்னும் சில மரத்துப் பட்டைகளையும் சேர்த்துக் காய்ச்சினால் அதுவே சாருயமாகிறது. அச் சாருயம் திரேகத்திலுள்ள குளிர்ச்சியை நீக்கி சூடு உண்டாக்குகிறது. அச்சாருயமானது ஒருவர் உடலுக்குள் போனவுடன் அச்சூட்டினால் அவன் சாப்பிடும் ஆகாரங்களை உடனே ஜீரண சக்தியாக்கி திரேகம் பூருவும் கொடுக்கிறபடியால் அதை சிலர் உபயோகித்து வருகிறார்கள். அப்படி அவன் அனுதினமும் சாப்பிட்டால் அவன் குடலை சாருயச் சூடானது வேகவைத்து கஷ்டப்படுத்தி, கொஞ்ச காலத்தில் மரணமடையச் செய்கிறது.

பிருந்தி என்ற மது உற்பத்தியானது நம் நாட்டில் விளைவாகக்கூடிய ஏலக்காயிலும், திராக்ஷைப் பழத்திலும் இன்னும் அநேக பூக்களினுடைய விதைகளிலுமிருக்கிற சத்தைக் கொண்டு எடுக்கப்படுகிறது. அந்த பிருந்தியை உயிர்த்தோழன் என்று அன்னிய நாட்டார்கள் சொல்கிறார்கள். ஏனென்றால் அன்னிய நாடுகளில் சூரியனுடைய வெப்பம் அதிகமில்லாததால் அத்தேசத்தில் வாசம் செய்யும் மனிதர்களுக்குக் குளிர்ச்சி அதிகம் ஏற்பட சாப்பிடக்கூடிய ஆகாரம் சரியாய் ஜீரண சக்தியாகாமல் குறைவதால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆனது பற்றியே அக் குளிர் தேசத்திலிருப்பவர்கள் ஓர் அளவு வைத்து ஆகாரம் சாப்பிடும் நேரங்களிலெல்லாம் அப்பிருந்தியை முதலில் சாப்பிட்டு அதற்குமேல் ஆகாரம் சாப்பிட உடனே ஜீரணித்து அவர்கள் உடம்பு திடகாத்திரத்துடனும் நல்ல மூளைச் சத்துடனும் நோய் கிட்ட அணுகாமலும் வாழ்ந்து வருகிறார்கள். அதன் காரணம் அவர்கள் அளவுப்படி சாப்பிடுவதே.

அதை விட்டுவிட்டு, நம் நாட்டிலோ, கையில் பணம் இருந்த நேரத்திலெல்லாம் கள்ளோ, சாருயமோ, பிராந்தியோ முதலான லாகிரி வஸ்துக்களை அளவுக்கு மீறி வாங்கிக் குடித்துவிட அதற்குத் தகுந்த தீனி கொடுக்காமல் அந்த அக்கினியானது அவனுடைய திரேகத்திலுள்ள சத்துக்கள் பூருவையும் சாப்பிட்டு விடுகிறது. அப்போது அவனுடைய அறிவு மயங்கி உணர்ச்சி கெட்டவுடன் கண்ட படியெல்லாம் பேச ஆரம்பிக்கிருன். பக்கத்திலுள்ள மனிதர்கள் அவனை அவமதிக்கிருர்கள். மதுவின் வீர் அடங்கியவுடன் அவனுக்கு சுய அறிவு வந்து விடுகிறது. அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகிவிடும். ஆகையால் இதைப் போன்ற கொடிய பழக்க வழக்கமான மதுவை அருந்தி ஜீவனம் செய்வது கூடாது.

## நல்லது பொல்லது.

ராணி:—"குருவே என் மனதில் இன்னும் ஒரு சந்தேகமிருக்கிறது. அதாவது இவ்வுலகத்தில் நல்லது பொல்லது என்பது எப்படிக்கண்டு அறிந்துகொள்வது. அதன் விபரத்தைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்."

குரு:—"அம்மா இவ்வுலகத்தில் நல்லதைக் கெட்டதும், கெட்டதை நல்லதும் மூடிக்கொண்டிருக்கிறது. மானிடர்களுக்கு அதைப் பகுத்தறியும் தன்மை இருக்கிறது; அதன் விபரத்தையும் சொல்கிறேன். உலகத்தில் உற்பத்தியாகும் பழவர்க்கங்களை எடுத்துக்கொள்வோம். அதில் வாழைப்பழத்தை கெட்டதென்று சொல்லமுடியுமோ, முடியாது. வாழைப்பழத்தில் மனிதர்களுக்கு உபயோகப்படுவது உள்பாகமே ஒழிய மேல் பாகத்தை உறித்து கீழே போட்டு விடுகிருர்கள். அத்தன்மை எப்படியென்ருல் நல்லது உள்ளேயும், கெட்டது

வெளியேயுமிருக்கிறது. மாம்பழத்தில் நல்லது வெளியே யும் கெட்டது என்ற அதன் விதையானது உள்ளேயுமிருக் கிறது. கொய்யாப் பழத்தை வாங்கியவுடன் அதில் கொஞ்சம் கூட கழிவில்லாமல் சாப்பிட்டு விடுகிறோம். ஆரஞ்சிப்பழத்தை மேல் தொலியை உறித்து கீழே போட்டுவிட்டு அச்சுலேயை வாயில்போட்டு நசுக்கி அதிலுள்ள ருசிகரமான ரசத்தைச் சாப்பிட்டுவிட்டு அதிலுள்ள விதைகளையும் சக்கையையும் கீழே துப்பிவிடுகிறோம். அதன் தன்மைபோல் காய் வகையி லும் தேங்காயை உடைத்து வெளியிலிருக்கிற தோட்டை எரிந்துவிட்டு உள்ளேயிருக்கும் பருப்பை உபயோகிக்கிறோம். கத்திரிக்காயில் ஒரு பாகமாகிய காம்பை அறுத்து கீழே போட்டுவிட்டு அக்காயை பல துண்டுகளாகச் செய்து சமைத்து சாப்பிடுகிறார்கள்.''

மேற் சொல்லிய கனி வர்க்கங்களையும் காய் வர்க்கங்களை யும் எப்படி நல்லதைக் கெட்டது கவர்ந்துகொண்டும், கெட் டதை நல்லது கவர்ந்துகொண்டும் இருக்கிறதோ, அத்தன் மைபோல் உலகத்தில் பொல்லாததாய்த் தெரியும் வஸ்துவின் குணம் நல்லதாயும், நல்லதாய்த் தெரியும் வஸ்துவின் குணம் கெட்டதாயுயிருக்கும். இதை அனுசரித்தே நம் முன்னோர் கள் சொல்லியதின்படி "கொம்பு உள்ளதற்கு ஐந்து முளம், குதிரைக்கு பத்து முளம், வெம்புகரிக்கு ஆயிரம்தான் வேண்டுமே, வம்புசெறி மானிடர், தீங்கினர் கண்ணுக்குத் தெரியாமல் வசிப்பதே உத்தமம்'' என்றதின்படி கொம்புள்ள மிருகங்களைக்கண்டால் ஐந்துமுளம் தள்ளி நடந்தால் நல்லது. கால் நீண்ட குதிரையைக் கண்டால் பத்து முளம் தள்ளி நடந்தால் நல்லது. யானையைக் கண்டால் 1000 முளம் தள்ளி நடப்பதே நல்லது. அதிலும் வம்பே குடிகொண்ட தீய மானிடர்கள் கண்ணில் தென்படாமலே வாசம்செய்வது

நல்லதாகையால் ஒருவன் ஒருவனைப் பார்த்தவுடனே அவனுடைய தன்மை இப்படிப்பட்டது என்பது தெரியும். அதிலும் தெறியாவிட்டால் அவனுடன் சில வார்த்தைகளைப் பேசினால் தெரியும். அதிலும் தெரியாவிட்டால் அவனோடு ஒரு வாரம் நேசித்திருந்தால் தெளிவாய்த் தெரிந்துவிடும். அப்படித் தெரிந்தவுடன் மேற்சொல்லிய காய்கனிகளை உபயோகிக்கிற மாதிரி நாம் நேசித்த மனிதனிடம் எந்த வகையில் நல்லதிருக்கிறதென்று தெரிந்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்வதே மேலானது.

## பழக்க வழக்கங்கள்.

ராணி:—“இவ்வுலகத்தில் மானிடர்கள் தாங்கள் முன் சொல்லி வந்த காய்கனிகளையும், இன்னும் உயிருள்ள பிராணிகளையும் கொன்று அருந்துகிறார்கள். சில மனிதர்கள் அவைகளைக் கொன்று தின்பதனால் பாவமென்றும் சொல்கிறார்கள். ஆனதால் எதைதைச் சாப்பிடுவது பாவம், பாவமில்லை என்பதைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்.”

குரு:—“அம்மா, தாங்கள் கேட்டது சரியே. இவ்வுலகத்தில் ஜெனித்த எல்லா ஜென்மங்களிலும் மேலானது, பஞ்ச அறிவுடன் பகுத்தறிவு ஒன்றுமாக ஆறு அறிவுகளைக் கொண்டு நல்லது பொல்லது என்பதைத் தெரிந்து நடப்பது மானிட ஜென்மம் ஒன்றே. ஒருவன் பிறந்த இடத்தில் என்னநடக்கிறதோ அதே அவன் வழக்கத்திற்கு வந்துவிடுகிறது. அப்படி பழக்க வழக்கத்திற்கு வந்தவுடன் ந்தப் பழக்கமே அவனுக்கு மேலாகத் தெரிந்து அதையே அவன் கடைசி வரையில் சாதித்து விடுகிறான். தமிழ் தேசத்தில் பிறந்த ஒருவனுக்கு அவனுடைய தாயும் தகப்பனும் பேசக்கூடிய தமிழ்பாஷையே பேசமுடிகிறது. தெலுங்குதேசத்தில்

பிறந்தவனுக்கு அவனுடைய தாயும் தகப்பனும் பேசக்கூடிய தெலுங்கு பாஷையே பேச முடிகிறது. அத்தன்மைபோல் அவன் பிறந்து வளர்ந்த இடத்தில் தாய் தகப்பன் என்ன சாப்பிடுகிறார்களோ அதையே அக் குழந்தையிலிருந்து அருந்தி பழகி வருவதால் அதே பழக்கமாகிவிடுகிறது. நிற்க இவ்வுலகத்தில் படைக்கப்பட்டவைகள் பூருவும் மானிடர்களுக்கே. ஆனதால் உயிருள்ள பிராணிகளையும், காய் கறிகளையும் அவரவர்கள் அறிவுக்கு எட்டியவரையில் எதெது வழக்கத்தைப் பொறுத்ததோ அவைகளை அவர்கள் சாப்பிடுவதால் அதில் பாவமென்று சொல்ல முடியாது."

அது எப்படியெனில், ஒரு குளக்கரையில் சென்று கொண்டிருந்த சுவாமியார் அக்குளத்தில் பறவர் ஜாதியைச் சேர்ந்த கந்தன் மீன் பிடிக்கிற தூண்டியைக்கொண்டு அக் குளத்திலுள்ள மீன்களைப் பிடித்து பெட்டியில் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து, இந்தப் பாவங்கள் இவனை விட்டு எப்போது போகும் என்று மனதில் எண்ணி, பறவா,"நீ எப்போது கரையேறப்போகிறாய்!" என்றுகேட்க, அதைக்கேட்ட பறவனும் சாமியாரைப் பார்த்து "ஐயா நான் கொண்டு வந்த பெட்டி நிறைந்தவுடன் கரையேறுவேன்," என்று சொன்னதைக் கேட்டு, ஓகோ! நாம் எதைக் கேட்க அவன் எதைச் சொல்கிறான் என்று மனதில் நினைத்துக் கொண்டு, இவனுக்கு நாம் என்ன சொன்னாலும் ஏறாது என்று போய்விட்டார். அத்தன்மையைப் போலுலகத்தில் அவரவர்கள் பிறவியிலிருந்து அவரவர்களுக்கு எது வழக்கமோ அதே மேலானது. ஆகையால் அவரவர்கள் செய்யக்கூடிய குற்றம் அவரவர்களுக்குத் தெரியாது. ஒருவன் ஒரு குற்றம் செய்வதை மற்றவன் அறிந்து சொன்னாலொழிய தன் குற்றம் தனக்குத் தெரி

யாது. தன் குற்றத்தைத் தான் அறியக் கூடியவன் மறுபடி குற்றம் செய்யப் பயப்படுவான். அவன் குற்றம் செய்யாமல் ஒழுங்கான முறையில் நடந்தால் படிப்படியாய் மேலேறி நல்லது பொல்லதை அவன் பகுத்தறிந்து குரு என்ற தன்மைக்கு வந்து விடுகிறுன்.

ஆகையால் நாம் சாப்பிடக்கூடிய ஆகாரத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்கும் ஜீவ சக்தி இருக்கிறது. அது எப்படியெனில் நாம் சாப்பிடக்கூடிய முதல் ஆகாரமாகிய நெல் அரிசியை எடுத்துக் கொள்வோம்; அந்த அரிசியானது நெல்லிலிருந்து வரப்பட்டது. அந்தநெல்லை பூமியில்போட்டு தண்ணீர் விட்டால் அது முளைக்கக் கூடிய தாவர ஜீவசக்தியில் ஒன்றுகி விடுகிறது. கத்திரிக்காயை யெடுத்துக்கொள்வோம்; அக்காயும் ஒரு தாவர ஜீவசக்திகளில் காய்க்கப்பட்டிருப்பதை நாம் பறித்துக் கரி சமைத்துச் சாப்பிட வேண்டியதிருக்கிறது. சிலர் நீரில் நீந்திக் கொண்டிருக்கிற மீனைப் பிடித்து அதை அறுத்து கரி சமைத்துச் சாப்பிடுகிறுர்கள். சிலர் ஆடு, மாடு, பன்றி, நரி என்ற மிருக ஜாதியையும் கொன்று அதின் சாரமான மாமிசத்தைத் தின்று வருகிறுர்கள். சிலர் புரு, கோழி, வாத்து என்ற பறவைகளையும் அறுத்து கரி சமைத்துச் சாப்பிடுகிறுர்கள். சிலர் அரக்கீரை, தண்டங்கீரை, அகத்திக் கீரை என்ற கீரைவகைகளையும் கரிசமைத்துச் சாப்பிடுகிறுர்கள். ஆனுல் உலகத்திலுள்ள மனிதர்கள் பூரூவும் எந்தவகையில் எடுத்துக் கொண்டாலும் அந்த வகையில் அததன் ஜீவனைக் கொன்று சமைத்து சாப்பிட்டாலொழிய மற்ற வகையில் இந்த மானிட ஜீவன் உயிர் பிழைக்க வழியில்லை. ஆனபடியால் அவரவர்கள் பழக்க வழக்கத்தின்படி எதைச் சாப்பிட்டாலும் பாவம் கிடையாது.

## ஞான மார்க்கம்.

ராணி:—"குருவே, தாங்கள் சொல்லி வந்ததைப் பார்க்கும்போது நாம் சாப்பிடக் கூடிய ஆகாரத்தில் ஜீவன் இருப்பதாகத் தெரிகிறது. பல கோடி ஜீவராசிகளைக் கொன்று தின்று ஜீவித்திருப்பதைப் பார்க்கிலும் வேறே வழி ஏதாவதிருக்கிறதா, அதையும் பகரவேண்டும்."

குரு:—"அம்மையே, தாங்கள் கேட்டது சரி. அதற்கும் வழியிருக்கிறது. இவ்வுலகத்திலுள்ள மானிட ஜீவன்களெல்லாம் ஒரு துளி விந்தில் உற்பத்தியாகிறது. அப்படி ஒரு துளி விந்துக்கு உயிரும், உடலும், அறிவும் கொடுத்த பரமாத்மாவாகிய கடவுள் உலகத்திலுள்ள சர்வ ஜீவருசிகளுக்கும் பசி கண்டு அன்னம் சமர்ப்பித்தும், படைப்பது, காப்பது, அளிப்பது என்ற முத்தொழிலையும் புரிகின்ற மூர்த்தியை, ஒரு மனிதன் ஐந்தறிவுடன் பகுத்தறிவையும் அடக்கி, பெண், மண், பொன் என்ற மூவாசையையும் வெறுத்து தன்னை மறந்து ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு ஓ, பரம்பொருளே! உன்னை நேரில்ப் பார்த்து உன் அருள் வாக்குக் கிடைத்தால் மட்டும் எழுந்திருப்பேன், இல்லாவிட்டால் என் உயிர்போனாலும் இதைவிட்டு எழுந்திருப்பதில்லை என்ற எண்ணத்துடனிருக்கும்போது அவரே பலவிதமான வேஷங்களுடன் அவன் மனதை பல விதத்திலும் சோதிக்க ஆரம்பிக்கிறார். அப்படி சோதிப்பதில் அவன் எந்த வகையிலாவது ஒரு வகையில் சிக்கி அவன் கொண்ட உறுதியான எண்ணம் மாறிவிடுகிறது. அப்படி மாறாமல் ஒரே பிடிவாதமாக சாதித்து வருவானாகில், உடனே தன் சுயரூபத்தைக் காண்பித்து அவனுக்கு வேண்டிய வரத்தைக் கொடுத்து நீ இன்னும் கொஞ்ச காலத்திற்கு இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கு நல்வழிப்படும்படி சன்மார்க்க வழிகளைக் கற்பித்துக்

கொண்டிருப்பாய், அதன்பின் நான் உன்னை என்னிடம் அழைத்துக்கொள்கிறேனென்று வாக்குத்தத்தம் செய்து மறைந்து விடுகிறார். அப்படிப்பட்ட ஒருவனே இவ்வுலகத்தி லுள்ள ஒருவிதமான ஜீவராசிகளையும் அருந்தாமல், வாய்வு என்ற காற்றையே ஆகாரமாக்கிக்கொள்கிறான். மேற்சொல் லியபடி அமைவது அவன் பூர்வ ஜென்மத்தின் பலனே.''

ராணி:—"குருவே, தாங்கள் சொல்லிவந்தவைகளெல் லாம் என்மனம் கேட்டு ஆனந்தமடைகிறது. ஆனால் ஒரு மனிதன் மேற்சொல்லிவந்த ஞானம் அடைவதற்கு பூர்வ ஜென்மத்தின் பலனிருந்தால்தான் கிடைக்குமென்று சொல் லியதின் விபரத்தைத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்.''

குரு:—"அம்மா, ஒரு மனிதன் கருவாகி உருவாகி பையூரிலிருந்து உலகத்தில் பிறந்து தனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் காலையிலும் மாலையிலும் கடவுளைத் தியானித்தும் அவன் செய்யக்கூடிய நன்மையையும் தீமையையும் அன் றிரவு படுக்கும்போது நாம் இன்று என்னென்ன பாவ புண் யங்கள் செய்திருக்கிறோமென்று ஐந்தறிவுகளையும் விசா ரித்து, ஆறாவது அறிவாகிய பகுத்தறிவிடம் சொல்லி, அதில் நன்மை தீமை என்ற இரண்டையும் தன்னைப் பிறப்பிக்கப் பட்ட கடவுளாகிய பரப்பிர்ம சொரூபத்தினிடம் முறை யிட்டு தான் செய்த பாவ புண்ணியங்களை அக்கடவுளுக்கு அர்ப்பணம் செய்து தன் மனது பாவ காரியங்களைச் செய்யா மல் நற்காரியங்களிலேயே ஈடுபடும் பொருட்டு பரப்பிர்ம சொரூப கருணையெனும் சாவியை கொடுத்து திருப்பும்படி கடவுளிடம் மன்றாடி தியானித்து, நான் என்ன செய்தாலும் அவைகள் பூராவும் நீ இருந்து நடத்துகிறாயே ஒழிய என்னால் ஒரு துரும்பையாவது ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு

மாற்ற முடியாது. நீ என்னைப் பலவாறு கஷ்டப்படுத்தாமலும் உன் அருள் கிடைப்பதுடன், நான் பிறருக்குத் தீமை செய்தேனென்று செவியில் கேளாமல் அருள்புரிய வேண்டும் என்று தினம் தினம் இரவு படுக்கையில் ஜயனிக்குமிடத்தில் உட்கார்ந்து அவரை கைகூப்பி நித்திரை செய்யக்கூடிய ஒருவனுக்கு, அவன் செய்யக்கூடிய காரியங்களில் நன்மை தீமை தெரிந்து படிப்படியாய் கெட்ட காரியங்களை மறந்து, நல்ல காரியங்களையே செய்து கொண்டு வந்து இறந்தாலும் அவன் செய்த நல்ல காரியங்களை அனுபவித்த மனிதர்கள், ஓகோ, மனிதனைப்பிறந்தால் அவன் மாதிரியல்லவா பிறக்கவேண்டுமென்று அவன் இறந்தும் இறவாதவன் மாதிரியே உலகத்தில் பேசிக்கொள்வார்கள். அப்படியாரொருவன் மறு ஜென்மத்தில் பிறந்து அக்கடவுளின் எண்ணமே உருக் கொண்டு மேற்சொல்லிய ஆசை மூன்றையும் வெறுத்து ஒரே எண்ணமாய் அக்கடவுளை நேரில் கண்டு ஆனந்தம் அடைந்து விடுகிறான். நாமும் அவரைக் கடவுளென்று நாமதேயமிட்டு வணங்கிக்கொண்டு வருகிறோம்.''

ராணி:—''தாங்கள் முன் சொல்லி வந்ததில் கருவு, உருவம், பையூர் முதலியவைகள் எப்படிப் பட்டதென்பதையும் விபரமாய்ச் சொல்ல வேண்டும்.''

குரு:—''அம்மா, தாங்கள் கேட்டது மிகவும் உசிதமானது. கருவு என்பது ஒவ்வொரு ஆண்களிடமிருந்து தான் உற்பத்தியாகிறது. அவர்கள் சாப்பிடக் கூடிய ஆகாரத்தை திரேகத்திலுள்ள மிஷின் அறைத்து 50-பங்கு மலமாயும், 30-பங்கு நீராயும், 19-பங்கு ரத்தமாயும் 1-பங்கு விந்தாயும் பிரித்து மலத்தையும் நீரையும் வெளியே தள்ளி விட்டு இரத்தத்தை திரேகத்திலிருக்கக்கூடிய இடங்கள் பூராவுக்கும் கொடுத்து விட்டு விந்தை மட்டும் ஒரு பைக்குள்

கொண்டுபோய் சேர்த்துக் கொண்டேயிருக்கிறது. அப்படி 30-நாள் சேர்த்தால் அந்த விந்தானது ஒரு பெரும் மழைத் துளி அளவு சேருகிறது. அப்படி ஒரு மாதம் சேர்ந்த விந் தானது ஒரு பெண்ணின் கருக்குழியில் போய்ச் சேர்ந்த வுடன் அக்கருக் குழியானது மூடிக்கொண்டு அக் கருவை வளர்க்க ஆரம்பிக்கிறது. அந்த விந்தை 90-நாளைக்குள் ஒரு தேங்காய் பருமானம் பெரிதாக்கி 90-நாளைக்குமேல் 150-நாளைக்குள் அக்கருவை கைகால் முகம் உடலாகப் பிரித்து அவயவங்களாக்கி, 150-நாளுக்குமேல் 270-நாளுக்குள் அந்த அவயவங்களை கெட்டிப்படுத்தி 270-ம் நாள் அக் கருப்பையூரிலிருந்து பிறந்து விடுகிறது. அப்படியிருக்கத் தாங்கள் 10-மாதம் கருவுற்பத்தியென்று கேட்கலாம். அதன் விபரம் ஆண்வயிற்றில் விந்து 30-நாளும் பெண் வயிற்றில் 270-நாளுமாக 300-நாளாகிறது."

ராணி:—"குருவே, தாங்கள் இப்போது சொல்லி வந்த வைகளை என் மனமானது கேட்டு ஆனந்தத்திலும் ஆனந்தம் அடைந்து விட்டது. ஆனால் என் மனதில் எட்டாத கேள் விகள் ஏதாவதிருந்தால் அதையும் தாங்கள் சொல்லி அதற் கும் விடை யளிப்பீர்களென்று நினைக்கிறேன்."

குரு:—"தாங்கள் இதுவரையில் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் என்னால் கூடிய வரை பதிலளித்து வந்தேன். அப்படியிருக்க முன் அத்தியாயத்தில் சொல்லியபடி தன் குற்றம் தனக்குத் தெரியாது என்ற வாக்கியப்படி, தானே ஒன்றைச் சொல்லி அதற்கு விடையளிக்கக்கூடிய சக்தி ஒரு வனுக்கு ஏற்பட வேண்டுமென்றால் அவன் முன் பக்கத்தில் சொல்லியபடி மூன்று ஆசைகளையும் வெறுத்து தன்னை மறந்து அவன் அருள் பெற்ற ஒருவனுக்கே திரிகாலங்களி லும் நடக்கக் கூடிய விஷயங்களும் தானே கேள்வி சொல்லி

அக்கேள்விக்கு அர்த்தம் சொல்ல முடியுமே ஒழிய மூன்று ஆசைகளையும் கொண்ட என்றால் முடியாது.''

ராணி:—"குருவே, தாங்கள் இப்போது சொன்ன விஷயத்திலிருந்து நாம் எல்லோரும் மூன்று ஆசைகளைக் கொண்டவர்களாயிருக்கிறோம். அப்படி மூன்று ஆசைகளையும் வெறுத்து பரமாத்மாவைக் கண்ட புண்ணியவான்கள் நாமதேயத்தை கேட்க என் மனம் ஆசைப்படுகிறது.''

குரு:—"தாங்கள் கேட்டது சரியே. அதன்படி அவன் அருள் பெற்றவர்களின் நாமதேயத்தைச் சொல்கிறேன். வசிஷ்டர், விசுவாமித்திரர், வால்மீகி, குதம்பை சித்தர், அகப்பை சித்தர், ரோமரிஷி, கருவூரார், பட்டிணத்தடிகள், சிவவாக்யர், தாயுமானவர், அப்பர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர், ராமலிங்கர், முகமதுநபி, ஏசுநாதர், மார்க்கண்டேயர், அகத்தீஸ்வரர், அருணகிரி இன்னும் ஏராளமாகவுள்ள சித்தர்களும், சிவமதத்தையே நம்பி அவனருள்பெற்றவர்கள் 64 நாயன்மார்களும், விஷ்ணுமதத்தையே நம்பி அவனருள் பெற்றவர்களில் சுமார் 96 மகான்களும், முகமது மதத்தையே நம்பி அவனருள் பெற்றவர்கள் சுமார் 100 மகான்களும், கிருஸ்தவ மதத்தையே நம்பி அவனருள் பெற்றவர்கள் சுமார் 100 மகான்களும், இன்னும் ஏராளமான மகான்களும் அக்கடவுள் என்ற ஒருவனை மேற் சொல்லிய நாலு விதமான மதஸ்தர்களும் அவரவர்கள் மதத்திற்குத் தக்கபடி வணங்க அக்கடவுள் அவரவர்கள் எண்ணப்படி காக்ஷி கொடுத்து அவர்களை ஆதரித்து வருகிறார். மேற் சொல்லியவர்களுடைய சரித்திரங்களின் தனித்தனி புத்தகமிருக்கிறது. அதைத் தருகிறேன். வாசித்துப்பார்த்தால் ஒவ்வொருவருடைய பிறப்பும் வளர்ப்பும் அவர்கள் கடவுளைக் கண்ட விஷயங்களும் தெரியும்.''

ராணி.—"குருவே, தாங்கள் இப்போது சொல்லியதைக் கேட்டு என் மனம் ஆனந்த சித்தம் அடைந்தது. அதன்படி தாங்கள் என்னிடம் ஒவ்வொரு புத்தகங்களாய் கொடுத்து வாசிக்கச் சொல்லி அதன் விபரம் சொல்ல நான் என்னபாக்கியம் செய்தேனோ; இது எனக்குத்தெரியவில்லை. ஆனாலும் முன் ஜென்மத்தில் நான் செய்த பூஜாபல புண்ணிய வசத்தால் நான் தங்கள் பேரில் நினைத்த கெட்ட எண்ணத்தால் தங்களை நான் நேரில் கண்டு கேட்க, தாங்கள் இதுவரையில் சொல்லி வந்த உலகத்திலுள்ள எல்லாவிதமான சந்தேகங்களுக்கும் பதில் சொன்னதுடன் தாங்களே என் சமீபமாயிருந்து கடவுள் திருவடியடைந்தவர்களுடைய நாமதேயத்தைப் பேசிக்கொண்டிருக்க அருள் புரிந்த கடவுளை அல்லும் பகலும் நினைத்து ஆனந்தத்திலும் ஆனந்தம் அடைகிறேன்."

நாகப்பன்:—"என் கண்மணி இதுவரையில் சொல்லி வந்த பிரகாரம் ராணியம்மாளுக்கு குரு உபதேசித்ததை ஏட்டுப் பிரதியில் எழுதி வைத்திருந்தது. நானும் வாசித்துப் பார்த்து இப்போது நீ கேட்டதற்காகச் சொல்லவேண்டியது வந்தது பெண்ணே."

நாகம்மாள்:—"என் நாதா, அந்தராணியம்மாள் கடைசியாகக்கேட்ட கடவுளை நேரில் கண்டவர்களின் நாமதேயமான புத்தகங்களை தாங்களும் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தால் நானும் அந்த ராணியம்மாள் மாதிரி முன் ஜென்மத்தில் கொஞ்சம் புண்ணியம் செய்திருக்கமாட்டேனா."

நாகப்பன்:—'என் கண்மணியே அதற்கென்ன தடை. நீ அக்கடவுளை கண்ணுறப் பார்க்காவிட்டாலும் அவருடைய தொனி உன் காதிற்குக் கேட்டதிலிருந்து உனக்கு அவர்

அருள்கிடைத்து அதிலிருந்து உனக்குப்புத்திரபாக்கியங்கள் உண்டாகி, இப்போது லக்ஷ ரூபாய்க்கு அதிபதியாயும் ஒரு சிற்றரசனுடைய பதியைப்போலும் நீ இருப்பதுடன் உனக்கு எவ்வகையில் குறையிருக்கிறது. கடவுளின் பாதம் அடைந்தவர்களுடைய புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். உன்னை வாசிக்கச் சொல்லி அதன் அர்த்தங்களை என்னால் கூடியவரை சொல்லத் தயாராயிருக்கிறேன்.”

**நாகம்மாள்:**—“என் நாதா, அப்படியானால் இன்று முதல் அப்புத்தகங்கள் பூராவையும் படித்து அவனருள் பெறுவோம்.”

அன்று முதல் நாகப்பன் வாங்கிக் கொண்டுவந்த புத்தகத்தைபடித்து அதன்படி நடந்து இருவர்களும் அக்கடவுளை நேரில்கண்டு அவரருள்பெற்று மோக்ஷ வீட்டிற்குச்சென்று அங்கும் இருவர்களும் அக்கடவுள் நாமதேயத்தையே சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

காமராசர் பல்கலைக்க
அவ்வை
தி.க. சண்முகம் நூலக
நாடகத்துறை